
கூடிய சீக்கிரம் வெளிவருகிறது
ஜெமினியின்
சக்ரதாரி
நாகய்யா...புஷ்பவல்லி.
நாராயண ராவ். கமலம், நாகர்கோவில் மகாதேவன்.

ஆர்டிஸ்டிக் என்கிரேவிங், ஆப்டோன்,
லயன், ட்ரைகலர் பிளாக்குகள்,
ரப்பர் ஸ்டாம்புகள்

முதலியவைகளுக்கு:

86729

நம்பருக்கு டெலிபோன் செய்யுங்கள்


அல்லது

நேரிட ஒரு முறை விஜயம் செய்யுங்கள்

•

நியூடன் & கம்பெனி

80, வாலாஜா ரோடு, மவுண்டு ரோடு, மதராஸ்



உஷ்ணம், மழை அல்லது வெப்பம், மண் அல்லது எண்ணெய் இவற்றினால், ஏற்படும் கெடுதல்களிலிருந்து எந்த வஸ்துவையும் கண்ணாடி, பாதுகாக்கும். நிர்மல் கண்ணாடிகள் உணவு பதார்த்தங்கள், மருந்து சாமான்கள் கெடாமல் பாதுகாக்கவும் என்ஜினியரிங் பாகங்களை சரியாக கண்டு பிடிக்கவும் மற்ற உபயோகங்களுக்கும் சிறந்தவை.


•

மெஸர்ஸ்.

நிர்மல் கிளாஸ் ஒர்க்ஸ் லிமிடெட்.

ஒலவக்காடு தென் மலபார்

Invest in a



VENUS

-by the makers of the famous VENUS Pencils

* VENUS HOODED (as illustrated). The new hooded model exclusively designed & patented.

* VENUS PRESIDENT. A beautifully designed lever-filling pen with large 14 ct. gold nib.

* VENUS PRESIDENT Regular Model. A fine drop-filler type pen of modern design.

* VENUS PRESIDENT PEN & Pencil Set. Matching President lever pen and back-action propelling pencil.

The makers of famous VENUS pencils now meet your pen needs too. Ask your dealer to show you the full range: VENUS 'HOODED', VENUS 'PRESIDENT', VENUS 'PRESIDENT' REGULAR, VENUS 'PRESIDENT' Pen and Pencil Set.

Every essential feature of pens costing twice as much is built into each VENUS model.

That is why people who insist on full value for their money invest in a VENUS pen.

Venus Agents in India and Pakistan: S. Ali Bukhsh and Sons, P.O. Box 172, Lahore ★ S. Ali Bukhsh and Sons, 96 Mohammed Ali Road, Bombay ★ S. Ali Bukhsh and Sons, Napier Road, Karachi ★ Harris Chunder Bose and Co., 33 Canning Street, Calcutta, I ★ Oriental Mercantile Agency, P.O. Box 10, Madras.

-the pen that is 'Yours for Years'


ஜூபிடரின்
மோகினி
பல ஆச்சரியமான சம்பவங்கள்
நிறைந்தது
மர்மமும் மாயமும் திகைப்பும் நகைப்பும்
புறக்தும் குதிரையின் அற்புதச்செயல்களும்
கொண்ட அழகான கதை
கூடிய சீக்கிரம் வெளிவருகிறது

ஸ்ரீ ராகவ விலாஸ்

வாசனைப் புகையிலை



நிகரற்ற நறுமணம், தேர்ந்து எடுக்கப்பட்ட உயர்தர புகையிலை, பரிசுத்தமான தயாரிப்பு — இவற்றை நீங்களே உணர்வீர்கள்!

எல்லா இடங்களிலும் கிடைக்கும்.

புரோப்ரைட்டர்: G. S. K.

கொழும்பு, மலேயாவுக்கு ஏஜண்டுகள் அல்லது ஸ்டாக்கிஸ்டுகள் தேவை
செக்யூரிடி கட்டக்கூடியவர்களே விண்ணப்பித்துக் கொள்ள வேண்டும்

இதர விவரங்களுக்கு:

மெஸர்ஸ். G. S. K. & N. S. R.

புகையிலை வியாபாரிகள் :: பாலக்காடு



மலர் 8 | இதழ் 10 | அக்டோபர் 2 | சர்வதாரி ௵ புரட்டாசி 18

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.



மலர் 8 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 10

என்ன சேதி?

காந்தி ஸ்தம்பம்

உலகம் போற்றும் உத்தமரின் பிறந்த நாளை முன்னிட்டு இன்று இந்தியா தேசமெங்கும் மக்கள் மகாத்மாவின் ஞாபகமாகவே இருப்பார்கள். இந்தத் தலைமுறையைச் சேர்ந்தவர்கள் யாரும் மகாத்மாவை மறக்க மாட்டார்கள்; மறக்கவும் முடியாது. ஆனால் நம் பிற்கால சந்ததிகளுக்கு மகாத்மாவின் மகிமையை அடிக்கடி ஞாபகப்படுத்துவதற்குச் சாதனங்கள் வேண்டாமா? நாம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டாமா? மகாத்மாவின் திட்டங்களை நிறைவேற்றுவதே அவருக்குச் சிறந்த ஞாபகச் சின்னம் என்று தலைவர்கள் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். ஆனால் கள்ளுக்கடை ஒழிந்து, ஹரிஜனங்கள் விடுதலையடைந்து, ஆதாரக் கல்வி முறையும் நாடெங்கும் பரவி விட்டால் அப்புறம் என்ன? மகாத்மாவின் நினைவு பிற்பாடு வேண்டியதில்லையா? அவருடைய தர்மபோதனைகளை ஞாபகப் படுத்த வேண்டிய அவசியமில்லையா! தலைவர்கள் என்ன சொன்னபோதிலும், நாடெங்கும் மகாத்மாவின் உருவப் படங்களையும் அவருடைய சிலைகளையும் காட்டிக் கொண்டுதான் வருகிறார்கள். ஆனால் படங்களும் சிலைகளும் சொற்ப காலமே இருக்கக் கூடியவை. சென்னைக் கடற்கரையோரமாக நடந்து, நெடுகிலும் நிலைநாட்டியுள்ள சிலைகளையும், அவற்றின் மீது சில சமயம் உட்கார்ந்திருக்கும் காக்கைகளையும் பார்த்தால், சிலைகள் எவ்வளவு சாதாரணமான விஷயம் என்பது யாருக்கும் தெரிந்து விடும். அசோக ஸ்தம்பத்தைப் போல் ஆயிரம் இரண்டாயிரம் ஆண்டுகள் நிலைத்திருக்கக் கூடிய காந்தி ஸ்தம்பங்களை இந்தியா தேசமெங்கும் நிலைநிறுத்துவது தான் மகாத்மாவின் மகிமைக்குரிய ஞாபகச் சின்னமாகும். அந்த ஸ்தம்பத்தின் அடிப் பகுதியில் ஒரு பக்கத்தில் மகாத்மாவின் திருமுகத்தையும் மற்ற மூன்று பக்கங்களில் மகாத்மாவின் மணி வாக்குகளையும் பொறிக்க வேண்டும். இத்தகைய காந்தி ஸ்தம்பங்கள் இன்றைக்கு உடனே ஏற்படாவிட்டாலும், நாளடைவில் தேசமெங்கும் கம்பீரமாய் நின்று காட்சியளிக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. அந்தக் கைங்கரியத்தை முதலில் ஆரம்பித்து நடத்துகிறவர்கள் மற்றவர்களுக்கு வழிகாட்டியாவார்கள். நமது சித்திரக்காரரின் கற்பனையில் எழுந்த காந்தி ஸ்தம்பம் ஒன்று இந்தக் கல்கி காந்தி மலரில் வெளியாகிறது. ஸ்தம்பத்தின் உச்சியில் காந்திமகான் உலகுக்கு அளித்த அமர ஜோதி ஒளிர்வதைக் காணலாம்.

சென்னையில் கம்பர் விழா

ஒரு நாட்டில் ஒரு மகாகவி அவதரித்திருந்தால் அந்த நாட்டைப் பாக்கியம் செய்த நாடு என்று சொல்லவேண்டும். இந்த விதத்தில் தமிழ்நாடு மிகவும் பாக்கியம் செய்த நாடு. இங்கே பல மகாகவிகள் தோன்றியிருக்கிறார்கள். அவர்களில் தலைசிறந்தவர் கம்பர். தமிழ்நாட்டின் ஏற்றத்தைப்பற்றிச் சொல்லும்போது,

"கல்விசிறந்த தமிழ்நாடு—புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு"

என்று பாரதியார் கூறியுள்ளார். தமிழ்மொழியின் தனிச் சிறப்பைப் பற்றிப் பாரதியார் பாடும்போது,

"யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்..."

என்று தொடங்கி, கம்பருக்கு முதன்மை ஸ்தானத்தை அளித்திருக்கிறார்.

சென்னைமா நகரில் இந்த வருஷம் நவராத்திரி வாரத்தில் கம்பர் விழாக் கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. 8, 9, 10உ களில் ரஸிகமணி

டி. கே. சி. தலைமையில் ராஜாஜி மண்டபத்தில் விழா நடைபெறுகிறது. கம்பர் கவிதைகள் சம்பந்தமான கண்காட்சி நடத்தப்படுகிறது. விழாவை யொட்டி இன்னிசை நிகழ்ச்சிகளும் உண்டு. தமிழ்ப் புலவர்களும், கவிதா ரஸிகர்களும், கம்பனின் அன்பர்களும், தமிழ்ப் பெருமக்களும் விழாவுக்கு விஜயம் செய்து தமிழ் மகாகவியின் பெருமையை உலகமறியச் செய்வார்கள் என்று நம்புகிறோம்.

புதிய சகாப்தம்

கவர்னர்-ஜெனரல் ராஜாஜி அவர்களின் அறிக்கையை யொட்டி, சென்ற செப்டம்பர் 26-ந் தேதி இந்தியா தேசம் எங்கும் ஹைதராபாத்தில் நாம் அடைந்த வெற்றியை முன்னிட்டுப் பிரார்த்தனைகள் நடைபெற்றன. ஆலயங்களிலும் சர்ச்சுகளிலும் மசூதிகளிலும் பிரார்த்தனை நடத்தினார்கள். ஹைதராபாத்திலே நாம் அடைந்த வெற்றி சத்தியத்தின் வெற்றியாகும்; ஜனநாயகத்தின் வெற்றியாகும்; எல்லாவற்றிற்கும் மேலாக, ஹிந்து முஸ்லிம் சகோதர ஐக்கியப்பாட்டின் பெருவெற்றியாகும். இந்தியா தேசமெங்குமுள்ள மக்கள்—ஹிந்துக்களும் முஸ்லிம்களும்—ஒரே மனத்துடன் ஹைதராபாத் விஷயத்தில் நடந்து கொண்டார்கள். நம்

வட்ட மேஜை

எத்தனை அடி வேண்டும்?

* அடையாறு, சென்னை
24—9—48

அன்புள்ள 'கல்கி' ஆசிரியர் அவர்களுக்கு,

பதினோராயிரம் அடிக்குமேல் சினிமாப் படங்களின் நீளம் இருக்கக்கூடாது என்று நிர்ணயிப்பது பற்றி நம் சுதந்திர இந்திய சர்க்கார் ஆலோசித்து வருகின்றனர். கலைத் தொண்டுக்கு சினிமாப் படம் ஒரு சாதனம் என்று நம்புவோரும், சினிமாவைப் பொழுது போக்காகக் கருதும் பொதுமக்களும் இந்தக் கட்டுப்பாட்டை வரவேற்பார்கள் என்பதில் ஐயமில்லை. படத்துறையில் மிகவும் முன்னேற்றம் அடைந்துள்ள மேனாட்டுப் படங்களில் பெரும்பாலானவை பத்தாயிரம் அடிக்குங் குறைந்ததாகத்தான் இருக்கின்றன. இதனால் தான், அப்படங்களோடு, பொது அறிவைப் பரப்பும் சிறு படங்களும் செய்திப் படங்களும் சேர்த்துக் காட்ட முடிகிறது. பாமர மக்களுக்குக் கல்வி புகட்ட சினிமா ஒரு சிறந்த சாதனம். அதைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமானால், ஒவ்வொரு கதைப் படத்துடனும் குறைந்தது 2,000 அடி நீளமுள்ள 'கல்விப் படம்' காட்டுவதற்கு வசதி செய்ய வேண்டும்.; உலகமெங்கும் நடக்கும் முக்கிய நிகழ்ச்சிப் படங்களையும் காட்டவேண்டும். அபூர்வ சிந்தாமணி ஆயிரம் தலைகளைச் சீவுவதை ஒரு தலை கூட விடாமல் படத்தில் காட்ட வேண்டுமென்றால், செய்திப் படங்களுக்கும் கல்விப் படங்களுக்கும் இடம் எப்படி இருக்கும்?

பொழுது போக்குக்காக மட்டுமே சினிமா என்று எண்ணுபவரும், படத்தின் நீளத்தைக் குறைப்பதை வரவேற்பார்கள். நான்கு மணி நேரம் ஓடித்தான் தீருவோம் என்று பிடிவாதம் செய்யும் தமிழ்ப் படங்கள் நம் சகிப்புத் தன்மையைச் சோதிக்கின்றன. இவை சந்தோஷத்தைத் தருகின்றனவா, அல்லது சித்திரவதை செய்கின்றனவா என்ற சந்தேகத்தை எழுப்பி விடுகின்றன. காசு கொடுத்துச் சனியனை வாங்குவதுபோல் ஆகிவிடுகிறது நம்முடைய நிலை.

லா மிஸரப்ளே (Les Miserables) போன்ற ஆயிரக் கணக்கான பக்கங்கள் கொண்ட கதைப் புத்தகங்களைத் தழுவி, கலை குன்றாமலும் தொடர்பு விடாமலும், குறுகிய அளவுக்குள்ளாகவே படங்கள் எடுக்க முடியும் என்பது மேனாட்டுப் படங்களால் நிரூபிக்கப்பட்டு விட்டது. பட்டவர்த்தனமாகக் காட்டாமல் பார்ப்பவர்களுக்கு சூசகமாகத் தெரியப்படுத்துவது, படப்பிடிப்பில் ஒரு முக்கிய அம்சம். படத்தின் அளவைக் குறைக்கினால் பார்ப்பவர்களுக்கு விளங்காது என்று கூறுவது பொது மக்களை அவமதிப்பதாகும். இந்த வாதத்தைக் கொண்டு பார்த்தால், பாஞ்சாலியின் துகில் உரிய உரிய வளர்ந்து கொண்டே வருவதைக் காட்டும் காட்சிக்கு முடிவே இருக்க முடியாது. பாடாவதிப் படம் என்றாலும் பதினெட்டாயிரம் அடி என்றால் அதற்குத் தனிச் சிறப்பு என்ற காலம் போய்விட்டது. வேண்டுமென்றால், அப்படங்களை சிவராத்திரி காலத்துக்கு மட்டும் விசேஷக் காட்சிகளாகக் காட்டலாம்.

சங்கீதம், நாட்டியம், ஹாஸ்யம் முதலிய பல ரஸங்களுக்கும் விரஸங்களுக்கும் உரிய இடம் அளிக்க வேண்டுமென்றால் நீளமான படம் தேவை என்று சிலர் வாதாடுகிறார்கள்! இந்த அம்சங்கள் எல்லாவற்றையும் ஒரு படத்தில் வலுக்கட்டாயமாக இழுத்துப் போட்டு அனைத்தையும் குழப்பவேண்டிய அவசியம் என்ன? ஒரு படத்தில் ஒரு அம்சமாவது சீராக இருந்தால், அதற்கே பொது மக்கள் பெரிதும் கடமைப் பட்டவராவர். மேனாட்டுப் படங்களில் ஒவ்வொன்றில் ஒரு விசேஷ அம்சத்துக்கு முக்கியத்துவம் அளிப்பார்கள். அதனால் சங்கீதப் பிரியன் பிங்-கிராஸ்பி (Bing Crosby) நடிக்கும் சங்கீதப் படத்துக்கோ, நாட்டிய ரஸிகன் பிரெட் அஸ்டேர் (Fred Astire) நடிக்கும் நாட்டியப் படத்துக்கோ, நகைச்சுவை விரும்புகிறவன், லாரல் ஹார்டி (Laural & Hardy) படத்துக்கோ செல்வான். நம் தமிழ்ப் படங்களிலோ, ஒரு ராஜா ராணியின் கதையில் சங்கீதம், உடற்பயிற்சி, சர்க்கஸ், மாயா ஜாலம், நடனம் அனைத்தையும் ரஸிகர்கள் கட்டாயமாக ரசிக்க வேண்டியிருக்கிறது.

பதினோராயிரம் அடிக் கட்டுப்பாடு வந்தவுடன் இந்தக் குறைகள் எல்லாம் தீர்ந்து விடும் என்று கூற முடியாது. ஆனால் அக் கட்டுப்பாட்டினால், பொதுமக்களுடைய ரசிகத் தன்மையைப் படமுதலாளிகள் சோதிப்பதற்கு ஓர் எல்லை ஏற்படும் என்று நம்பலாம். அதோடு கல்விப் படங்களையும் செய்திப் படங்களையும் கட்டாயமாகக் காட்டவேண்டியிருக்குமாதலால் பெருநன்மை உண்டாகும்.

சே. நா. வரதப்பன்.

---

* இந்த வாரம் வட்டமேஜைக் கடிதத்துக்கு ரூ. 25 பரிசு பெற்றவர்: ஸ்ரீ சே. நா. வரதப்பன், "மோகனா", கிரீன்வேஸ் ரோடு, அடையாறு, சென்னை.

மாகாண முஸ்லிம் லீக் தலைவர் ஜனாப் இஸ்மேயில் சாகிப் கூட இந்தியப் படைகளின் வெற்றியைக் கோரினார் என்றால் பார்த்துக்கொள்ளுங்கள்! எல்லாருடைய கோரிக்கையும் நிறைவேறியது. ராஜாஜி அன்றைய தினம் புது டில்லியில் பிர்லா கோயிலிலும் ஜும்மா மசூதியிலும் நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் பேசினார். "இந்தியாவில் சமூகத் துவேஷ யுகம் மறைந்து சமூக சிநேக சகாப்தம் ஆரம்பமாகி யிருக்கிறது" என்று சொன்னார். ராஜாஜியின் வாக்குப் பல காரியங்களில் பலித்திருப்பது போல் இந்தப் பெரிய விஷயத்திலும் பலித்திடுமாக.

பாகிஸ்தான் ஜி. ஜி.


பாகிஸ்தான் கவர்னர் ஜெனரல் குவாதே ஆஜம் ஜின்னா அவர்கள் காலகதியடைந்த இடமும் காரணமும் சந்தர்ப்பமும் பொருத்த மில்லாமல் அமைந்து விட்டன. பாவம்! குவெட்டாவில் உடம்பு அதிகமாகிக் கராச்சிக்குப் பறந்து வந்து திடீரென்று மாரடைப்பினால் இறந்து போனார். அதற்கு மறுநாள் ஹைதராபாத்தில் இந்தியப் படைகள் அமைதியை நிலைநாட்டப் பிரவேசித்து விட்டபடியால், அவ்வளவு பெரிய மனிதரின் மரணத்துக்குரியதான பிரபலம் ஏற்படவில்லை. குவாதே ஆஜம் காலமான தினத்துக்கு முதல் நாள் வெளியான "கல்கி"யில், நவாப் லியாகத், ஸர் ஸபருல்லா, ஜனாப் நிஷ்டர் ஆகியவர்கள் தங்களுடைய பெயருடன் ஜி. ஜி. சேர்த்து போர்டு தொங்கவிடத் தயாராய்க் காத்திருந்ததாக ஒரு கார்ட்டூன் வெளியாகி யிருந்தது. இந்த மூவருடைய உத்தேசமும் ஒருவருக்கொருவர் தெரிந்து போட்டி முற்றி விட்டபடியால், தாற்காலிகமாகக் கிழக்கு வங்காளத்திலிருந்து குவாஜா நஸிமுடீனைக் கொண்டு வந்து ஜி. ஜி. ஆக்கியிருக்கிறார்கள்! குவாஜா நஸிமுடீன் 'ஆக்டிங் கவர்னர் ஜெனரல்' தான் என்பதை நேயர்கள் கவனிக்க வேண்டும். பாகிஸ்தானுக்குக் 'காயம் கவர்னர் ஜெனரல்' இன்னார் என்பது இன்னும் நிச்சயமாகவில்லை.

இதற்கிடையில் பலர் பலவிதமாக ஊகம் செய்தார்கள்; இன்னும் செய்து கொண்டிருக்கிறார்கள். ஹைதராபாத்திலிருந்து நைஜாமைத் தட்டிக்கொண்டு போய்ப் பாகிஸ்தான் ஜி. ஜி. ஆக்கப் போகிறார்கள் என்றும், இதற்காகவே ஸிட்னி காட்டன் ஆகாச விமானத்துடன் காத்திருப்பதாகவும் சிலர் சொன்னார்கள். மிக உயர்வு பொருந்திய நைஜாம் அவர்களோ "காஸிம் ரஸ்விக்கும் பெப்பே! ஸிட்னி காட்டனுக்கும் பெப்பே!" என்று கையை அகல விரித்து விட்டு, இந்திய சர்க்காரின் உண்மையான பிராண சிநேகிதன் தாமே என்று சொல்லி விட்டார்.

பிறகு, பாகிஸ்தான் ஜி. ஜி. பதவிக்கு மிக உயர்ந்த ஆகாகான் பெயரைச் சிலர் குறிப்பிட்டார்கள். ஆனால் ஆகாகானுடைய உடல் நிலை இதைப்பற்றி அவரைக் கேட்கவும் முடியாத கட்டத்தை அடைந்து விட்டது என்று தெரிய வந்தது. கடைசியாக இப்போது சிலர் போபால் நவாப்பின் பெயரைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். பேஷாகக் குறிப்பிடட்டும்; நமக்கென்ன வந்தது? நமக்குத் தெரிந்த சிநேகிதர்களின் பெயர் எதையும் யாரும் சிபார்சு செய்யாதவரையில் நமக்கும் கவலை யில்லை. போபால் நவாப்பின் கதியைப் பற்றி நாம் எதற்காகக் கவலைப்பட வேண்டும்?

கனம் டாக்டர் குருபாதம்

திடீரென்று ஒரு நாள் டாக்டர் குருபாதம் சென்னை சர்க்காரின் மந்திரியானார். வந்த மாதிரியே திடீரென்று போய்விட அவருக்கு விருப்ப மில்லை போலும்! காரைக்குடியில் சென்ற வாரத்தில் பேசும்போது "கிராம ஊழியம் செய்கிறவர்கள் சர்க்கார் பதவிக்கு வரக் கூடாது" என்கிற தமது அபாரமான அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கிறார். இவ்விதம் மந்திரி பதவியிலிருந்து தாம் விலகப்போவதை முன்னதாகத் தெரியப் படுத்திவிட்டார். டாக்டர் குருபாதத்தின் மேற்படி கூற்றை நாம் ஆமோதிக்கிறோம். மந்திரி வேலை பார்ப்பதற்கு ஒருவிதமான யோக்கியதையும் வேண்டியதில்லையென்ற அபிப்பிராயம் இப்போதெல்லாம் பரவி வந்தபோதிலும், நாம் அவ்விதம் கருதவில்லை. மந்திரியாக வருகிறவர் குறைந்த பட்சம் 'அரசியல் வாதி' என்கிற யோக்கியதாம்சமாவது பெற்றிருக்க வேண்டும். எப்பேர்ப்பட்ட அரிய பெரிய கிராமத் தொண்டராயிருந்தாலும் திடீரென்று ஒரு நாள் மந்திரியாகி வேலை பார்த்துவிட முடியாது. முக்கியமாக, கிராமத் தொண்டர் பலரிடம் ஒரு குணம் உண்டு. தாங்கள்தான் உண்மையான தொண்டு செய்கிறதாகவும், மற்ற அரசியல் வாதிகள் அனைவரும் வெறும் பேச்சுக்காரர்கள்,—நாணயம் இல்லாதவர்கள்,—என்றும் அவர்கள் நம்புகிறார்கள். டாக்டர் குருபாதம் இந்தத் தோரணையில் அடிக்கடி அதிகப் பிரசங்கம் செய்து வந்திருக்கிறார். வாழ்நாளெல்லாம் தேசத்துக்குத் தொண்டு செய்து மக்களின் நன் மதிப்புக்குப் பாத்திரமான தலைவர்களைப்பற்றி அலட்சியமாக அவர் பேசி வந்திருக்கிறார். இதை யார் சகித்துக் கொண்டிருக்க முடியும்? எனவே, அரசியலைக் காட்டிலும் மிக மேலான கிராமத் தொண்டுக்கே டாக்டர் குருபாதம் திரும்பிச் செல்வது மிகவும் சிலாக்கியமாகும்.





ஜயந்தி  கொண்டாடுகிறோம்!

எந்தையே! சுதந்திர இந்தியாவின் தந்தையே! தீனர்களின் தெய்வமே! சத்தியத்தின் தஞ்சமே! எங்களை ஆட்கொண்ட அண்ணலே! பாபுஜி! இன்று அக்டோபர் 2-ந் தேதி புனித தினத்தில் தாங்கள் இந்தப் பூவுலகில் பிறந்த திருநாளைக் கொண்டாடுகிறோம். சென்ற பல வருஷங்களாகக் கொண்டாடியது போல இன்றைக்கும் காந்தி ஜயந்தி கொண்டாடுகிறோம். ஆனால் இன்றைக்கு, இந்த நேரத்தில், தாங்கள் எங்கே இருக்கிறீர்கள்? பரமபதத்தில் தேவதேவனுடைய திருச்சந்நிதியில் வீற்றிருக்கிறீர்களா? சத்தியலோகத்தில் முனிபுங்கவர்களுக்குச் சத்தியாக்கிரஹ தத்துவத்தை எடுத்து உரைத்துக் கொண்டிருக்கிறீர்களா? அவதார புருஷர்களுக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் இடையே அமர்ந்து அஹிம்சையின் பெருமையைப் போதித்துக் கொண்டிருக்கிறீர்களா? அடிகளே! அநாதைகளின் கடவுளே! தாங்கள் எங்கே இருக்கிறீர்கள்? இந்த நேரம் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?

அல்லது ஒரு வேளை இந்தப் புண்ணிய பாரத பூமியை விட்டுப் போக மனமின்றி, சூக்ஷ்ம சரீரத்தில் இங்கேயே வட்டமிட்டு வளைய வந்து கொண்டிருக்கிறீர்களா? அரும் பாடுபட்டு அஹிம்சைப் போர் நடத்தி இந்தப் பாரத நாட்டுக்குச் சுதந்திரம் பெற்று அளித்தீர்களே? அந்தச் சுதந்திரத்தை இந்திய மக்கள் சரிவரப் பாதுகாத்து வருகிறார்களா என்று பார்த்துக் கொண்டிருக்கிறீர்களா?

தேசியத் தற்கொலைக்கு ஒப்பான சகோதரச் சண்டை போட்டுக் கொண்டிருந்தோமே? அதைத் தடுத்து நிறுத்தும் பொருட்டுத் தங்கள் அரிய உயிரைப் பலி கொடுத்தீர்களே? அதற்கு ஏதேனும் பலன் ஏற்பட்டிருக்கிறதா என்று பார்த்துக் கொண்டிருக்கிறீர்களா?

அப்படியானால் தங்கள் உள்ளம் ஓரளவு திருப்தியடைந்திருக்க வேண்டும். தாங்கள் பெற்றளித்த சுதந்திரத்தை நாங்கள் பாதுகாத்துக் கொண்டுதான் வருகிறோம். தங்களுடைய உத்தமச் சீடர்கள்,—எங்களுடைய தலைவர்கள்,— எத்தனையோ இன்னல்களுக்கிடையில் இந்தியாவின் சுதந்திரத்தை நிலைநாட்டிக் கொண்டு வருகிறார்கள்.

தங்களுடைய மகா தியாகமும் வீண் போய்விடவில்லை. சகோதரனைச் சகோதரன் கொல்லத் தூண்டிய மூட வெறி நாட்டிலிருந்து அகன்றுவிட்டது. படுபாதகனுடைய துப்பாக்கிக் குண்டுக்குத் தாங்கள் பலியான தினத்திலிருந்து தேசத்தில் சமூகக் கலவரங்கள் நின்றே போய் விட்டன. வகுப்புத்துவேஷ வெறி தணிந்துகொண்டுதான் வருகிறது.

மகாத்மாஜி! தாங்கள் இந்தப் புண்ணிய பாரத நாட்டின் வானிலேயே இன்னும் உலாவிக் கொண்டிருக்கும் பட்சத்தில் சமீபத்திலே நடந்த ஹைதராபாத் சம்பவங்களைப் பற்றியும் அறிந்திருப்பீர்கள்.

இந்திய அரசாங்கப் பொறுப்பை வகிக்கும் தங்களுடைய உத்தமச் சீடர்கள் எவ்வளவோ பொறுத்துப் பொறுத்துப் பார்த்தார்கள். ஆனால் ரஸாக்கர்கள் என்னும் கலியுக அரக்கர்களின் அக்கிரமங்கள் குறைவதாக இல்லை. எனவே, கடைசியாக, தாங்கள் இன்று எங்கள் மத்தியில் இருந்தாலும் ஒப்புவீர்கள் என்று நம்பி இந்திய வீர சைனியத்தை அனுப்பினார்கள். ஐந்தே நாளில் இந்தியாவின் சைனியம் செய்த சாகஸச் செயல் சரித்திரத்தில் இடம் பெற்றுவிட்டது.

இராணுவ நடவடிக்கைதான் என்றாலும், உயிர்களுக்குச் சேதம் எத்தனை குறைவு என்று நினைத்தால் அதிசயமாயிருக்கிறது.

தங்களுடைய அஹிம்சா தர்மத்தின் மகிமையும் மகா தியாகத்தின் பலனும் வேறொரு விதத்திலும் நன்கு வெளியாகியிருக்கின்றன.

இந்தியாவின் விரோதிகள் எல்லாரும் என்ன சொல்லிக்கொண்டிருந்தார்கள்? பாகிஸ்தானிகளும் பிரிட்டிஷ்காரர்களும் என்ன சொன்னார்கள்? பிரிட்டிஷ் பத்திரிகை நிருபர்கள் என்ன செய்தி அனுப்பினார்கள்? பி. பி. சி. என்னும் பிரிட்டிஷ் ரேடியோ எத்தகைய படுபாதகமான ஊக ஜோசியத்தை வெளியிட்டது?

இந்திய சைனியம் நைஜாம் ராஜ்யத்தில் பிரவேசித்ததும் இந்தியாவெங்கும் 'வகுப்புக் கலவரங்கள் தலைவிரித்தாடும் என்று சொன்னார்கள். ஆசையோடு எதிர்பார்த்துக்கொண்டும் இருந்தார்கள். அவர்களுடைய ஆசையில் மண் விழுந்தது. ஆரம்ப தினங்களில் கலவரம் ஒன்றும் நடக்கவில்லையென்றாலும் அவர்கள் ஆசை இழந்துவிடவில்லை. "இந்தியத் துருப்புகள் ஹைதராபாத் நகரில் பிரவேசித்ததும் கலகங்கள் ஆரம்பமாகும்" என்று சொன்னார்கள். அப்படியும் நடக்கவில்லை. குமரி முனையிலிருந்து இமயமலை வரையில் இந்தப் புண்ணிய நாட்டிலே அமைதி குடி கொண்டிருந்தது. துவேஷ அடிப்படை கொண்ட பாகிஸ்தானிலேகூட அமைதி நிலவிற்று.

காந்திஜி! இது தங்களுடைய மகா தியாகத்தின் சிகரம் போன்ற பலன்தான் என்பதில் சந்தேகம் என்ன?

அஹிம்சாமூர்த்தியே! அன்பின் உருவமே! சத்திய தேவதையின் அவதாரமே! தாங்கள் உயிர் வாழ்ந்தபோது தங்கள் உபதேசங்களைக் கடைப்பிடித்ததைக் காட்டிலும் இப்போது அதிகமாகக் கடைப்பிடிக்க முயன்று வருகிறோம். இந்த உறுதி எங்களுக்கு என்றென்றும் நீடித்திருக்கவேண்டும் என்று ஆசி கூறுங்கள்!

காந்தியடிகளே! தங்களை வணங்குகிறோம். வாழ்த்துக் கூறுகிறோம். தங்களுடைய புனித ஞாபகத்தைப் போற்றுகிறோம்.

சென்ற இருபத்தெட்டு வருஷமாக அக்டோபர் மாதம் 2-ந் தேதி காந்தி ஜயந்தி கொண்டாடி வந்திருக்கிறோம். அப்போதெல்லாம் தாங்கள் இந்த மண்ணுலகில் பூத உடல் தாங்கியிருந்தீர்கள். ஆகையால் குதூகலத்துடன் கொண்டாடினோம். இந்தப் பாரத பூமியில் எங்கோ ஓரிடத்தில் தாங்கள் சஞ்சரிக்கிறீர்கள், நாங்கள் நடமாடுகிற மண்ணில் தங்களுடைய திருப்பாதங்களும் நடமாடுகின்றன என்ற எண்ணத்துடன் அப்போதெல்லாம் ஆனந்தமாய்க் கொண்டாடினோம்.

ஆனால் இன்றோ? தாங்கள் இந்த மாநிலத்தில் நடமாடவில்லை. தங்களுடைய புனிதத் திருமேனியை அக்கினிதேவன் சாம்பராக்கிப் பரிசுத்தமடைந்ததை நாங்கள் அறிவோம். தங்களுடைய உடலின் துகளை, உடல் எரிந்து உண்டான புனித சாம்பரை, நாடெங்குமுள்ள நதி கட்டங்கள், சமுத்திர கட்டங்கள் ஆகிய புண்ணிய தீர்த்தங்களில் கரைத்து விட்டதையும் அறிவோம். ஆயினும், எம்மானே! தாங்கள் இறந்துவிட்டதாக எங்களால் நம்ப முடியவில்லை. இன்னமும் தாங்கள் இங்கு எங்கேயோ வட்டமிட்டுக் கொண்டிருப்பதாயும், எங்களுடைய செய்கைகளைக் கவனித்து வருவதாயும் எண்ணிக்கொண்டுதான் இந்த வருஷத்திலும் காந்தி ஜயந்தி கொண்டாடுகிறோம்.

பாபுஜி! எங்களுக்கு ஆசி கூறுங்கள். பாரத நாட்டுக்கு ஆசி கூறுங்கள். உலகில் காந்தீயம் வளர்ந்து பரவுமாறும், காந்தி தர்மம் செழித்தோங்குமாறும் ஆசி கூறுங்கள். தங்களைத் தவிர அவ்விதம் ஆசி கூறக்கூடியவர்கள் வேறு யார் இருக்கிறார்கள்?




தெய்வ மகாத்மா

மானிலத்தை வாழவைக்க வந்த மகாத்மா!
மாந்தர்குலம் உய்ந்திடவே வந்த மகாத்மா!
தீனர்களின் தந்தையான காந்தி மகாத்மா!
தீயவர்க்கும் நன்மை எண்ணும் தெய்வ மகாத்மா!


வானுலகைத் தாம் அணுகிச் சென்ற போதிலே
வாசலிலே நின்று வரவேற்றவர் யாரோ?
வானவரும் தேவியரும் வந்து வணங்கி
வாசமலர் தூவி ஜய போற்றி சொன்னாரோ?

பாலன் பிரஹலாதன் தங்கள் பாத மலரைப்
பணிந்து கண்ணீர் அருவி சொரிந்து நின்றானோ?
ஞாலமெல்லாம் வாழ முது கெறும்பிலே சுந்த
ஞானமுனி யாம் நந்தி ஆசி சொன்னாரோ?

முன்னொருநாள் அன்புநெறி தந்தருளிய
மோனபுத்தர் இமைதிறந்து முகமலர்ந்தாரோ?
சின்னஞ்சிறு வயதினிலே தம்மை மணந்த—எங்கள்
அன்னையாம் கஸ்தூரிபாயும் கரங்குவித்தாரோ?



சூரியனுக்கு முன் மின்மினியா!




எந்தன்றோ காந்திமகான்!
1. இத்தனை நாள் ஆன பின்னும்
ஏழை நெஞ்சே என் துயரம்?
எத்தனை நீ அழுதாலும்
உத்தமர்தான் வருவாரோ?
2. தன்னுயிரை மன்னுயிர்க்கே
தந்தவர்தான் மாய்ந்தவரோ?
இன்னுயிரும் எமக்களித்த
எந்தான்றோ காந்திமகான்!
3. அன்பினிலே அவர் இருப்பார்
அருளினிலே விளங்கிடுவார்!
துன்ப முற்ற பேதையர்தம்
துயரினிலே நெகிழ்ந்திடுவார்!
4. சின்னஞ் சிறு மதலையரின்
சிரிப்பினிலே மலர்ந்திடுவார்!
கன்னியர்கள் அன்னையர்தம்
கண்ணீரில் கலந்திடுவார்!
5. மாதவத்தோர் மாமுனிவர்
ஓது மறை தனிலிருப்பார்!
பூதலத்தின் புன்னகைபோல்
பூக்கும் மலர்க் கூட்டம் அவர்!
6. ஏழையர்க்கே இரங்கிடுவார்
இதயங்களில் வீற்றிருப்பார்!
ஊழியர்கள் உழுவோரின்
உழைப்பினிலே ஜொலித்திடுவார்!
இத்தனை நான் சொன்ன பின்னும்
ஏழை நெஞ்சே என் துயரம்?





பாரதியார் சங்கம்

எட்டயபுரத்தில் பாரதி மண்டபத்தின் அஸ்திவாரத் திருவிழா நடந்தபோது, தலைமை வகித்த ராஜாஜி அவர்கள் ஒரு யோசனை சொன்னார்கள். பாரதி மண்டபத்தை நிர்வகிக்கவும், வருஷந்தோறும் விழா நடத்தவும் "பாரதியார் சங்கம்" என்ற பெயருடன் ஒரு ஸ்தாபனம் ஏற்படுத்த வேண்டும் என்றும், அதில் தமிழ் நாடு முழுவதிலும் உள்ள பாரதி அன்பர்கள் அங்கத்தினராகச் சேர வேண்டும் என்றும் கூறினார்கள். ராஜாஜி அவர்களின் தீர்க்க தரிசன வாக்கு எப்போதும் சில காலம் சென்ற பிறகே பலிப்பது வழக்கம் அல்லவா? மேற்படி யோசனையை ராஜாஜி கூறி ஐந்து வருஷம் ஆகி விட்டபடியால், இந்த வருஷத்தில் பாரதி சங்கத்தைத் துவக்கி விடலாம் என்று பல நண்பர்கள் அபிப்பிராயப்பட்டார்கள். அதற்கிணங்க, செப்டம்பர் 11ந் தேதி எட்டயபுரத்தில் நடந்த பாரதி விழாவில் "பாரதியார் சங்க" ஸ்தாபனத்தைப் பற்றிக் "கல்கி" ஆசிரியர் பிரஸ்தாபித்தார். உடனே அங்கிருந்த அன்பர்கள் பலர் சங்கத்தில் அங்கத்தினராகச் சேரத் தங்கள் விருப்பத்தைத் தெரிவித்துக் கையொப்பமும் இட்டார்கள்.

பாரதியார் மண்டபத் திருப்பணிக்கு பலர் பலவித உதவி செய்திருப்பது போல், கணக்குப் பரிசீலனை உதவியை இலவசமாகச் செய்து வரும் காரிகா - ஸ்ரீ ஸ்தாபனத்தார் பாரதியார் சங்கத்துக்குரிய விதி முறைகளைத் தயாரித்துக் கொடுத்திருக்கிறார்கள். கூடிய சீக்கிரத்தில் பாரதியார் சங்கம் ரிஜிஸ்டர் செய்யப்படும்.

பாரதி சங்கத்தின் முதல் நிர்வாகக் கமிட்டியைப் பாரதி மண்டப டிரஸ்டிகள் நியமனம் செய்வார்கள்.


பிறகு ஆண்டு தோறுமோ அல்லது இரண்டு வருஷத்துக்கொருமுறையோ பாரதி சங்க அங்கத்தினரின் பொதுக் கூட்டம் நடத்திப் புதிய நிர்வாக சபை தேர்ந்தெடுக்கப்படும். எட்டயபுரம் பாரதி ஞாபகார்த்த மண்டபப் பராமரிப்பும், வருஷந்தோறும் மேற்படி மண்டபத்தில் பாரதி விழா நடத்துவதும் நிர்வாக சபையின் பொறுப்பில் இருக்கும்.


பாரதியார் சங்கத்தின் அங்கத்தினர்கள் எட்டயபுரத்தில் நடக்கும் வருஷாந்தர விழாவின் வரவேற்புக்கமிட்டி அங்கத்தினராகவும் கருதப்படுவார்கள். விழாவின் போது அங்கத்தினர்களுக்கு ஜாகை வசதி முதலியன செய்து கொடுக்கப்படும்.

தமிழ்நாட்டிலும் வெளியிலும் உள்ள பாரதி அன்பர்கள் வருஷ சந்தா ஆறு ரூபாய் செலுத்திப் பாரதி சங்கத்தில் அங்கத்தினராகும்படி கேட்டுக் கொள்கிறோம்.

இது வரையில் ஆறு ரூபாய் சந்தா செலுத்திப் பாரதி சங்கத்தில் அங்கத்தினராகியிருப்பவர்களின் ஜாபிதா வருமாறு:—

1. திருப்புகழ்மணி ஸ்ரீ டி. எம். கிருஷ்ணசாமி ஐயர், சென்னை.
2. ரஸிக மணி ஸ்ரீ டி. கே. சிதம்பரநாத முதலியார், குற்றாலம்.
3. கனம் கே. மாதவ மேனன், விவசாய மந்திரி, சென்னை.
4. ஸ்ரீமதி குட்டியம்மாளு அம்மாள், எம். எல். ஏ., சென்னை.
5. கனம் எம். பக்தவத்ஸலம், மராமத்து மந்திரி, சென்னை.
6. ஸ்ரீ பி. எஸ். கிருஷ்ணன், 'அப்பர் இல்லம்' நெமத்தான்பட்டி.
7. ஸ்ரீ மு. துரைசாமி, 111, தெற்கு ராஜா தெரு, தூத்துக்குடி.
8. ஸ்ரீ ஜே. குழந்தை, 58, பீற்றர் கோவில் தெரு, தூத்துக்குடி.
9. ஸ்ரீ வி. எஸ். வெங்கடாச்சாரி, விட்டளாபுரம்.
10. ஸ்ரீமதி ஆண்டாளம்மாள், c/o வி. எஸ். வெங்கடாச்சாரி, விட்டளாபுரம்.
11. ஸ்ரீமதி பத்மா, c/o வி. எஸ். வெங்கடாச்சாரி, விட்டளாபுரம்.
12. ஸ்ரீமதி ஆர். வி. சாஸ்திரி, பம்பாய்.
13. ஸ்ரீ ஆர். அமிர்தசாமி, எட்டயபுரம்.
14. ஸ்ரீ டி. கே. கிருஷ்ணன், தென் திருப்பேரை.
15. ஸ்ரீ என். திருமலை, 'கல்கி' ஏஜண்டு, தென் திருப்பேரை.
16. ஸ்ரீ ஏ. வி. ஆர். எம். அழகப்ப செட்டியார், கானாடு காத்தான், செட்டிநாடு.




காந்தி
ஸ்தம்பம்
மணியம்


EWI LTD.
SYMBOL OF QUALITY
PRESENT TO THE NATION
CALCUTTA
Phœnix
RM. S. & CO., LTD., MADRAS
Phœnix Fans A.C./D.C.
Sole Distributors for SOUTHERN MADRAS
including STATES and MADRAS CITY
RM. S. & Co., Ltd.
16, BROADWAY :: MADRAS
[Phone: 4060] [Grams: "AREMESCO"]



அத்தியாயம் 15

புனர் ஜன்மம்

'ஹோ' என்ற பேரோசை கேட்டுக் கொண்டிருந்தது. சிறிது நேரம் வரையில் அந்த ஓசையைத் தவிர வேறு சத்தம் எதுவும் கேட்கவில்லை. வேறு நினைவும் ஏற்படவில்லை. அது என்ன சத்தமாயிருக்கும் என்று சீதா யோசித்தாள். நெடுநேரம் வரை அதே யோசனையாயிருந்தாள். சட்டென்று நினைவு வந்தது. அம்மா அடிக்கடி எச்சரிக்கை செய்திருந்த அலை ஓசையாகத்தான் இருக்க வேண்டும். ஆம், ஆம்; அலை ஓசைதான்! காதே அடைத்துப் போனது போலக் கேட்கிறது. இந்தச் சத்தம் கேட்கத் தொடங்கியது எப்போதிருந்து? எப்போதிருந்து? எப்போதிருந்து?— இதோ நினைவு வருகிறது! தண்ணீரில் முழுகியதிலிருந்து; தண்ணீரில் முழுகி மூச்சு முட்டிப் போனதிலிருந்து. 'மூச்சு முட்டும் தருணத்தில் 'தண்ணீருக்கு மேலே இருந்தபோது இவ்வளவு சத்தம் இல்லையே? தண்ணீருக்குள் அதிக சத்தமாயிருக்கிறதே?' என்று எண்ணியது இப்போது சீதாவுக்கு நினைவு வந்தது. அதைத் தொடர்ந்து 'சரி, இனிப் பிழைக்கப் போவதில்லை' என்று எண்ணியதும், 'அம்மா! உன் பேச்சைக் கேட்காமற் போனேனே?' என்று வருத்தப்பட்டதும் நினைவுக்கு வந்தன. அந்த ஆபத்தான தருணத்தில் கையில் ஏதோ ஒன்று தட்டுப்பட்டது. பிறகு, அப்படித் தட்டுப்பட்டதும் ஒரு கைதான் என்று தெரிந்தது. அது யாருடைய கை? வளையல் அணிந்திருந்தபடியால் ஒரு ஸ்திரீயின் கைதான் அது! அந்த ஸ்திரீ யார்? ஆபத்துக் காலத்தில் தன்னை வந்து காப்பாற்றுவதாகச் சொல்லியிருந்த தன்னுடைய அன்னையாகத்தான் இருக்க வேண்டும்! — இப்படியெல்லாம் எண்ணமிட்டது வரையில் சீதாவுக்கு இப்போது நினைவு வந்தது. அதற்கு அப்புறம் என்ன நடந்தது? அம்மா தன்னை ஓடைத் தண்ணீரில் மூழ்கிப் போய்விடாமல் காப்பாற்றிக் கரையேற்றினாளா? ஓடைக் கரையில் வண்டி குடை சாய்ந்தபோது தான் விளையாட்டு என்பதாக நினைத்துக் கொண்டு ஓடையில் போய்விழுந்தது எவ்வளவு பிசகு? பார்த்தால் ஓடை சின்னதாயிருந்தது! ஆனால் அதில் எவ்வளவு ஆழம் தண்ணீர்! இப்படித் தன்னை மூழ்க அடித்து மூச்சுத் திணறும்படி செய்துவிட்டதே!—சீச்சீ! அதெல்லாம் பழங்கதையல்லவா? கலியாணம் ஆனதற்கு முன்னால் நடந்ததல்லவா? அப்போது ஓடையில் தான் முழுகவே

இல்லையே! தான் மூழ்கி விட்டதாக எண்ணிக்கொண்டு அம்மாஞ்சி சூரியா ஓட்டமாய் ஓடி வந்தான். தான் மூழ்கவில்லை என்பதைப் பார்த்து ஏமாற்ற மடைந்தான்!—அவ்வளவு தான்! அதற்குப் பிறகு எவ்வளவோ நடந்து விட்டதே! தனக்குக் கலியாணம் நடந்து புக்ககம் சென்று குழந்தை பிறந்து......யாரைக் கலியாணம் செய்து கொண்டோம்? பைத்தியமே! இது கூடவா நினைவில்லை? மிஸ்டர் சௌந்தரராகவன் எம்.ஏ. அவர்களைத்தான்! அவரோடு ஆக்ராவுக்கு வந்து தாஜ்மகால் பார்க்கவில்லையா? சனியனைப்போல் சூரியா இங்கேயும் வந்துசேர்ந்தான். ரஜனிபூர் ஏரியைப் பார்ப்பதற்காக அழைத்துக் கொண்டுபோய்த் திடீரென்று தன்னை ஏரியில் பிடித்துத் தள்ளி விட்டான்! இல்லை! இல்லை! ஐயோ பாவம்! சூரியா பேரில் எதற்கு வீண் பழி! அவன் ரஜனிபூருக்கு வரவே யில்லையே! — ரஜனிபூருக்குத் தன்னை யாரோ ஒரு ஸ்திரீ அழைத்து வந்தாள். அந்த ராட்சஸி யார்?—அவள்தான் தாரிணி! பெயரைப் பார், பெயரை! — அந்தத் தாரிணிதான் தன்னை ஏரியில் பிடித்துத் தள்ளிக் கொன்று விட்டாள்! ஆனாலும் தான் சாகவில்லை போலிருக்கிறதே! இன்னமும் நல்ல நினைவு இருந்து வருகிறதே! கண்ணை மட்டுந்தான் திறக்க முடியவில்லை! ஒரே இருட்டாயும் வெளிச்சமாயு மிருக்கிறது. ஆம், இருட்டாயு மிருக்கிறது; வெளிச்சமாயு மிருக்கிறது. இருட்டில் வெளிச்சமா யிருக்கிறது; வெளிச்சத்தில் இருட்டா யிருக்கிறது. ஆனால் கண்ணைத் திறந்து பார்க்க முடியவில்லை. எவ்வளவு முயற்சி செய்தாலும் கண் இமைகளைத் திறக்க முடியவில்லை......!

ஏதோ குரல் கேட்கிறதே, அது என்ன? யார் குரல்? யார் என்ன சொல்கிறார்கள்?—இந்த நாசமாய்ப் போன அலைச் சத்தம் மட்டும் அடங்கினால்?......அலைச் சத்தம் கொஞ்சம் இப்போது குறைந்து தானிருக்கிறது! யாரோ இரண்டு பேர் பேசுகிறார்கள். என்ன பேசுகிறார்கள்? கண் தெரியாவிட்டாலும் நல்ல வேளையாகக் காது கேட்கிறது; கவனித்துக் கேட்கலாம்.

"உங்கள் மனைவிக்கு நினைவு வந்து கொண்டிருக்கிறது. கண்ணிமைகள் அசைகின்றன. சீக்கிரத்தில் கண்ணை விழித்துக் கொள்வாள்."

"இன்றைக்குச் சீதாவுக்குப் புனர் ஜன்மந்தான். உன்னாலே தான் சீதா பிழைத்தாள். நீதான் அவளுக்கு இரண்டாவது தாயார்!"

"சீதா தாயில்லாப் பெண் என்று கேள்விப் பட்டேன். உண்மையா?"

"தாய் இல்லாமல் பெண் எப்படி வருவாள்? இராமாயண சீதையைப் போல் பூமியிலிருந்தே வந்து விடவில்லை. தாயார் வயிற்றில் தான் பிறந்தாள். ஆனால் இப்போது அவளுக்குத் தாய் உயிரோடில்லை. இனி மேல் நீ தான் அவளுக்குச் சுவீகாரத் தாயார்."

"அப்படியே யாகட்டும். சீதாவுக்கு நான் தாயார் என்றால், நீங்கள் எனக்கு மாப்பிள்ளையாக வேண்டும். அழகான மாப்பிள்ளை நீங்கள்! கட்டிய மனைவி தண்ணீரில் முழுகிக் கொண்டிருக்கையில், படகிலிருந்து இறங்காமலிருந்த மாப்பிள்ளை!"

"அதற்கு நீதான் காரணம்! பலாத்காரமாக இரண்டாயிரம் ரூபாய் பணத்தை என்னிடம் கொடுத்து விட்டாய்! அதைச் சட்டைப் பையில் வைத்துக் கொண்டு எப்படித் தண்ணீரில் திடீரென்று குதிக்க முடியும்? அந்த முட்டாள் படகுக்காரனுக்கோ நல்ல சமயத்தில் ஹிந்தி பாஷை மறந்து போய் விட்டது. நான் சொன்னது அவனுக்குப் புரியவில்லை; அவன் சொன்னது எனக்குப் புரியவில்லை. புரிந்திருந்தால் உன்னைக்கூட ஏரியில் குதிக்காமல் தடுத்திருப்பேன். இந்த ஏரியில் எங்கேயும் கழுத்துக்கு மேல் தண்ணீர் கிடையாதாம். சீதா தற்கொலை செய்து கொள்ள எண்ணியிருந்தால் கூட சாத்தியமாகியிராது."

"போதும், நிறுத்துங்கள்! சீதாவுக்குப் பிரக்ஞை வந்து கொண்டிருக்கிறது. சீக்கிரம் உங்களுடைய மடியில் எடுத்துப் போட்டுக் கொள்ளுங்கள். அவளுக்கு நல்ல நினைவு வரும் போது, என்னுடைய மடியில் தான் படுத்திருப்பதையும், உங்களுடைய உடுப்புக்கூட நனையாமல் இருப்பதையும் பார்த்தால் ஒரு நாளும் உங்களை மன்னிக்க மாட்டாள்!"

"உனக்குத் தெரியாது, தாரிணி! உனக்குத் தெரியாது. எங்கள் ஊர்ப்

பெண்களுக்கு எவ்வளவு தூரம் மன்னிக்கும் சக்தி உண்டு என்பது உனக்குத் தெரியாது!''

* * *

மேலே கண்ட சம்பாஷணையில் எல்லா விவரங்களும் சீதாவின் மனதில் பதியவில்லை. சில சில வார்த்தைகள்தான் பதிந்தன. ஆனால் அவற்றிலிருந்து தான் முழுகுவதற்கு முன் நடந்த சம்பவங்கள் எல்லாம் நன்றாக நினைவுக்கு வந்து விட்டன. ஏரியில் விழுந்து தத்தளித்து முழுகிக் கொண்டிருந்த தன்னைக் காப்பாற்றியது தாரிணி என்பதைத் தெரிந்து கொண்டாள். தான் அப்போது தாரிணியின் மடியில் படுத்திருப்பதையும் உணர்ந்தாள். ராகவன் 'மன்னிக்கும் சக்தி'யைப் பற்றிய பேசிக் கொண்டிருந்தபோது தாரிணி தன்னை அலுங்காமல் எடுத்து ராகவன் மடியில் போட்டதையும் அவள் உணர்ச்சியினால் அறிந்தாள்.

"சீதா! சீதா!'' என்று கூப்பிட்டுக் கொண்டே ராகவன் அவளுடைய கண்ணிமைகளைத் தொட்டான். உடனே கண்கள் திறந்துகொண்டன. திறந்த கண்கள் ராகவனுடைய முகத்தை உற்று நோக்கின. அந்தக் கண்களின் மூலமாகச் சீதா என்ன செய்தி கூறினாளோ நமக்குத் தெரியாது. "ஆம்; நீர் எவ்வளவு கிராதகராயிருந்தாலும் உம்மை மன்னிக்கும் சக்தி என்னிடம் இருக்கிறது!'' என்றுதான் சொன்னாளோ, அல்லது "என்னுடைய 'மன்னிக்கும் சக்தி'க்கும் ஒரு வரம்பு உண்டு; ஜாக்கிரதை!'' என்று எச்சரிக்கைதான் செய்தாளோ, நாம் அறியோம். ராகவனுக்கே அது தெரியவில்லை; நமக்கு எப்படித் தெரிய முடியும்?

"சீதா! நான் யார் என்று தெரிகிறதா, நன்றாகப் பார்த்துச் சொல்!'' என்றான் ராகவன்.

சீதா ஈனஸ்வரத்தில் "தெரியாமல் என்ன? தாங்கள் மிஸ்டர் சௌந்தர ராகவன் எம். ஏ.'' என்றாள்.

"பலே! பலே! அப்படிச் சொல்லு! அதோ உன் எதிரில் இருக்கிறது யார் தெரிகிறதா? சொல் பார்க்கலாம்.''

"தெரியாமல் என்ன? அம்மாவை எனக்குத் தெரியாமல் இருக்குமா?''

இதைக் கேட்ட ராகவன் சிறிது திடுக்கிட்டான். தானும் தாரிணியும் சற்று முன் பேசியது அவள் காதில் விழுந்ததா, என்ன? அல்லது மூளை கலங்கிப் போய்விட்டதா?

சீதா ராகவனுடைய மடியிலிருந்து சட்டென்று எழுந்தாள். அவள் என்ன செய்யப் போகிறாள் என்று மற்ற இருவரும் யோசிப்பதற்கு முன்பு தாரிணிக்கு நமஸ்காரம் செய்துவிட்டு அவளுடைய கைகளைப் பிடித்துக் கொண்டாள். "நீங்கள் என் உயிரைக் காப்பாற்றினீர்கள். எனக்கு இது புனர்ஜன்மம். இந்த ஜன்மத்துக்கு நீங்கள்தான் என் அம்மா!'' என்றாள்.

தாரிணி அதை மறுக்க எண்ணி, "சீதா! நீ தவறு செய்கிறாய்! உன்னைக் காப்பாற்றியது நான் அல்ல; உன்னுடைய கணவர்.........'' என்பதற்குள், சீதா, "எல்லாம் எனக்குத் தெரியும். அவருடைய உலர்ந்த உடுப்பையும் உங்களுடைய ஈரப் புடவையையும் பார்த்தாலே தெரியவில்லையா?'' என்றாள்.

இதற்குள் ராகவன் குறுக்கிட்டு, "இல்லை, சீதா! தாரிணி சொல்கிறது பொய். நீ ஊகித்ததுதான் உண்மை. தாரிணிதான் உன்னைக் காப்பாற்றினாள். எனக்கு நீந்தத் தெரியாது என்பதுதான் உனக்குத் தெரியுமே! உன்னை நான் தனியாக அழைத்து வந்திருந்தால் நம்முடைய கதி அதோ கதிதான். அடுத்த தடவை உன்னைப் படகில் ஏற்றி அழைத்துப் போவதற்குள்ளே நீந்தக் கற்றுக்கொண்டு விடுகிறேன்!'' என்றான்.

"எனக்காக வேண்டாம்; நான் இனிமேல் தண்ணீருக்குச் சமீபம் போகப் போவதேயில்லை'' என்றாள் சீதா.

* * *

சீதாவின் உள்ளத்தில் என்றுமில்லாத ஆனந்தம் பொங்கிக் கொண்டிருந்தது. அந்த ஆனந்தம் அவளுடைய உடம்பின் நரம்பின் ஒவ்வொரு அணுவிலும் வெளியாகிக் கொண்டிருந்தது. யமலோகத்தின் வாசலிலிருந்து தான் திரும்பி வந்த விஷயத்தை அவள் நன்கு உணர்ந்திருந்தாள். கொஞ்சம் தாமதித்திருந்தால் உயிர்போயிருக்கும். இது தனக்குப் புனர் ஜன்மம்; மறு பிறப்பு. தான் இன்னும் ஜீவித்திருப்பது

உண்மை. எதிரே தோன்றிய நீல நிற ஏரி, பசுந் தளிர் விருட்சம், வெண்ணிறப் பறவைகள் இவை யெல்லாம் உண்மை. தூரத்தில் இருண்டு வந்த இடத்தில் வானம் குனிந்து பூமியைத் தழுவுவதும் உண்மை. தான் ராகவனுடைய மடியில் படுத்திருப்பதும் உண்மை. எதிரே ஜரப் புடவையுடனும் கருணை நிறைந்த முகத்துடனும் தாரிணி உட்கார்ந்திருப்பதும் உண்மை. படகு உண்மை; மோட்டார் கார் உண்மை. புதுடில்லி பங்களாவில் மாமியாரிடம் விட்டு வந்திருக்கும் தன் அருமைக் கண்மணியும் உண்மை. ஆகா! இந்த உலகம் எவ்வளவு ஆனந்த மயமானது? உயிரோடு வாழ்வது எவ்வளவு இன்பகரமானது? இந்த வாழ்க்கையைத் துன்ப மயமாக்கிக் கொள்வது போல் மூடத்தனம் வேறு உண்டா?



மூன்று பேரும் அன்றிரவு திவானுடைய வீட்டுக்குப் போனபோது, வெளி ஊருக்குப் போயிருந்த திவான் திரும்பி வந்து சேர்ந்திருந்தார். ஏரியில் நடந்த சம்பவத்தைக் கேள்விப்பட்டு அவரும் அவருடைய குமாரிகளும் மிக்க கவலைக்கும் பரபரப்புக்கும் உள்ளானார்கள். தாரிணியின் தைரியத்தைப் பெரிதும் பாராட்டினார்கள். தாரிணியைத் திவானுக்குப் பெரிதும் பிடித்துப் போய் விட்டது. அவள் தன் தோழியையும் அழைத்துக் கொண்டு அங்கு வந்துவிட வேண்டும் என்றும், எல்லாரும் தம் வீட்டில் இரண்டு நாள் தங்கிவிட்டுத்தான் போக வேண்டும் என்றும் சொன்னார்.

அதை அவருடைய குமாரிகளும் ஆமோதித்தார்கள். சீதாவோ மிகவும் வற்புறுத்தினாள்.

ஆகவே, தாரிணியும் நிருபமாவும் திவானுடைய வீட்டுக்கு வந்து சேர்ந்தார்கள். திவான் வீடு அந்த இரண்டு நாளும் ஒரே கலகலப்பா யிருந்தது. அந்த இரண்டு நாளைக்குள் சீதாவும் தாரிணியும் இணை பிரியாத அந்நியோந்த சிநேகிதர்கள் ஆகிவிட்டார்கள்.



ராகவன் இதைப் பார்த்து மிக்க மகிழ்ச்சி அடைந்தான். சீதாவின் மனதில் ஏற்பட்டிருந்த களங்கம் அடியோடு நீங்கிவிட்டதாகக் காணப்பட்டது. திவானுடைய புதல்விகள், தாரிணி, நிருபமா — எல்லாரும் ராகவனுடன் சமமான சிநேகபாவத்துடன் பழகுவதைப் பார்த்து அவளுக்குப் பூரண மன நிம்மதி ஏற்பட்டது. தாரிணியின் பேரில் அபரிமிதமான அன்பும் அபிமானமும் உண்டாயின.

டில்லிக்குப் போவதற்கு முதல் நாள் தாரிணியும் சீதாவும் தனியாக இருக்க நேர்ந்தபோது, "சீதா! அன்றைக்கு உன்னிடம் ஒரு விஷயம் கேட்டேன். அதற்கு நீ சரியாகப் பதில் சொல்லவில்லை. நீ கழுத்தில் அணிந்திருக்கும் ரத்தின ஹாரத்தைப் பற்றித்தான். இப்போதாவது அதைப் பற்றிச் சொல்லலாமா?" என்றாள் தாரிணி.

"அக்கா! அன்றைக்கு எனக்கு ஏதோ பைத்தியந்தான் பிடித்திருக்க வேண்டும். யாரைப் பார்த்தாலும் அகாரணமாகக் கோபம் வந்தது. நீங்கள் கூடப் படமில் 'ஹிஸ்டீரியா' என்று சொல்லிக் கொண்டிருந்தீர்கள்.

உண்மையில் எனக்கு 'ஹிஸ்டீரியா' தானோ என்னமோ? இல்லாவிட்டால் உங்கள் பேரில் எனக்கு எதற்காக அப்படிக் கோபம் வரவேண்டும்? நினைத்துப் பார்த்தால் வெட்கமாயிருக்கிறது!" என்றாள் சீதா.

"அதைப்பற்றி நினைக்கவே வேண்டாம், சீதா! காரணம் எதுவாயிருந்தாலும் ஏரியில் அதற்கு முழுக்குப் போட்டு விட்டாய்! அடியோடு பழைய கதையை யெல்லாம் மறந்து விடு!" என்றாள் தாரிணி.

"ஆகட்டும்; மறந்து விடப் பார்க்கிறேன். நான் அணிந்திருக்கும் ரத்தின ஹாரத்தைப் பற்றி நானே சொல்ல வேண்டும் என்று நினைத்திருந்தேன். இந்த ஊருக்கு வந்ததிலிருந்து அதுவே நினைவாக இருந்தது."

"அது என்ன? இந்த ஊருக்கும் உன்னுடைய ரத்தின ஹாரத்துக்கும் என்ன சம்பந்தம், சீதா!"

"நேரான சம்பந்த மில்லை தான். ஆனாலும் ஒன்றுக் கொன்று தொடர்பாக ஞாபகம் வந்து கொண்டிருந்தது. சொல்லுகிறேன் கேளுங்கள்!"

இந்த முகவுரையுடன் சீதா ரத்தின ஹாரம் தனக்குக் கிடைத்த கதையைச் சொல்லத் தொடங்கினாள். தன்னுடைய தாயார் நோய்ப் பட்டுப் படுத்த படுக்கையா யிருந்த போது முகமூடி அணிந்த ஒரு ஸ்திரீ திடு திடு வென்று மச்சுப்படி ஏறி வந்தது, தாயாரிடம் இந்த ரத்தின ஹாரத்தையும் இரண்டாயிரம் ரூபாய் பணத்தையும் கொடுத்துத் தன்னுடைய கலியாணத்துக்காக என்று சொன்னது, கத்தியை மறந்து வைத்து விட்டுப் போனது, திரும்பி வந்து கத்தியை எடுத்துக் கொண்டு தன்னைக் கட்டி முத்தமிட்டு விட்டுப் போனது ஆகிய எல்லா விவரங்களையும் சொன்னாள். பிறகு தானும் அம்மாவும் கிட்டாவய்யருடன் கிராமத்துக்குப் புறப்பட்ட போது ரயில்வே ஸ்டேஷனில் பத்திரிகைச் சிறுவர்கள் கூவியதையும், பத்திரிகையில் வெளியாகியிருந்த செய்தியைப் படித்ததும் தனக்கு உண்டான சந்தேகத்தையும் பற்றிக் கூறினாள்.

"அக்கா! பம்பாயில் ரஜனிபூர் ராஜாவைக் கொல்ல முயற்சித்த ஸ்திரீ எனக்கு இந்த ரத்தின ஹாரத்தைக் கொடுத்தவள் தானோ என்கிற சந்தேகம் என் மனதில் அப்போதே உதித்தது. இதைப் பற்றி அம்மாவிடம் கேட்டதற்கு 'அதெல்லாம் இராது! எதையாவது நினைத்துக் கொண்டிராதே! யாரிடமும் இதைப் பற்றிப் பேசாதே!' என்று என்னைக் கண்டித்தாள். ஆனாலும் அந்தச் சந்தேகம் என் மனதிலிருந்து நீங்கவே இல்லை. இந்த ஊருக்கு நாம் வந்து சேர்ந்தது முதல் அந்த ஸ்திரீயைப் பற்றிய நினைவு அடிக்கடி வந்துகொண்டிருந்தது. அதற்கேற்றாற்போல் இவரும் ஏரிக்கரையில் அந்தச் சம்பவத்தைப் பற்றிப் பேச்சு எடுத்தார். அக்கா! உங்களுக்கு அதைப் பற்றி என்ன தோன்றுகிறது?" என்றாள் சீதா.

"உன்னுடைய சந்தேகத்தில் உண்மை இருக்கலாம். ஆனாலும் உன் தாயார் கூறியபடி நீ யாரிடமும் இதைப் பற்றிச் சொல்லாமலிருப்பதே நல்லது. உன் கணவரிடம் இதைப் பற்றி எப்போதாவது சொல்லி யிருக்கிறாயா?" என்றாள் தாரிணி.

"சொல்லவில்லை. சொன்னால் அவர் காது கொடுத்துக் கேட்க மாட்டார்."

"சொல்லாம லிருப்பதே நல்லது. புருஷர்களுடைய மனப்போக்கு விசித்திரமானது. ஒரு சமயம் அலட்சியமாய் விட்டாலும் விடுவார். இன்னொரு சமயம் 'இந்த ரத்தின மாலை என்னத்திற்கு?' என்று எடுத்து ஏரியில் எறிந்தாலும் எறிந்துவிடுவார்!"

"அந்த பயத்தினாலேதான் நானும் அவரிடம் சொல்லவில்லை."

"உன் தாயார் கொடுத்த சீதனத்தை நீ பத்திரமாய்க் காப்பாற்ற வேண்டும். உன் தாயார் பெயர் என்ன, சீதா?"

சீதாவின் தாயார், தகப்பனாரின் பெயர் முதலிய விவரங்களைக் கேட்டுத் தாரிணி தெரிந்து கொண்டாள். பிறகு "உன் அப்பா இப்போது எங்கே இருக்கிறார்? அவர் உன்னைப் பார்க்க வருவதுண்டா?" என்று கேட்டாள்.

"அப்பா என்னை வந்து பார்த்து எத்தனையோ நாளாயிற்று. அம்மா செத்துப் போய் விட்டாள். அப்பா உயிரோ டிருக்கிறாரோ, இல்லையோ, தெரியாது. கடிதம் கூட வெகுநாளாய் வரவில்லை. அக்கா! நான் அநாதை. தேவபட்டணத்தில் என் மாமா பெண் லலிதா இருக்கிறாள். என் அருமைத் தோழி. இப்போது நீங்கள் கிடைத்

திருக்கிறீர்கள். உங்கள் இருவரையும் தவிர எனக்கு வேண்டியவர்களே இல்லை."

சற்றுப் பொறுத்துத் தாரிணி, "சீதா! ரத்தினமாலை கொடுத்த அந்த ஸ்திரீ யார் என்று உன் தாயார் உன்னிடம் எதுவும் சொல்லவில்லையா?" என்று கேட்டாள்.

"இல்லை; ஒருவேளை எங்க அம்மாவுக்கும் அது தெரிந்திராது. தெரிந்திருந்தாலும் என்னிடம் சொல்லவில்லை. அந்த ஸ்திரீயைப் பற்றி நீங்கள் ஏன் கவலைப் படுகிறீர்கள்?"

"கவலைப் படுவதற்குக் காரணம் இருக்கிறது. சீதா! அந்த ஸ்திரீயை அப்புறம் நீ பார்த்ததே யில்லையே?"

"ஒரு தடவை பார்த்திருக்கிறேன்."

"எங்கே? எப்போது?"

சீதா புது டில்லியில் தான் குடியிருந்த வீட்டுக்குத் திரும்பும் நாற் சந்தியில் ஒரு நாள் அந்த ஸ்திரீயைப் பார்த்தது பற்றிச் சொன்னாள்.

"அடாடா! அவளைப் பார்க்க வேண்டும் என்று நான் எவ்வளவோ தேடிக் கொண்டிருக்கிறேன். ஆனால் அவள் என் கண்ணில் படவில்லை."

"அப்படியா, அக்கா! அவளை எதற்காக நீங்கள் தேடவேண்டும்? உங்களுக்கு அவளைத் தெரியுமா, என்ன?"

"தெரியும், சீதா!"

"எப்படித் தெரியும்?"

"அவள் என் தாயார்!"

ஒரே ஆச்சரியக் கடலில் மூழ்கிப் போனாள் சீதா. தாரிணியை வெறிக்க வெறிக்கப் பார்த்தாள். "இப்போது தெரிகிறது உண்மை! தங்களுடைய முக ஜாடை எங்கேயோ பார்த்த ஞாபகத்தை உண்டு பண்ணிக் கொண்டிருந்தது. எதனால் என்று இப்போது தெரிகிறது" என்றாள்.

"சீதா! நீ நினைப்பது தவறு. அந்த ஸ்திரீ என்னுடைய சொந்தத் தாயார் அல்ல; என்னை வளர்த்த தாயார். என்னுடைய சொந்தத் தாயும் தகப்பனும் யார் என்பது இன்றுவரையில் எனக்குத் தெரியாது. அதைக் கேட்டுத் தெரிந்து கொள்வதற்காகத்தான் ரஸியா பேகத்தை நான் தேடிக் கொண்டிருக்கிறேன்."

"அவள் பெயர் ரஸியா பேகமா? அவள் முஸ்லிம் ஸ்திரீயா?"

காந்தி என்னும் மலர்

காந்திஜீ மறைந்து விட்டார் என்பதை உணருவதே நமக்குக் கஷ்டமாக இருக்கிறது. மிகவும் சிறந்த, அழகான ஒரு பூ நம்முடைய தேசத்திலே மலர்ந்தது. அது வாடிப்போய் விட்டது. நாம் அதை எரித்து, அதன் சாம்பலைக் கங்கையில் கரைத்து விட்டோம்.

அந்த மலர் இனி இல்லா விட்டாலும், அதிலிருந்த அத்தர் நமக்குக் கிடைத்திருக்கிறது. காந்திஜீ நமக்குக் கற்றுக்கொடுத்த சத்தியமும் அன்புந் தான் அந்த அத்தர்.

புஷ்பத்துடன் அத்தரையும் நாம் கங்கையில் கொட்டி விடலாமா? கூடாது; அத்தரைப் பத்திரமாக வைத்திருப்போம். காந்தி மகானுடைய உத்தம போதனைகளைப் பக்தி சிரத்தையுடன் நம்முடைய இதயங்களிலே வைத்துப் போற்றுவோம். —ராஜாஜீ

"ஆம்; என்னை வளர்த்தவள் முஸ்லிம் ஸ்திரீதான். நாலு வருஷத்துக்கு முன்னால் நான் பீஹாருக்குப் போயிருந்தேன். அங்கே பூகம்ப விபத்துக்கு உள்ளானவர்களுக்குத் தொண்டு செய்வதற்காக. அந்தச் சமயம், ரஸியா பேகம் ரஜனிபூர் ராஜாவைக் கொல்ல முயற்சித்ததற்காக இரண்டு வருஷம் சிறைக்குப் போய் விட்டாள். விடுதலை யடைந்த பிறகு எவ்வளவோ தேடியும் பார்க்க முடியவில்லை. சீதா! நான் எப்பேர்ப்பட்ட பாக்கியசாலி என்று தெரிந்து கொண்டாயல்லவா?"

சீதாவின் கண்களில் நீர் ததும்ப, "அக்கா! அந்த ஸ்திரீயை மறுபடியும் நான் பார்த்தால் அவசியம் உங்களுக்குத் தகவல் தெரிவிக்கிறேன்" என்றாள்.

"அதோடு, சீதா! நான் அவளை அவசியம் பார்க்க வேண்டும் என்று சொல்லு. அப்படிப் பார்க்க முடியாவிட்டால் நான் என்னுடைய உயிரையே விட்டுவிடத் தீர்மானித்திருப்பதாகவும் சொல்லு!"

"அக்கா! அப்படியெல்லாம் நீங்கள் தீர்மானிக்கக் கூடாது. உங்களைத்தான் நான் முழுதும் நம்பியிருக்கிறேன்" என்றாள் சீதா.

காந்தியும் தாகூரும்

கோவை என். லக்ஷ்மணன்

"ஜப்பானிய காந்தி" என்று புகழப்படும் டாக்டர் ககாவா ஜப்பானிலிருந்து தென் இந்தியாவுக்கு வந்து, பிறகு சேவா கிராமத்துக்குப் போய் மகாத்மா காந்தியைத் தரிசித்தார். அப்போது சீனப் போர், அஹிம்சை முதலிய விஷயங்களைக் குறித்துச் சம்பாஷணை தொடங்கிற்று.

"கல்கத்தா போகிறீர்களே, கல்கத்தாவுக்கு நூறு மைலுக்கு அப்பாலுள்ள சாந்திநிகேதன் போனதுண்டா?" என்று கேட்டார் பாபுஜி.

"இல்லை, அந்த ஊர் அவ்வளவு சமீபமாக இருப்பது எனக்குத் தெரியாது" என்று டாக்டர் ககாவா சொன்னார்.

"தாகூர் ஆசிரமத்தை நீங்கள் அவசியம் பார்வையிட வேண்டும். இந்தியாவின் சக்தி சாந்திநிகேதனில்தான் உருவாகியிருக்கிறது. சாந்திநிகேதன்தான் இந்தியா!" (Santi Niketan is India) என்று காந்திஜி கூறினார்.

சுமார் ஆறு மாதங்களுக்கு முன்பு புதுடில்லியில் ஒரு சித்திரக் காட்சிச் சாலைத் திறப்பு விழாவின்போது நேருஜி இதை ஞாபகமூட்டிப் பேசினார்.

காந்தி - தாகூர் சந்திப்பு முதன் முதலாக 1915-ல் ஏற்பட்டது. அந்த வருஷத்தில்தான் தமது மாணவ—மாணவிகளுடன் தென்னாப்பிரிக்காவிலிருந்து காந்திஜி இந்தியாவுக்குத் திரும்பி வந்தார். அவர்களுக்குத் தனியாக ஓர் ஆசிரமம் அமைக்கப்படும் வரை சாந்திநிகேதனில் தங்கியிருந்தார்கள். இதைக் காந்திஜி தமது சுயசரிதத்தில் விளக்கியுள்ளார். தாகூர் - சீடர்களும் காந்தி-சீடர்களும் ஒரே தபோவனத்தில் வசித்ததால் தாகூர் — காந்தி நல்லுறவு செழித்தோங்குவதற்குச் சிறப்பான வாய்ப்பு கிடைத்தது. இதைப் பாராட்டி மகா கவி ரவீந்திரநாத தாகூர் மகாத்மா காந்திக்கு அக்காலத்தில் எழுதிய கடிதம் பொன்னேபோல் போற்றத் தக்கது. அவர்களுடைய உறவு ஆத்மீகமானது.

அடுத்தபடியாக, 1947-ம் ஆண்டில் காங்கிரஸ் மகா சபை கல்கத்தாவில் கூடியபோது, "ஜன கண மன" என்கிற பாட்டைத் தாகூர் பாடினார். 'தபால் ஆபீஸ்' என்கிற அவரது நாடகம் தாகூர் இல்லத்தில் காந்திஜியின் முன்னிலையில் நடித்துக் காட்டப்பட்டது.

1919 — 1921-ல் நடைபெற்ற மகத்தான சத்தியாக்கிரஹப் போர், தாகூரின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு விட்டது. புத்தர் அவதாரம் என்று காந்திஜியைத் தாகூர் வணங்கினார். ஆனால் நாடு முழுவதிலும் அஹிம்சா தர்மம் சரியாகப் பரவி நீடித்து நிலைக்குமா என்பதில் மட்டும் அவருக்குச் சந்தேகம் இருந்தது. அதை ஒளிவு மறைவில்லாமல் காந்திஜியிடம் அவர் அடிக்கடி தெரிவித்தார். சாந்திநிகேதனிலிருந்து ஒரு குஜராத்திக் கவிஞருக்கு 1922-ல் எழுதிய கடிதத்தில் கவி தாகூர் இதைப் பய பக்தியுடன் விளக்கியுள்ளார். இவ்விதமாகத் தங்கு தடையில்லாமல் பரிசுத்தமான கருத்து வேற்றுமையை உணர்த்தும் வழக்கத்தை உள்ளன்புடன் மகாத்மா ஆதரித்து வந்தார்.

ஆகவே, பூனாவில் உண்ணாவிரதம் ஆரம்பிக்கும் போது இதே காரணத்தைச் சுட்டிக் காட்டி, தாகூருடைய ஆசி வேண்டுமெனக் கோரி காந்திஜி தந்தி அனுப்பினார். பாபுவின் உயிருக்கு ஆபத்துநேரக் கூடிய நிலைமை உண்டானதை நமது ராஜாஜி உணர்ந்தார். காந்திஜிக்குச் சமாதானம் சொல்லுவதற்காக "நேரில் வரவேண்டும்" என்று தாகூருக்கு ராஜாஜி

பங்கு கேட்காதீர்கள்!

பிறநாட்டை எதிர்பார்க்காமல் உணவுப் பஞ்சத்தையும் உடைப் பஞ்சத்தையும் நீக்க முடியாது என்று கூறுவதை நான் ஒருபொழுதும் ஏற்றுக் கொள்ள முடியாது. இந்தியாவைப் போன்ற ஒரு தேசம் பிறநாடுகளுக்கு வேண்டிய உடையிலும் உணவிலும் பங்கு கேட்பது கூடாது. இந்தியாவில் செய்ய வேண்டியதெல்லாம் மக்களைக் கொண்டு சரியான முறையில் உற்பத்தியைப் பெருக்குவதே யாகும்.

—காந்திஜி.



தந்தி அடித்தார். சாந்திநிகேதனிலிருந்து உடனே ஓடி வந்தார் தாகூர். அந்த நெருக்கடியான சமயத்தில் டாக்டர் அம்பேத்கருடன் ஒப்பந்தம் பேசி ராஜாஜி வெற்றி யடைந்ததைக் கண்டும் கேட்டும் மக்கள் இதயத்தில் ஆனந்த வெள்ளம் பொங்கிக் கொண்டிருந்தது.

இவ்விதமான நிகழ்ச்சிச் சித்திரங்கள் எல்லாவற்றிற்கும் சிகரம்போல விளங்குகிறது மேலேயுள்ள படம். காந்தி தம்பதிகளை சாந்திநிகேதன் அன்பர்கள் முன்னிலையில் தாகூர் வரவேற்று உபசரிக்கிறார். கடைசித் தடவையாக 1940-ல் இம் மண்ணுலகில் இருவருக்குமிடையே சந்திப்பு ஏற்படுகிறது. கஸ்தூரிபா—காந்திக்கு அருகாமையில் பாதி மறைந்து உட்கார்ந்திருப்பவர் நேருஜியின் அருமைப் புதல்வி ஸ்ரீமதி இந்திரா அல்லவா? இந்த அற்புதமான படத்தை அனுப்பி உதவியவர் சாந்திநிகேதன் கலாபவனத்தைச் சேர்ந்த ஆசிரியர்களில் ஒருவரான ஸ்ரீ பெருமாள்.

"காந்தியும் 'குருதேவ்' என்று கைகுவித் திறைஞ்சும் தாகூர்" என நாமக்கல் கவிஞர் தமிழ் அன்பர்களுக்கெல்லாம் நினைவூட்டுகிறார், தமிழ் தோராஞ்சலியில். தாகூர்—காந்தி உறவு வளர்ந்த கதை உலக சரித்திரத்திலேயே ஒரு இடம் பெற்றிருக்கிறது. காந்திஜியின் விருப்பத்திற்கு இணங்கி, சாந்திநிகேதன் ஆசிரமத்தில் உலக சமாதான மகாநாடு அடுத்த ஜனவரி மாதத்தில் கூட்டப்படுவது மிகவும் பொருத்தமான காரியமல்லவா?

காந்திஜி—ஒரு புதிர்

புகழ்பெற்ற அமெரிக்க நூலாசிரியராகிய ஜான் கந்தர் காந்திஜியைப் பற்றிக் கூறியது:

"மகாத்மா காந்தியிடம் ஏசுநாதர், சாணக்கியர், 'பாபு' (தந்தை) இம் மூவரும் அற்புதமாகக் கலந்திருக்கிறார்கள். புத்தருக்குப் பிறகு அவரே தலைசிறந்த மகான். அவரைவிட அதிகமாக நம்மைத் திகைப்புக்குள்ளாக்கியவர்களை நான் பார்த்ததே இல்லை. ஒரே மனிதர் மகாத்மாவாகவும், அவதார புருஷராகவும், ஜகமறிந்த ராஜதந்திரியாகவும் இருப்பது மானிட விதிகளை மீறியதாகும்."





சரித்திரம் சொல்லும் சாட்சி

ஜெயமணி

(சென்ற வாரத் தொடர்ச்சி)

முதலாவது நிஜாமின் மூத்த புதல்வருக்கு விஷம் வைத்து அவரைக் கொன்றுவிட்டு அவருடைய தம்பி சாலபட் ஜங் பட்டத்துக்கு வந்தார் அல்லவா? சில வருஷங்களுக்குப் பின் சாலபட் ஜங்கைச் சிறைப்படுத்திவிட்டு அவருடைய தம்பியான நிஜாம் அலி ஹைதராபாத் மண்டலாதிபதியாகி, துரோகம் செய்யும் தமது பரம்பரைக் குணம் சரித்திரத்தில் இடம் பெறுமாறு செய்தார்!

முதலாவது நிஜாமின் புதல்வர்களான நாஸிர் ஜங், முஸாபர் ஜங், சாலபட் ஜங், நிஜாம் அலி இந்த நால்வரும் ஒருவரையொருவர் துரோகம் செய்துவிட்டுப் பட்டத்துக்கு வந்தார்கள் என்பது சரித்திரம் கூறும் ருசிகரமான விஷயமாகும்.

அப்போது நிஜாம் அலிக்கு மகாராஷ்டிரர்களின் படையெடுப்புகளை எதிர்த்து நிற்க முடியாததால், அவர் மகாராஷ்டிரர்களிடம் சரணடைந்து அவர்களுடன் ஒப்பந்தம் செய்து கொள்வதும், பின்னர் அந்த ஒப்பந்தத்துக்கு விரோதமாக இரகசியமாய் பிரிட்டிஷாரின் உதவியை நாடுவதுமாகத் தமது காலத்தைக் கழித்து வந்தார். இந்திய சர்க்காருடன் ஒப்பந்தம் செய்துகொண்டு, பின்னர் இரகசியமாகத் தற்போதைய நிஜாம் துரோகமான காரியங்களில் ஈடுபட்டதைப் போலவே, அவரது பாட்டனுக்கு முப்பாட்டனான நிஜாம் அலியும் செய்து வந்தார்!

நிஜாம் அலி மேலே குறிப்பிட்ட சூழ்ச்சிகளுடன் நின்றுவிடவில்லை.

தென்னிந்தியாவில் பிரிட்டிஷாரின் ஆதிக்கம் ஏற்படாமல் தடுப்பதற்காகப் போர் புரிந்து வந்த ஹைதர் அலியையும் திப்பு சுல்தானையும் துரோகம் செய்து, இங்கு பிரிட்டிஷாரின் ஆதிக்கம் நிலைக்கும்படி செய்த 'முழுப் பெருமை'யும் நிஜாம் பரம்பரையையே சார்ந்ததாகும்.

யார் கை ஓங்கியதோ அவர்களிடம் சரணாகதி அடைந்து தமது ராஜ்யத்தைக் காப்பாற்றிக் கொள்வதில் நிஜாம் வம்சத்தினர் 'சூரர்'களாகத் திகழ்ந்தனர். ஹைதர் அலி, திப்பு சுல்தான் முதலியோரின் ஆட்சி முறை புகழத் தக்கதல்லவெனினும், அவர்கள் ஆங்கிலேயர்களிடம் சரணாகதி அடைவதை வெறுத்து இறுதிவரையில் யுத்தம் செய்து போர் முனையில் வீழ்ச்சியுற்றனர். அவர்களும் நிஜாமின் தந்திரத்தைப் பின்பற்றியிருந்தால், தங்களுடைய குட்டி ராஜ்யங்களைக் காப்பாற்றிக் கொண்டிருக்கலாம்!

* * *

1803-ம் ஆண்டு நிஜாம் அலி காலமான பின், அவருடைய நிக்கா மனைவியின் புதல்வரான சிகந்தர் ஜா (ஆறாவது நிஜாம்)

பட்டத்துக்கு வந்தார். முதலாவது நிஜாம் காலத்திலிருந்தே அங்கு ஆங்கிலேயரின் செல்வாக்கு அதிகமாகி வந்தது. காலக்கிரமத்தில் நிஜாம் தமது மந்திரிகளை நியமிக்கும் விஷயத்தில்கூடச் சுதந்திரமின்றி ஆங்கிலேயர்களின் கட்டளைக்குக் கீழ்ப்படிய வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

சிகந்தர் ஜா தம்முடைய வாழ்க்கையைப் பெரிதும் குடியிலும் களியாட்டங்களிலும் கழித்த பின் 1829-ல் மாண்டார். பிறகு அவரது புதல்வரான நாஸிர் உத் தௌலா சுமார் இருபத்தெட்டு வருஷகாலம் ஆட்சி புரிந்தபின், நாஸிரின் புதல்வரான அப்ஸல் உத் தௌலா பட்டத்துக்கு வந்தார்.

* * *

1857-ம் வருஷம் அப்ஸல் உத் தௌலா பட்டத்துக்கு வந்தபோதுதான் இந்தியாவில் ஆங்கிலேயர்களை எதிர்த்து முதலாவது சுதந்திர யுத்தம் ஆரம்பமாயிற்று. நிஜாம் வம்சத்தினரின் துரோகமானது அப்போதுதான் சிகரத்தை அடைந்தது! அவ்வமயம் நிஜாம் அப்ஸல் உத் தௌலாவும் அவரது பிரதம மந்திரியான ஸாலர் ஜங்கும் ஆங்கிலேயர்களின் தாசர்களாகி அவர்களுக்குத் துருப்புகளை அனுப்பி உதவி புரிந்ததால், டில்லியில் மொகலாய சக்கரவர்த்தி பகதூர் ஷா சிறைப்பட்டு, அவரது புதல்வர்களான இளவரசர்கள் ஆங்கிலேயர்களால் கொலையுண்டனர். அவ்வாறாக மொகலாய சக்கரவர்த்தியின் வம்சமே அழிந்து, மொகலாய சாம்ராஜ்யத்தின் கடைசிச் சின்னமும் மறைந்தது; சுதந்திர யுத்தத்தில் தேசபக்தர்கள் தோல்வியுற்று ஆங்கிலேயரின் ஆட்சி இன்னும் அதிக உரம் பெற்றது.

அப்ஸல் உத் தௌலா காலமான பின் மீர் மஹ்பூப் அலிகான் பட்டத்துக்கு வந்தார். அவருக்குப் பின் 1911-ம் வருஷம் ஹைதராபாத் சமஸ்தானத்தின் அதிபராக வந்தவர்தான் அவருடைய புதல்வரும், ஏழாவது நிஜாமும், தற்போதைய மன்னருமான மீர் உஸ்மான் அலிகான் ஆவார்.

தற்போதுள்ள இந்திய மன்னர்களின் வம்சத்தினரில் சிலர் விரோதிகளை எதிர்த்து வீரப் போர் புரிந்து தங்களுடைய ராஜ்யங்களைக் காப்பாற்றிக்கொண்டனர். இவர்களைத் தவிரப் புறமுதுகு காட்டுவதையோ, சரணாகதி அடைவதையோ வெறுத்து வீர யுத்தம் புரிந்து தங்களுடைய உயிர், பொருள், குடும்பம், ராஜ்யம் எல்லாவற்றையும் இழந்து சரித்திரத்தில் புகழிடம் பெற்றவர்களும் உள்ளனர்.

ஆனால் நிஜாம் வம்சத்தினர் அத்தகைய தப்புத் தண்டா எதிலும் மாட்டிக் கொண்டதில்லை! அவர்களின் ஒரே இலட்சியம் எக்கேடு கெட்டாவது தங்களுடைய உயிரையும் ராஜ்யத்தையும் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்பதுதான்!

அதற்காக அவர்கள் சகோதரர்களைக் கொலை செய்யவோ, சொந்த நாட்டினரைப் பிறருக்கு அடிமைகளாகச் செய்யவோ, அன்னியர்களுடன் சேர்ந்துகொண்டு தங்களுடைய இனத்தினரைக் காட்டிக் கொடுக்கவோ, நகரங்களைக் கொள்ளையிட்டுச் செல்வம் சேகரிக்கவோ தயங்கியதில்லை என்பது சரித்திரப் பிரசித்தமான விஷயங்களாகும். "பிரிட்டிஷாரின் அத்தியந்த பக்தர்" என்று நிஜாமைப் புகழ்ந்துள்ள ஆங்கில சரித்திராசிரியர்கள்கூட மேற்படி உண்மைகளையெல்லாம் வேண்டா வெறுப்புடன் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

* * *

நிஜாம் மன்னர்கள் யாவரும் மகாராஷ்டிரர்கள், பிரிட்டிஷார், பிரஞ்சுக்காரர்கள் முதலியோருடைய உதவி பெற்று அவர்களுடைய தயவில்தான் வாழ்ந்து வந்திருக்கின்றனரேயன்றி, ஒரு காலத்திலும் அவர்கள் சுதந்திர மன்னர்களாக இருந்ததில்லை.



ஹைதர் அலி

பிரிட்டிஷார் இந்தியாவை விட்டு வெளியேறும் வரையில் நிஜாமுக்கு பிரிட்டிஷாரின் கட்டளைக்கு விரோதமாகத் திவானை நியமித்துக் கொள்வதற்குக்கூட உரிமையில்லை! "ஒழுங்காக நடந்து கொள்க!" என்று பிரிட்டிஷ் சர்க்கார் நிஜாமைப் பல தடவைகளிலும் எச்சரித்திருக்கிறார்கள்.

1911-ம் வருஷத்தில் தற்போதைய நிஜாம் பட்டத்துக்கு வந்தபோது, அவருக்கு வைஸ்ராய் வார்டு ஹார்டிஞ்ஜ் இரண்டு வரு



ஹைதராபாத்தில் ஒரு காட்சி

ஷம் கெடு கொடுத்து, அவர் அந்தக் காலத்துக்குள் சரிவர நடந்து கொள்ளாவிடில், ஹைதராபாத் ரீஜன்ஸி சபையின் ஆட்சியில் விடப்படும் என்று எச்சரித்தார். அதாவது, ஹைதராபாத் சமஸ்தான விஷயத்தில் வைஸ்ராய்க்கே அதிக அதிகாரங்கள் இருந்து வந்திருக்கின்றன. நிஜாமுக்கு பிரிட்டிஷார் எத்தனை தடவை எச்சரிக்கை விடுத்தனர் என்பதைக் குறிப்பிடுவதாயின், அது மிகவும் நீண்ட ஜாப்தாவாகி விடும்!

இவ்விஷயமாகச் சிற்சில சமயங்களில் நிஜாமுக்கும் பிரிட்டிஷாருக்கும் தகராறு ஏற்பட்டதெனினும், இறுதியில் நிஜாம்தான் பணியும்படி நேர்ந்தது.

அதாவது நிஜாம் எக்காலத்திலும் தமக்குத் தாம் எஜமானனாக இருந்ததில்லை. முதலில் மொகலாய சக்கரவர்த்தி, மகாராஷ்டிரர்கள், பிரஞ்சுக்காரர்கள் முதலியோர் அவருடைய எஜமானர்களாக இருந்தனர். பிறகு 1947-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 15-ந் தேதி வரையிலும் பிரிட்டிஷார் எஜமானர்களாக இருந்தனர்.

நிஜாமின் இராணுவ விஷயங்களிலும், உள்நாட்டு நிர்வாகத்திலும், மந்திரிகள் நியமன விஷயத்திலும் எத்தனையோ தடவை பிரிட்டிஷார் தலையிட்டிருக்கிறார்கள். நிஜாமின் புதல்வர்களைக் கட்டுப்படுத்தும் அதிகாரம்கூட பிரிட்டிஷாரின் கையிலிருந்தது.

நிஜாம் ஒரே ஒரு தடவை தமது நிலையை மறந்து சுதந்திர ஆசை கொண்டார். 1926-ம் வருஷம் இந்தியாவில் வைஸ்ராயாக இருந்த லார்டு ரீடிங்கினிடம் தமது ஆசையைத் தெரிவித்தார். ரீடிங் அவருக்கு அளித்த பதில் நிஜாமின் ஆசையில் கடைசி கடைசியாக மண்ணைப் போட்டு விட்டது. பிரிட்டிஷாரின் தயவின்றேல் நிஜாமுக்கு இந்த உலகிலே இடமில்லை என்ற தோரணையில் ரீடிங் அவருக்குப் பதில் அளித்தது சரித்திரப் பிரசித்தமான சம்பவமாகும்.

* * *

இந்தியாவிலுள்ள மற்ற சமஸ்தானங்களுக்கு இல்லாத தனி கௌரவம், அந்தஸ்து அல்லது உரிமை எதுவும் ஹைதராபாத்துக்கு எக்காலத்திலும் இருந்ததில்லை.

சிட்டுக்குருவி யொன்று சமுத்திரத்தைப் பார்த்து, "ஹதம் செய்து விடுவேன்"

என்று பயமுறுத்தியதாம்! அதைப்போலவே தான், ஒரு காலத்தில் மொகலாய சாம்ராஜ்யத்துக்கும், பின்னர் பிரஞ்சுக்காரர்களுக்கும், நேற்று பிரிட்டிஷாருக்கும் கீழ்ப்பட்டு இருந்துவந்த நிஜாம், இன்று இந்திய சர்க்காருடன் சமத்துவமாகவும் சிநேகமாகவும் இருக்க விரும்பாமல் கொள்ளைக்காரனான ரஸ்வியின் உதவியையும் ஆகாசத் திருடனான ஸிட்னி காட்டனின் உதவியையும் நாடி 'இந்தியாவை ஹதம் செய்து விடுவோம்' என்று கூறினார்.

பாரதநாடு சென்ற வருஷம் ஆகஸ்டு மாதம் 15-ந் தேதி சுதந்திரம் பெற்றபின், இந்தியாவிலுள்ள சகல சுதேச மன்னர்களும் தங்களுடைய எதிர்கால நல்வாழ்வு இந்தியாவுடன் ஐக்கியமாவதையே பொறுத்திருக்கிறது என்பதை உணர்ந்து கொண்டனர்.

அப்படியெல்லாம் இருந்தும் நிஜாம் கடைசி வரையில் சகுனிகளின் துர்ப்போதனைக்குச் செவிமடுத்து, தம்முடைய பிரஜைகளுக்குச் சொல்லொணாத கஷ்ட நஷ்டங்களை விளைவித்தார்.

ஹைதராபாத் சமஸ்தானத்தில் நடைபெற்ற சொல்லொணா அக்கிரமங்களுக்கெல்லாம் உண்மையில் காஸிம் ரஸ்வியும் ரஸாக்கர்களும் லெயிக் அலி மந்திரி சபையினரும் பொறுப்பாளிகளாயினும், சமஸ்தானாதிபதி என்ற ஹோதாவில் நிஜாமுக்கும் அதில் பங்கு உண்டு என்பதையும் அவர்கள் செய்த கொலை, கொள்ளை, தீ வைத்தல் ஆகிய அட்டூழியங்கள் நிஜாமுக்கும் கெட்ட பெயரை உண்டாக்கியது என்பதையும் யாரும் மறுக்க முடியாது.

எனவே முதலாவது நிஜாமின் விஷப் பல்லைப் பிடுங்குவதற்காக 1717-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 13-ந் தேதி பேஷ்வா பாலாஜி பாஜிராவ் படையெடுத்தது போல, சுதந்திர இந்திய சர்க்கார் சைன்யங்களும் தற்போதைய நிஜாமின் விஷப் பல்லைப் பிடுங்குவதற்காக 1948-ம் வருஷம் *செப்டம்பர் மாதம் 13-ம் தேதி படையெடுத்து வெற்றி பெற்றனர்.

நிஜாம் எக்காலத்திலும் சுதந்திரராக இருந்ததில்லை என்பதைச் சரித்திரம் நிரூபிக்கிறது.

இனி எக்காலத்திலும் சுதந்திரராக இருக்கப் போவதுமில்லை என்பதைச் சமீபகால நிகழ்ச்சிகள் நிரூபித்திருக்கின்றன. (முற்றும்)


* * * *

எது சத்தியாக்கிரஹம்?

“இப்பொழுதெல்லாம் நம் நாட்டில் எத்தனையோ சத்தியாக்கிரஹங்கள் நடக்கின்றன. சத்தியாக்கிரஹம் நடக்கிறது என்று சொல்லும் இடங்களில் எல்லாம் உண்மையில் சத்தியாக்கிரஹம்தான் நடக்கிறதா, அல்லது துராக்கிரஹமா என்பது எனக்குச் சந்தேகமாயிருக்கிறது.

நம் நாட்டில் ஒன்றின் பெயரைச் சொல்லி அதற்கு எதிரிடையாகக் காரியங்கள் செய்வது என்பது வழக்கமாகிவிட்டது. இந்தக் காலத்தில் எங்கு பார்த்தாலும் எந்தக் காரியத்துக்கு வேணுமானாலும் சத்தியாக்கிரஹம் செய்ய முயற்சிக்கிறார்கள். ஆனால் அவர்கள் தாங்கள் செய்யும் காரியம், 'உண்மையானதா, பொய்யானதா?' என்பதை முதலில் நன்கு உணர்ந்து கொள்ளவேண்டும். அது பொய்யானதாக இருந்தால் அதற்கு சத்தியாக்கிரஹம் செய்யவே கூடாது. அது உண்மையானதாயிருந்தால், எந்த நிலைமையிலும் அதற்காக சத்தியாக்கிரஹம் செய்யலாம். 'நமக்கு ஏதாவது கிடைக்குமே' என்ற உத்தேசத்துடன் செய்யும் சத்தியாக்கிரஹம் சத்தியாக்கிரஹமாகாது. அது துராக்கிரஹமாகத்தான் ஆகும். நான் சத்தியாக்கிரஹத்துக்கு முக்கியமான நிபந்தனைகள் அநேகம் சொல்லியிருக்கிறேன். இரண்டு நிபந்தனைகள் அதி முக்கியமானவை என்றும் சொல்லியிருக்கிறேன். முதலாவதாக, எதற்காகப் போராடுகிறோமோ, அது உண்மையாக இருக்க வேண்டும். இரண்டாவதாக, சத்தியாக்கிரஹத்துக்கு அஹிம்சை அடிப்படையாக இருக்க வேண்டும்.”

—காந்திமகான் திருவாக்கு.




உலகம் போற்றும் உத்தமருடைய சொத்து! - அவர் உபயோகித்துவந்த அந்த மெத்தையையும் ராட்டையையும் 'மேஜையையும் பார்த்தீர்களா?

•

மகாத்மாஜியின் 'அஸ்தியைக் கரைத்து விட்டுப் பிரயாகையிலிருந்து திரும்பிவரும் அவருடைய உத்தம சிஷ்யை சுசீலா நாயரும், புதல்வர் ராம் தாஸ் காந்தியும்.







காந்தி மகான் கால் பட்டுப் புனிதமடைந்த பிர்லா மாளிகை நந்தவனம்: அவர் திருவடிகளை அலங்கரித்த பாதுகைகள்.

அதோ, தூரத்தில் நாற்புறமும் மூங்கில் கட்டப்பட்டிருக்கிறதே, அதுதான் மகாத்மாஜி பிரார்த்தனை நடத்திய புண்ணிய ஸ்தலமாகும்: காந்திஜி அமரரான புனித பூமியும் இதுதான்.

காலக்ஷேபம்

ஒரு நந்தவனத்துப் புல் தரையில் ஒருவர் உலாவிக் கொண்டிருந்தார். இன்னொருவர் அவரை அணுகினர்.

புதியவர்:—மன்னிக்க வேண்டும். கொஞ்சம் தயவு செய்து உங்கள் பேனாவைக் கொடுப்பீர்களா?

முதல்வர்:—ஆகா! இது என்ன பிரமாதம்? இந்தாருங்கள்!

புதியவர் (அவரிடமிருந்து பேனாவை வாங்கிக் கொண்டு):—ரொம்ப வந்தனம்; உங்கள் பெயரையும் விலாசத்தையும் குறித்துக் கொள்ளுவதற்காகத்தான் பேனாவைக் கேட்டேன். 'பார்க்' பாது காப்பு விதிப்படி இந்தப் புல் தரையின் மேல் நடக்கக் கூடாது. தயவு செய்து நீங்கள் போலீஸ் ஸ்டேஷனுக்கு வர வேண்டும்!

★

பல் வைத்தியர் (நோயாளியைப் பார்த்து):-உங்களுக்கு ரொம்பவும் தொந்தரவு கொடுக்கும் இந்தப் பல்லைப் பிடுங்குவது மிகவும் சிரமம். மயக்கம் கொடுத்துத்தான் எடுக்க வேண்டும். அத்துடன் 'பில்'லும் கொஞ்சம் அதிகமாகும்.

நோயாளி (பையில் கைவிட்டு மணிபர்ஸைத் தேடிக் கொண்டே):—சரி, அப்படியே செய்யுங்கள்.

டாக்டர் (அசட்டுச் சிரிப்புடன்):—நீங்கள் இப்போதே கொடுக்க வேண்டும் என்பதில்லை; பிறகு கொடுக்கலாம்.

நோயாளி:—அது எனக்குத் தெரியும். நீங்கள் எனக்கு மயக்கம் கொடுக்கு முன் என் பணத்தை எண்ணி வைத்துக் கொள்ளுகிறேன்!

★

அம்மா:—என்டா, ராமு! உனக்கு மட்டும் பள்ளிக்கூடத்திலிருந்து வருவதற்கு இத்தனை நேரம் என்ன? காரணம்?

ராமு:—நிமோனியா!

அம்மா (திகைப்புடன்):—என்ன, நிமோனியாவா? பள்ளிக்கூடத்துக்குப் போகும் போது உடம்பு ஒன்றுமில்லாமல்தானே இருந்தாய்? இங்கே வா!

ராமு:—எனக்கு உடம்புக்கு ஒன்றும் இல்லையம்மா! அந்த வார்த்தைக்கு 'ஸ்பெல்லிங்' தெரியவில்லை. அதனால்தான் உபாத்தியாயர் நிறுத்திவிட்டார்!

டாக்டர் (நோயாளியைப் பார்த்து):—இந்த மருந்தைச் சாப்பிடு; ஒரு வாரத்தில் உடம்பு சௌக்கியமாகிவிடும். ஆனால் முக்கியமாக நீ ஒன்று கவனிக்க வேண்டும். இந்த மருந்து சாப்பிட்டால் கொஞ்சம் தேகப்பயிற்சி செய்ய வேண்டும். அதற்காக ஒரு காரியம் செய். தினந்தவறாமல் காலை மாலை தவறாமல் இரண்டு மைல் தூரமாவது உலாவுவது என்று வைத்துக்கொள்.

நோயாளி:—அப்படியானால் நான் லீவு எடுக்க வேண்டாம் என்று சொல்லுங்கள்; நான்தான் தபால்காரன் ஆயிற்றே!

★

மாஜிஸ்ட்ரேட் (கான்ஸ்டபிளைப் பார்த்து):-இந்த மனிதன் 'அம்பிகா விலாஸ்' ஹோட்டலிலிருந்து நேற்று இரவு ரேடியோவைத் திருடினதாக வழக்கு இல்லையா?


கான்ஸ்டபிள்:—ஆமாம், ஸார்!

மாஜிஸ்ட்ரேட்:—சரி, முப்பது ரூபாய்!

கான்ஸ்டபிள்:—அபராதம்தானே, ஸார்?

மாஜிஸ்ட்ரேட்:—இல்லை, இல்லை! இவனுக்கு முப்பது ரூபாய் இனாமாகத் தருகிறேன். ஏனென்றால் நான் அம்பிகா விலாஸ் ஹோட்டலுக்குப் பக்கத்தில்தானே குடியிருக்கிறேன்?

அவளுக்கு வேண்டியது!



"பாகவதர்வாள்! நீங்கள் தானே இப்போது பாடினது?"

"ஆமாம், உங்களுக்கு என்ன வேணும்?"

"ஒன்றுமில்லை, என்னுடைய 'கார் டிரைவர்' எங்கேயோ போய்விட்டான். உங்களால் முடிந்தவரை கத்திப் பார்த்து அவனைக் கொஞ்சம் கூப்பிடுகிறீர்களா?"

முடிவில்லாத சண்டை

விந்தன்

ஆம், அந்த 'முடிவில்லாத சண்டை' நடந்து கொண்டேதான் இருந்தது!

அவை இரண்டில் ஒன்று அழியும் வரை அந்தச் சண்டை தொடர்ந்து நடந்தாலும் நடக்கும் — நடக்கட்டும். நடக்கட்டும்; அவற்றின் அழிவைப் பார்த்த பிறகாவது மற்ற ஜீவராசிகளுக்குப் பலாத்காரத்தில் உள்ள நம்பிக்கை தொலையட்டும்!

நல்ல வேளை! நானும் ரங்காவைப் பின்பற்றியிருந்தால்......?

சரி, கதையை முழுவதும்தான் கேளுங்களேன்!

ooo

நாங்கள் வசித்து வந்த மாந்தோப்பில் எங்களைப்போல் எத்தனையோ கிளிகள் வசித்து வந்தன. நானும் ரங்காவும் அடுத்தடுத்து இருந்த மரப் பொந்துகளில் வசித்து வந்தோம். எங்கள் தோப்புக்கு இரண்டு மூன்று மைல்களுக்கு அப்பால் ஒரு வெற்றிலைத் தோட்டம் இருந்தது. அந்தத் தோட்டத்தைச் சுற்றி வேலிக்காக அகத்திச் செடிகள் வைக்கப்பட்டிருக்கும். பொழுது விடிந்ததும் எங்களையெல்லாம் அங்குதான் பார்க்கலாம்; ஆடலும் பாடலுமாக ஒரே ஆனந்தத்தில் மூழ்கியிருப்போம்.

அந்தத் தோட்டத்தின் பக்கமாக எத்தனையோ பேர் போவார்கள், வருவார்கள். அவர்களில் எத்தனை பேர் எங்கள் ஆடலிலும் பாடலிலும் தங்கள் மனதைப் பறிகொடுத்து நிற்பார்கள் என்கிறீர்கள்?—ஒரிருவர்தான்!

அந்த ஒரிருவரைப் போல் எல்லோருமே அழகை அனுபவிப்பவர்களாயிருந்தால் இந்த உலகம் இப்படியா இருக்கும்?

நன்றாய்ச் சொன்னேன்!—அழகை அனுபவிக்காமலிருக்கிறார்களே, அவர்களால் மட்டுமா இந்த உலகத்தில் அமைதிக்குப் பங்கம் விளைகிறது? அழகை அனுபவிக்கிறார்களே, அவர்கள்கூடத்தான் அமைதிக்குப் பங்கம் விளைவிக்கிறார்கள்!

அது கிடக்கட்டும்; ஒரு நாள் வழக்கம்போல் வெற்றிலைத் தோட்டத்துக்குச் சென்ற நாங்கள் இருவரும் உடனே வீடு திரும்பவில்லை. அதற்குக் காரணம் ரங்காதான். அன்று என்னமோ அது இருந்தாற்போலிருந்து, "என்ன, சுகப்பிரம்மமே! இந்த வெற்றிலைத் தோட்டமும் அந்த மாந்தோப்பும் சேர்ந்ததுதானா உலகம்?" என்று கேலியாகக் கேட்டுவிட்டுச் சிரித்தது.

"ஏன், வேறு எங்கே போகவேண்டுமென்கிறாய்? உண்பது இங்கே, உறங்குவது அங்கே!—இவை போதாதா, நமக்கு?" என்றேன்.

"ஏது, வரவர நீயும் மனிதர்களைப் போலாகிவிட்டாயே!"

"உனக்கு என்ன தெரியும்? அவர்களில் எத்தனையோ பேருக்கு உண்பதற்கு உணவில்லை; உறங்குவதற்கு இடமில்லை. அப்படிப்பட்டவர்களை வேறு என்ன செய்ய வேண்டுமென்று சொல்கிறாய்?"

"சரிசரி, அதெல்லாம் நாகரிக உலகத்துச் சமாசாரம்—நமக்கு வேண்டாம். நீ வா, இப்படி எங்கேயாவது போய்ச் சுற்றிவிட்டு வரலாம்" என்று சொல்லிச் சிறகுகளைப் படபடவென்று அடித்து ரங்கா தன் குஷியை வெளியிட்டது.

அதன் குஷியைப் பார்த்ததும் எனக்கும் என்னையறியாமல் குஷி பிறந்துவிட்டது. அவ்வளவுதான்; இருவரும் ஸ்டேஷனுக்குச் செல்லவில்லை; 'க்யூ'வில் நிற்கவில்லை; டிக்கெட் வாங்கவில்லை; ரயிலிலோ விமானத்திலோ சவாரி செய்யவில்லை; சிறகுகளைப் படபடவென்று அடித்துக்கொண்டு வான வீதியை நோக்கி 'ஜம்'மென்று கிளம்பினோம். பறந்தோம், பறந்தோம், பறந்தோம், அப்படிப் பறந்தோம்; போனோம், போனோம், போனோம், அப்படிப் போனோம்—காட்டையும் நகரத்தையும் கடந்து, காட்டையும் கடலையும் கடந்து, மலையையும் மடுவையும் கடந்து, நதியையும் புனலையும் கடந்து போய்க்கொண்டே இருந்தோம். ஆமாம், நிற்கவே யில்லை!

கடைசியில் எங்கே எங்களுக்கு அலுத்துப் போயிற்றோ, அங்கே உட்கார்ந்தோம். எங்களைத் தொடர்ந்து வர முடியாமல் சூரியன் வெட்கிப்போய் மலைத் தொடரில் ஒளிந்துகொள்ள ஓட்டமாய் ஓடினான். அவனைப் பார்த்துச் சிரித்த வாய் மூடவில்லை; ஆணைப்பட்ட சூரியனையே வெற்றிகொண்ட எங்களை மிரட்டுவதற்காகப் பேதை இருள் கவ்வி வந்தது. அதன் மூஞ்சையும் முகரக் கட்டையையும் பார்த்துக் கொண்டிருக்க இங்கே யாருக்குப் பிடிக்கிறது?—"என்ன, வீட்டுக்குத் திரும்பி விடுவோமா?" என்றேன் சங்காவை நோக்கி.

"இனிமேல் எப்படித் திரும்புவது?" என்று கேட்டது சங்கா.

"திரும்பாமல் என்ன செய்வதாம்?"

"இங்கேயே எங்கேயாவது தங்கி இரவைக் கழித்துவிட்டுப் பொழுது விடிந்ததும்தான் போகவேண்டும்."

"ரொம்ப அழகுதான்!" — இப்படிச் சொன்னேனோ இல்லையோ, பாழும் மழை 'சடசட' வென்று கொட்ட ஆரம்பித்து விட்டது. அதைப் பார்த்த இருளோ 'பளிச், பளிச்' என்று மின்னி எங்களைப் பார்த்து விழுந்து விழுந்து சிரித்தது.

எப்படி இருக்கும், எங்களுக்கு?—இருந்த குஷியெல்லாம் மறைந்து இருவரும் செய்வது இன்னதென்றறியாமல் விழித்தோம்.

"இப்படியே விழித்துக் கொண்டிருந்தால் மழையில் நனைந்து சாகவேண்டியது தான்! — வா, போவோம்!" என்று சொல்லி, சங்கா அருகிலிருந்த ஒரு சோலையை நோக்கிப் பறந்தது. நானும் அதைப் பின் தொடர்ந்து சென்றேன்.

அந்தச் சோலையிலிருந்த மரங்கள் ஒவ்வொன்றையும் அணுகி, ஏதாவது பொந்து இருக்கிறதா என்று கூர்ந்து கூர்ந்து பார்த்துக்கொண்டே போனோம். அப்பாடா! எத்தனையோ மரங்களைப் பார்த்த பிறகு அடுத்தடுத்து இருந்த இரு மரங்களில் இரண்டு பொந்துகள் இருந்தன. எங்களுடைய சந்தோஷத்துக்குக் கேட்கவா வேண்டும்? உடனே ஆளுக்கொரு பொந்தில் புகுந்து கொண்டோம்.

"இனி மழையும் இருளும் நம்மை என்ன செய்யும்?" என்று நாங்கள் கவலையற்றிருந்தபோது, எங்கிருந்தோ இரண்டு கிளிகள் நாங்கள் இருந்த பொந்துகளைத் தேடி வந்து சேர்ந்தன. விசாரித்துப் பார்த்ததில், பொந்துகள் இரண்டும் அந்தக் கிளிகளினுடையவை என்று தெரிந்தது!



அப்புறம் பேச்சுக்கு என்ன இருக்கிறது? நான் பேசாமல் வெளியே வந்து அந்தப் பொந்துக்கு எதிர்த்தாற்போலிருந்த ஒரு கிளையில் உட்கார்ந்து கொண்டேன். அடுத்த நிமிஷம் என்னை முறைத்துப் பார்த்துக்கொண்டே நான் இருந்த பொந்துக்குள் ஒரு கிளி சென்றுவிட்டது.

இன்னொரு கிளிக்குத்தான் சங்கா இடம் கொடுக்கவில்லை. அப்படிக் கொடுப்பது 'பயங்கொள்ளித் தனம்' என்று நினைத்து, அது 'பலப் பரீட்சை' செய்ய ஆரம்பித்தது.

"மரியாதையாக வெளியே வந்துவிடுகிறாயா, இல்லையா?" என்று கேட்டது வெளியே இருந்த கிளி.

"முடியாது; உன்னுடைய மிரட்டலுக்கெல்லாம் நான் பயந்துவிட மாட்டேன்!" என்றது சங்கா.

அவ்வளவுதான்; வெளியேயிருந்த கிளி பொறுமை இழந்து உள்ளே நுழைந்தது. அதற்குப் பிறகு கேட்க வேண்டுமா? இரண்டும் ஒன்றையொன்று அலகால் குத்திக் கொள்வதும் சிறகால் அடித்துக் கொள்வதுமாக இருந்தன. பலவந்தமாக வெளியே தள்ளப்பட்ட சங்கா, அந்தக் கிளியின் எதிர்ப்பை மீறி உள்ளே செல்வதும் வெளியே வருவதுமாக இருந்தது. எனக்கோ அதனுடைய அதர்மக் கட்சியில் சேர மனமில்லை. ஆகவே, துணைக்கு வரவில்லை என்பதற்காக அது என்னைத் திட்டியதையும் பொருட்படுத்தாமல் நான் இருந்த இடத்திலேயே இருந்தேன்.

போராட்டம் நீடித்தது!

அந்த நீடித்த போராட்டத்தை நானும் நீடித்த மழையில் நனைந்த வண்ணம் இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டேயிருந்தேன். என் சிறகுகளெல்லாம் நனைந்து உடம்பு 'வெடவெட' வென்று நடுங்க ஆரம்பித்து விட்டது.

அந்த நடுக்கத்தில் கிளையை விட்டுத் தவறிக் கீழே விழுந்து விடுவோமோ என்றுகூட நான் பயந்துபோனேன்.

ஆயினும் என்ன செய்வது?—ரங்காவைப் போல் நானும் பலாத்காரத்தைப் பிரயோகிப்பதா?

'வேண்டாம்; நடப்பது நடக்கட்டும்' என்று நான் பேசாமலிருந்தேன். எனக்கு எதிர்த்தாற்போல் பொந்துக்குள் இருந்த கிளியோ, அடிக்கடி வெளியே தலையை நீட்டி என்னைப் பரிதாபத்துடன் பார்ப்பதும், பதவிசுபோல் உள்ளே சென்று விடுவதுமாக இருந்தது.

இப்படியே இருப்பதற்கு அதனுடைய 'அந்தராத்மா' இடம் கொடுக்கவில்லையோ என்னமோ, சிறிது நேரத்துக்கெல்லாம் அது தலையைப் பலமாக ஆட்டி என்னை "வா, வா!" என்று அழைத்தது. நான் அதன் அருகே சென்றேன். "இப்படி மழையில் நனைந்தால் உடம்பு என்னத்துக்கு ஆகும்? உள்ளே வந்துவிடு!" என்று அது கரிசனத்துடன் சொல்லிற்று!

என்னால் நம்ப முடியவில்லை. "நிஜமாகவா சொல்கிறாய்?" என்று கேட்டேன்.

"ஆமாம், நிஜமாகத்தான்!" என்றது அது அன்புடன்.

"வந்தனம்" என்று சொல்லிவிட்டு, அந்தப் பொந்துக்குள் நுழைந்தேன். பிறகு உள்ளேயிருந்தபடி நனைந்த சிறகுகளை யெல்லாம் அலகால் கோதிவிட ஆரம்பித்தேன்.

இந்தச் 'சகிக்க முடியாத காட்சி'யைக் கண்ட ரங்கா, ஆத்திரத்துடன் ஓடோடியும் வந்து என்னையும் ஒரு கை பார்த்துவிட்டுச் சென்றது. "எங்கே சென்றதோ?" என்று எட்டிப் பார்த்தேன். சண்டை தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது!

சிறிது நேரத்துக்கெல்லாம் மழை நின்றது; ஆனால் சண்டை நிற்கவில்லை!

***

பொழுது விடிந்ததும் இரவு தங்குவதற்கு இடம் கொடுத்த கிளியிடம் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு வெளியே வந்தேன்.

என்ன விந்தை இது!—அப்போதும் சண்டை ஓயவில்லை!

"விட்டேனா, பார்!"—"விட்டேனா, பார்!" என்று இரண்டும் விடாமல் ஒன்றையொன்று குத்திக் கொண்டிருந்தன.

"ரங்கா! போதும், சண்டையை நிறுத்து! பகையைப் பகையால் வெல்வது முடியாத காரியம்; அப்படியே வென்றாலும் அந்த வெற்றி நீடித்திருக்காது. இந்த வீணான முயற்சியில் ஏன் உன்னுடைய அருமையான காலத்தைக் கழிக்கிறாய்? வீட்டுக்குப் போவோம், வா!" என்றேன்.

"போடா, உன்னைப்போல் என்னையும் கோழை என்று நினைத்துக் கொண்டாயா?" என்று ரங்கா சீறி விழுந்தது.

"சரி, நீ வீரனாகவே இரு, அப்பா!" என்று சொல்லிவிட்டு நான் வீட்டை நோக்கிக் கிளம்பினேன்.

அந்த 'முடிவில்லாத சண்டை' தொடர்ந்து நடந்துகொண்டேயிருந்தது.

ஆனால், அந்த 'வீர'னின் வாழ்க்கையிலோ இன்று அமைதி நிலவவில்லை; 'கோழை'யான என் வாழ்க்கையிலோ பரிபூரண அமைதி நிலவுகிறது.

மனிதனும் இயந்திரமும்

ஒரு முறை ஒரு வெளிநாட்டுத் தொழிற்சாலை முதலாளி காந்திஜியை நோக்கி, "தங்களுக்கு இயந்திரங்கள் என்றால் கொஞ்சங்கூடப் பிடிக்காதாமே, அது உண்மையா?" என்று கேட்டார்.

அதற்குக் காந்திஜி அளித்த பதில்:—"இயந்திரங்களை எனக்குப் பிடிக்காது என்பது தப்பு. இந்த உடம்பே ஒரு அற்புதமான இயந்திரம் அல்லவா? கைராட்டினம் ஒரு இயந்திரம்; பல் தேய்க்கும் 'பிரஷ்'கூட ஒரு இயந்திரம்தான். நான் எதை வெறுக்கிறேன் தெரியுமா? இயந்திரங்களை வெறுக்கவில்லை; இயந்திரங்கள் மீது மக்களுக்குள்ள அளவு கடந்த மோகத்தையே வெறுக்கிறேன்; மனித உழைப்பைக் குறைப்பதற்காக இயந்திரங்களை உபயோகிக்க ஆசைப்படுவதையே நான் வெறுக்கிறேன். ஆயிரக்கணக்கான மக்கள் வேலையில்லாமல் நடுத் தெருவில் கிடந்து பட்டினியால் சாகும்போது, தொழிற்சாலை முதலாளிகள் மனித உழைப்பைக் குறைத்துக் கொண்டே போனால், அது அவர்களைத் தவிர வேறு யாருக்குப் பிரயோஜனம்?

செல்வம் ஒரு சிலருடைய கையில் மாத்திரம் குவிந்து கிடப்பதை நான் விரும்பவில்லை; அது எல்லோருடைய கையிலும் இருக்கவேண்டும். தற்போது, ஒரு சில மக்கள் லட்சக்கணக்கான மக்களுடைய முதுகின் மேலேறி, அவர்கள் மீது ஆதிக்கம் செலுத்துவதற்குத்தான் இயந்திரங்கள் உதவியாயிருக்கின்றன. இதைத்தான் நான் வெறுக்கிறேன்; இதை எதிர்த்துத்தான் நான் போராடுகிறேன்!"

கர்ம வீரர் காந்தி

ரவீந்திரநாத் டாகூர்

[கவி டாகூர் 1931-ம் வருஷம் அக்டோபர் மாதம் 2-ந் தேதி சாந்தி நிகேதனத்தில் காந்தி ஜயந்திக் கொண்டாட்டத்தின்போது செய்த பிரசங்கத்தின் ஒரு பகுதி.]

மகாத்மா காந்தியின் பிறந்த தினமாகிய இந்தச் சுபதினத்தை ஆசிரமவாசிகளாகிய நாம் மிக்க மகிழ்ச்சியுடன் கொண்டாடுவோமாக.

தற்காலத்தில் இத்தகைய விசேஷ தினங்களின் புறக் கொண்டாட்டங்கள் மிகுந்து, அவற்றின் உண்மையான தத்துவங்கள் மறைந்து விடுகின்றன. கொண்டாட்டங்களில் தமாஷும் ஆர்ப்பாட்டங்களும் நிரம்பி விடுகின்றன. இது காரணமாக அவற்றிலுள்ள ஆழ்ந்த தத்துவங்களைக் கிரகித்துக் கொள்ளும் சந்தர்ப்பங்களை நாம் இழந்து விடுகிறோம்.

காந்திஜி தோன்று முன் நமது தேசத்தை பயம் ஒரு போர்வையைப் போல் மறைத்திருந்தது. சிறு விஷயங்களுக்காகப் பிறரை வேண்டுவதையும் மகஜர் எழுதுவதையுமே நாம் அறிந்திருந்தோம். அடிமைத்தனம், தன்னம்பிக்கையின்மை முதலிய குணங்கள் நமது இரத்தத்திலேயே ஊறிக்கிடந்தன. நமது நாட்டுப் பண்பாடுகளும், நாகரிகமும் ஒரு நொடியில் புறக்கணிக்கப்பட்டன. நமது தாய் நாட்டிலேயே நாம் அன்னியர்கள் போல் ஆகி விட்டோம். அன்னிய அரசாங்கத்தின் ஆயுதங்களாகிய கத்திகளும் துப்பாக்கிகளுமே நமது பொது வாழ்வில் முதன்மை ஸ்தானம்பெற்றன. அவைகளுக்கு முக்கியத்துவத்தை அளித்து விட்டு நாம் அஞ்ஞானமாகிய இருட்டில் மறைந்து வாழ்ந்து வந்தோம். மகாத்மா காந்தி தன்னம்பிக்கையை ஊட்டி நம்மைக் கர்ம வீரர்களாக மாற்றினார். இந்திய நாகரிகம் வேதத்தை அடிப்படையாகக் கொண்டது என்பதை நன்கு அறிந்த அவர், தம்முடைய தவ வலிமையின் மூலம் ஒரு புது சகாப்தத்தைச் சிருஷ்டிக்க எண்ணி அரசியல் யுத்த அரங்கத்தில் இறங்கினார். நாம் பயமில்லாமல் அரசியல் போரில் ஈடுபட ஆரம்பித்தது அன்று முதல்தான்.



நம்மை ஆளும் ஜாதியார் வியாபாரத்திலிருந்து ஆரம்பித்து, நமது அதைரியத்தை அஸ்திவாரமாகக் கொண்டு தங்களுடைய ஏகாதிபத்தியத்தை அமைத்தனர். நம்முடைய பலவீனம் இடங் கொடுத்திராவிடில், அன்னிய நாட்டுப் படைகளும் யுத்த தளவாடங்களும் இந்த தேசத்துக்குள் நுழைந்திருக்க முடியாது. நமது தோல்விக்கு வேண்டிய வசதிகளை நாமே ஏற்படுத்திக் கொடுத்தோம். இத்தகைய தோல்வியிலிருந்து நாம் மீளுவதற்காகவே காந்திஜி நமக்குள் ஒரு புது சக்தியை உண்டாக்கிக் கோழைகளை வீரர்களாக மாற்றினார்.

காந்திஜியின் வாழ்க்கை சத்தியம் என்ற அஸ்திவாரத்தின் மீது நிர்மாணிக்கப்பட்டதாகும். அது கர்ணனுடைய கவசத்தைப்போல் அவருடன் கூடவே பிறந்தது என்று சொல்லலாம். கொள்கைகளும் அபிப்பிராயங்களும் மாறி மாறி வரும் இக்காலத்தில், சத்தியத்திலிருந்து சற்றும் வழுவாத இவ் வுத்தமனின்

வாழ்க்கையைக் காட்டிலும் நம்மைப் புனிதமாக்கும் சக்தி வேறு எங்கு தோன்றப் போகிறது?


மகாத்மாவின் வாழ்க்கை லட்சியம் தற்பொழுது நம்முள் பரவி, நமது பலவீனத்தைக் கொஞ்சம் கொஞ்சமாகப் போக்கி வருகிறது. ஸாதக மூர்த்தியான காந்திஜியின் இத் தோற்றமே நமது உள்ளத்தில் அமரத்வம் பெற்று விட்டது. அவர் தம்முடைய முயற்சிக்கு எவ்வித இடையூறுகள் ஏற்பட்டாலும் அவற்றைப் பொருட்படுத்துவதில்லை.

* * *

யுகந்தோறும் புதிய புதிய சிருஷ்டிகளால் தன்னுடைய வளர்ச்சியைக் காட்டுவதே மனிதனின் இயல்பாகும். பழைய வழக்கங்கள் என்ற சிறைக் கூண்டில் அவன் சதா உழன்றுகொண்டிருக்க முடியாது. குருட்டுத்தனமான நமது பழக்க வழக்கங்களை ஒழிக்க மகாத்மா காந்தி அனுஷ்டித்த புரட்சி நெறியை நாம் மனதில் திடமாகக் கொண்டு சாதனை செய்வோமாக. மதப் போர்களிலும் சாதிச் சண்டைகளிலும் குருட்டு வழக்கங்களிலும் நாம் கிடந்து உழன்று கொண்டிருந்தால் யாரே நம்மை விடுவிக்க வல்லார்?

எந்த மக்களுடைய நாகரிகத்தின் அஸ்திவாரம் உள்நாட்டு வித்தியாசங்களால் பிளவுபட்டிருக்கிறதோ, எந்த ஜனங்களுடைய மனதில் விவேகம் சற்றுமின்றி, மூட நம்பிக்கைகள் வைத்திருக்கிறார்களோ அவர்கள் இந்த ஸாதனையை மனதாலும் நினைக்கத் தகுந்தவர்கள் அல்லர்.


நமக்குள் வளரும் எதிரிகளை அடக்குவதுதான் ஆண்மையின் அறிகுறி. புறப் பகைவர்களை வெல்லுவதைக் காட்டிலும் இதற்கு அதிக தைரியம் வேண்டும். நாம் இன்று யாரைக் கொண்டாடுவதற்காகக் கூடியிருக்கிறோமோ, அவர் அகப் பகைவர்களை அறவே ஒழித்த கர்ம வீரர். அவருடைய ஸாதனையை நாம் பின் பற்றாவிட்டால், அவர் பிறந்த தினத்தை நாம் கொண்டாடுவதும், அவரை நாம் போற்றுவதும் கொஞ்சங்கூட அர்த்தமற்ற செய்கைகளாகும்.



முழுத்துண்டு அணிந்து அரை நிர்வாணப் பக்கிரியாக விளங்கிய மகாத்மாஜி, ஒரு காலத்தில் இப்படிச் சட்டையும் அங்கவஸ்திரமும் தலைப்பாகையும் அணிந்து அசல் குஜராத்திப் பிரமுகராகத் தம்முடைய தர்ம பத்தினி சதி கஸ்தூரிபாயுடன் காணப்படுவது கண்கொள்ளாக் காட்சி அல்லவா?

தப்பிப் பிழைத்தேன்!

பாலு



சம்பிரமமான விருந்துச் சாப்பாட்டுக்குப் பிறகு வெற்றிலையும் வாயுமாகக் கூடத்து ஹாலில் என் சிநேகிதர்களும், உறவினர்களும் கும்மாளமடித்துக் கொண்டிருந்தனர். அவர்கள் பேசிக்கொண்டிருந்ததைப் பற்றிப் பிறர் என்ன நினைப்பார்கள் என்ற உணர்வே யில்லாமல், காலையில் நடந்த என் விவாகத்தைப் பற்றித் தங்கள் தங்களுடைய அபிப்பிராயங்களை ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொண்டிருந்தனர். பக்கத்து அறையில் சற்று ஓய்வுக்காகப் படுத்திருந்த நான் அவர்கள் பேச்சை யெல்லாம் கேட்டுக் கொண்டுதான் இருந்தேன்.

“எல்லோரும் பிறத்தியாருக்குத் தான் வாத்தியாரடி. பிறர் வீட்டு மாப்பிள்ளைகள் அப்படி இருந்திருக்க வேண்டும், இப்படி இருந்திருக்க வேண்டும் என்று சொட்டுச் சொல் சொல்வாளே இந்த மைதிலி! இப்போது இவள் மாத்திரம் ஏன் கறுப்பாக இருக்கிற மாப்பிள்ளையைக் கல்யாணம் செய்து கொண்டாளாம்?” என்று கூட்டத்தில் ஒரு கேள்வியைப் போட்டுவிட்டு அதற்குப் பதிலை எதிர்பார்த்திருந்தாள் பட்டு.

“அது அவளைக் கேட்டால் தானே தெரியும்? இந்த மாப்பிள்ளையிடம் அப்படி என்ன காந்த சக்தி இருக்கிறதோ? யார் கண்டது?” இது என் சிநேகிதி சாவித்திரியின் பதில்.

“என்னிடம் கூடக் கடைசி வரையில் இந்தச் சமாசாரத்தைச் சொல்லவில்லையடி அவள்! இருந்தாலும் ரொம்ப அழுத்தக்காரி!” என்று என்னிடம் கொஞ்சம் நெருங்கிப் பழகும் விசாலம் குறைப்பட்டுக் கொண்டாள்.

“சரிதான், நிறுத்துங்கள் பேச்சை! ஏதோ அவளுக்கு இஷ்டம் இருந்தது, கறுப்பு மாப்பிள்ளையைக் கல்யாணம் பண்ணிக் கொண்டாள். கொஞ்ச நாழியாவது நாம் கண்ணை மூடலாம், நாலரை மணிக்கு நலங்கு வேறே இருக்கிறது!” என்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி விட்டு, அந்த மகாநாட்டிற்கு ஒரு முடிவைக் கொண்டு வந்தாள் என்னுடைய சிநேகிதியான பத்மாசனி.

அரைத் தூக்கத்தின் மோன நிலையில் இவற்றையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த எனக்கு அவர்கள் பேசிக்கொண்டிருந்த விஷயம் தவறாகவே படவில்லை! இப்படி எல்லோரும் ஆச்சரியப்படும்படி நான் அவரைக் கல்யாணம் செய்து கொண்டதற்குக் காரணம் இருக்கத்தான் இருந்தது. திடீரென்று ஏற்பட்ட என் மனமாற்றத்திற்கு அஸ்திவாரம் இல்லாமல் போகவில்லை. அவர்களுடைய கேள்விகளுக்கெல்லாம் நான் பதில் சொல்ல வேண்டுமானால், என் கதை முழுவதையும் சொன்னாலல்லவோ உங்களுக்கு விளங்கும்?

சகல சௌபாக்கியங்களும் குறைவின்றி அளிக்கப்பட்டிருந்த ஒரு செல்வக் குடும்பத்தின் ஏக புத்திரி நான்.

ஜனகமகா ராஜன் தன்னுடைய செல்வக் குமாரத்தி மைதிலிக்குச் சுயம்வரம் நடத்தியது போல் என் தகப்பனார் என் விவாக விஷயத்தில் செய்யவில்லையாயினும், அது விஷயத்தில் என்னை ஒரு சோதனைக்கு மாத்திரம் உள்ளாக்கியிருந்தார். எனக்காகப் போட்டியிட்டவர்கள் இரண்டு பேர்.

அப்பாவின் ஆபீஸிலேயே வேலை பார்த்து வந்த சம்பத்து என்பவர் ஒருவர். அம்மா

வின் வழியில் எனக்கு ஒன்று விட்ட அம்மாஞ்சி முறையாகும் சுந்தரம் மற்றொருவர். எனக்குக் கூட இது விஷயத்தில் அதிகச் சிரமம் இருக்கவில்லை.

சம்பத்து நல்ல அழகுள்ளவர்; படிப்பாளி; சிவந்த மேனி; வசீகரமான முகம்; நெற்றியில் சுருண்டு விழுந்து கிடக்கும் அவருடைய கிராப்பு அவருக்கு அதிகப் படியான அழகை அளித்திருந்தது. காருக்காக உடையணிந்து சிலசமயம் எங்கள் பங்களாவுக்கு அவர் வரும்போது எனக்கு ரொம்பவும் பெருமையாக இருக்கும்.

அப்பாவின் பிரியத்திற்குப் பாத்திரமாக, அடிக்கடி எங்கள் பங்களாவிற்கு வந்து கொண்டிருந்த அவரிடம் நெருங்கிப் பழகா விட்டாலும் கூட, ஏதோ இலை மறைவு, காய் மறைவு என்று சொல்லும் அளவுக்கு நான் அவரிடம் பேச்சுவார்த்தைகள் வைத்துக் கொண்டிருந்ததை என் பெற்றோர்களும் தடுக்கவில்லை!

அம்மாவுக்குக் கூட இதில் ஓரளவு சம்மதந்தான். ஆனால் புதிதாக ஒரு குடும்பத்தில் சம்பந்தம் செய்வதை விட, உறவிலேயே வாகாக இருக்கும் சுந்தரத்தைப் பண்ணிக் கொண்டால், பிற்காலத்திற்கு எவ்வளவோ சௌகரியங்கள் உண்டு என்று நினைத்தாள் அவள்.

ஒரு முறை கூடப் பார்த்தறியாத சுந்தரத்தைப் பற்றி என் அபிப்பிராயத்தை நான் எவ்விதம் கூற முடியும்? நல்ல வேளையாக அதற்கு ஒரு சந்தர்ப்பமும் வாய்த்தது.

சுந்தரம் அவருடைய உத்தியோகத்திலிருந்து மாற்றலாகி, சென்னைக்கு வந்த பொழுது எங்கள் பங்களாவையே தம் இருப்பிடமாகக் கொண்டார்.

சம்பத்தையும், சுந்தரத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, சம்பத்தினுடைய அழகுக்கு ஈடாக மாட்டார் சுந்தரம். ஒற்றை நாடித்தேகம்; மாநிறத்துக்குக் கொஞ்சம் குறைவுதான், ஏதோ "காமா சோமா" என்று இருப்பார். அவ்வளவுதான். ஆனாலும் இவருடைய முகத்திலும் ஒரு தனிப்பட்ட வசீகரம் இருந்தது. அதிகமாகப் பேச மாட்டார். பேசி விட்டாலோ, எப்பேர்ப்பட்ட கல் நெஞ்சனையும் இளகும்படி செய்து விடுவார். உணர்ச்சிகளை ஒரே நிமிஷத்தில் கொட்டி விடும் அவருடைய முகத்தைப் பார்க்கும் போது, எனக்கே சில சமயம் மனது அலைக்கழிக்கும். இருந்தாலும் அவரைக் கலியாணம் செய்து கொள்ளத் தான் வேண்டும் என்ற தீர்மானத்திற்கு வரவில்லை அப்போது என்னால் முடியவில்லை.

எங்கள் வீட்டிலேயே இருந்தார் என்ற காரணத்தினாலும், உறவு முறை யென்ற காரணத்தினாலும் சுந்தரத்தினிடம் நான் சற்றுக் கலகலப்பாக இருப்பதைப் பார்த்து விட்டு அம்மா, "மைதிலிக்கு அவன் அம்மாஞ்சியிடம் அலாதி அன்பு" என்று அப்பாவிடம் சொல்வதைக் கேட்கும் போது எனக்குச் சிரிப்புத் தான் வரும்!

இந்தக் கலியாண விஷயம் சுந்தரத்தைப் பொறுத்த வரையில் ஒரு பெரிய மாறுதலை உண்டு பண்ணிற்று என்று சொல்லத் தான் வேண்டும்.

ஆரம்பத்தில் என்னிடம் சுவாதீனமாக நடந்து கொண்டது போல் பிற்பாடு அவர் நடந்து கொள்ளவில்லை. சம்பத்தினிடம் நான் நெருங்கிப் பழகும் விதம், என் அப்பாவுக்கு இதில் இருக்கும் இஷ்டம் இவற்றை யெல்லாம் தெரிந்துகொண்ட பிறகு உணர்ச்சியுள்ள ஒரு மனிதன் எப்படி நடந்து கொள்வானோ, அப்படியே சுந்தரமும் என்னிடம் பழகுவதை ஓரளவுக்கு மட்டுப் படுத்திக் கொண்டார் என்றே சொல்ல வேண்டும்.

அன்றைய தினம் பொழுதே போகவில்லை எனக்கு. சற்று நேரம் அம்மாஞ்சியுடனாவது பேசிக் கொண்டிருக்கலாமே என்ற நினைப்பில் மாடியில் இருந்த அவர் அறைக்குச் சென்றிருந்தேன். அவர் அங்கில்லை. பால்கனி வழியாகக் கீழே பார்த்த போது யாரோ ஒரு சிநேகிதருடன் அவர் பேசிக் கொண்டிருந்ததால், அவர் வரும் வரையில் அறையிலேயே உட்கார்ந்திருக்கலாம் என்று நினைத்து அங்கேயே அமர்ந்தேன். தற்செயலாக மேஜையின் மீது அவர் வைத்திருந்த கடிதத்தின் மீது என் பார்வை விழுந்தது.

பிறர் கடிதத்தைப் படித்துப் பார்க்கும் துர்ப்பழக்கம் என்னிடம் கிடையாதென்றாலும், கடிதத்தின் கண்ணோட்டத்தில், "மைதிலி", "கலியாணம்" என்ற வார்த்தைகள் தென்படவே, அடக்க முடியாத ஆர்வத்தினால் அதைப் படித்து விட்டேன். பாவம்! தம்முடைய உள்ளக் குமுறல்களை ஆப்த நண்பருக்கு அக்கடிதத்தில் கொட்டியிருந்தார். கடிதத்தில் இது தான் எழுதப் பட்டிருந்தது:

அன்பார்ந்த சந்துருவுக்கு,

கணேசனும் நீயுமாக எழுதியிருந்த கடிதம் கிடைக்கப் பெற்றேன். ராகவாச்சாரியினுடைய மாப்பிள்ளையாக நான் எப்பொழுது ஆகப்போகிறேன் என்று கேட்டிருக்கிறாய்.

வாழ்க்கையில் மனிதன் சில விஷயங்களில் ஏமாற்ற மடைவது ரொம்பவும் சகஜம். மைதிலியினுடைய இருதயத்தில் "கணவன்"

என்ற ஸ்தானத்தை வேறொரு நண்பர் அடைந்து விட்டார். அதற்காக நான் வருந்தப்பட வில்லை. ராகவாச்சாரியினுடைய அளவற்ற செல்வத்திற்கு நான் ஆசைப்பட்டவனல்ல. ஆனால் இளம்தெரியாத அந்த நாளிலிருந்து அவள் என்னுடைய மனைவியாகப் போகிறாள் என்ற எண்ணத்தினால் அதிகப்படியான அன்பைச் செலுத்தி விட்டேன். என்னுடைய மானஸிக உணர்ச்சியை நான் அடைத்துக் கொள்வதைத் தவிரச் சிறந்த வழி வேறொன்று மில்லை. அவ்வளவுதான்.

உன் நண்பன்
சுந்தரம்.

உணர்ச்சியுள்ள இக்கடிதத்தைப் படித்த பிறகு கூட, என் மனப் போராட்டத்தில் சம்பத்தினுடைய அழகிய உருவம்தான் நிலைத்து நின்றது. கடிதத்தை இருந்தபடியே வைத்துவிட்டு அவர் மேலே வருவதற்குள் என் அறைக்குச் சென்றுவிட்டேன்.

அலை பாய்ந்து கொண்டிருந்த என் மனதுக்குச் சற்று நிம்மதியளிக்க அன்று மாலை நான் சினிமாவுக்குச் சென்றிருந்தேன். படம் மிகவும் நல்ல படம் தான். ஆனால் அதைச் சரிவர ரஸிக்க முடியாமல் பின்னால் யாரோ இரு நண்பர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள்.

"டேய் பழனி! அந்த 'ஹீரோயின்' ஜம்மென்று எப்படியிருக்கிறாள் பாரடா! அசப்பிலே பார்த்தால் உனக்கு மனைவியாகப் போகும் மைதிலி மாதிரியில்லை! என்ன இருந்தாலும் நீ அதிருஷ்ட சாலி தான்......"

"நான்ஸென்ஸ்! படம் பார்க்க வந்த இடத்தில் ஏதேதோ பேசுகிறாய்? அந்த மைதிலியினுடைய அழகை நீ தான் மெச்சிக் கொள்ள வேண்டும்! நான் "மெஜூரா காலேஜில்" படித்தபொழுது என்னுடன் ஸ்வர்ணம் என்று ஒருத்தி படித்துக் கொண்டிருந்தாள். அவளுடைய கால் தூசி பெறமாட்டாளடா இந்த மைதிலி! நான் அவளையே கல்யாணம் செய்து கொண்டிருப்பேன்! ஆனால் ஆஸ்திதான் அங்கே பூஜ்யம். இங்கே அப்படி யில்லை பார். வேலை யில்லாமலேயே இரண்டு தலைமுறைக்குச் சாப்பிட்டுக் கொண்டிருக்கலாமே!" என்று முதல்வருக்குப் பதில் சொல்லிற்று பழக்கப்பட்ட ஒரு குரல்.

இதற்கு மேலே அவர்கள் பேசிக் கொண்டிருந்ததை நான் கேட்கவிரும்பவில்லை. நல்ல வேளையாக "இன்டர்வல்" விடவே பின்புறம் திரும்பிப் பார்த்தேன். எந்தச் சுந்தர ரூபனுக்கு என் இருதயத்தில் இடமளித்திருந்தேனோ, அந்த மகானுபாவர் சம்பத்து ஒய்யாரமாக உட்கார்ந்து கொண்டிருந்தார். அவர் என்னைக் கவனிக்கு முன்பே பாதிப்படத்தில் எழுந்து வீடு வந்து சேர்ந்து விட்டேன்.

அழகினுடைய வெளிப்பூச்சிலே, உள்ளுக்குள்ளே மறைந்து கிடக்கும் ஆலகால விஷத்தை யொத்த அவருடைய விஷநெஞ்சத்தைத் தெரிந்து கொண்ட பிறகு அன்பே உருக் கொண்ட என் அம்மாஞ்சி சுந்தரத்தின் மீது இயல்பாகவே என் மனம் சென்றது.

கலியாணத்தை ஆயிரங்காலத்துப் பயிர் என்று பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள்! இன்ப துன்ப நிழல்கள் நிறைந்த வாழ்க்கையின் முரட்டுப் பாதையைக் கடக்க அங்குள்ள கணவனின் ஒத்துழைப் பல்லவா வேண்டும் என்ற மகத்தான சித்தாந்தத்தின் அஸ்திவாரத்திலே தான் என் மனம் மாறியது!

★ ★ ★ ★ ★ அஹிம்சை நிலைக்குமா? ★ ★ ★ ★ ★

காந்திஜிக்குப் பிறகு அஹிம்சை நிலைத்திருக்குமா? அப்படி நிலைத்திருக்குமானால், அது இப்போது இருப்பதை விட அதிகமாகப் பிரபலமடையுமா, அல்லது அதன் புகழ் குன்றிப்போய் விடுமா?

இந்தக் கேள்விக்கு காந்திஜியின் பக்தரும் வெகு காலம் அவருடன் பழகியவருமான ஸ்ரீ ஜி. டி. பிர்லா கூறும் பதில் வருமாறு:—

"புத்தரும், ஏசுநாதரும் உயிரோடு இருந்த போது அவர்களுடைய உபதேசங்களுக்கு இருந்த மதிப்பை விட அவர்கள் இறந்து மறைந்ததற்கு அப்புறம்தான் அவர்களுடைய உபதேசங்களுக்கு அதிக மதிப்பு உண்டாயிற்று. மழை பெய்தால் எங்கும் ஒரே தண்ணீராகக் காணப்படுகிறது. கோடையில் எல்லாம் வறண்டு போய் விடுகிறது. அதனால், 'மழை பெய்து என்ன பிரயோஜனம்?' என்று சொல்ல முடியுமா? வேனிற் காலத்திலே வயல்களில் காணப்படும் தானியங்களைப் பார்க்கும் போது, மழையின் பெருமை எல்லோருக்கும் ஸ்பஷ்டமாக விளங்குகிறது. மழைநீர் வயல் மண்ணில் கலந்து கண்ணுக்குத் தெரியாமல் மறைந்து விட்டது. ஆனால் அதே நீர் தானிய மணிகளில் புகுந்து வாழ்கிறது. கழனிகளில் நீர் தேங்கியிருந்தால் அசுத்தம் பரவும்; சேறு, கொசு, துர்நாற்றம் முதலியன உண்டாகும். தானியத்துக்குள்ளே புகுந்து அது அமுதமாகி விட்டது.

அதே போல மகான்களுடைய உபதேசங்கள் தகுதியானவர்களுடைய இதயங்களுக்குள்ளே புகுந்து அமரத்துவம் பெற்று விளங்கும்."

கலிக் குடிக் கலர்

பி. ச. கைலாஸ்



“ராமச்சந்திரன்!” என்று ஒரு வீட்டின் முன் நின்று கூப்பிட்டான் ராகவன். பதில் இல்லை. மறு முறை கூப்பிட்டான்.

“அம்மா, யாரோ அண்ணாவைத் தேடறா. போய்ப் பாரு” என்றாள் உள்ளே ஒரு நாவலைப் புரட்டிக் கொண்டிருந்த உமா. அவள்தான் ராமச்சந்திரனின் தங்கை.

“இங்கே நான் வேலையாய் இருக்கேன். நீ போய் இல்லேன்னு சொல்” என்றாள் அவளுடைய தாயார்.

“அப்பப்பா! அண்ணாவைத் தேடிக் கொண்டு வரவாளுக்குப் பதில் சொல்றதுக்குள்ளே வாய்ப்பூட்டுக் கழண்டு போறது!” என்று அலுத்துக் கொண்டே எழுந்தாள் உமா. நாவல் சுவாரஸ்யம் போகிறதே என்று அவளுக்குக் கோபம். “இல்லே” என்று மூஞ்சியில் அடித்தாற் போல் பதில் சொல்ல வேண்டும் என்று போனாள். ஆனால் கதவைத் திறந்தவுடன் “அண்ணா வெளியே போயிருக்கிறார்” என்று தடுமாற்றத்துடன் சொல்லத்தான் முடிந்தது. இருபத்திரண்டு வயது அழகான வாலிபனிடம் துடுக்காகப் பதில் சொல்லப் பதினாறு வயதுப் பெண்ணுக்கு எப்படி மனம் வரும்? “எப்போ வருவான்?” என்று கேட்கத் திட்டம் போட்ட ராகவனுக்குக் கூடப் பேச நாவெழவில்லை. பேசாமல் நடந்தான். கொஞ்ச தூரம் சென்று திரும்பிப் பார்த்தபோது உமா இன்னும் வாசற்படியில் நின்று கொண்டிருப்பதைக் கண்டான்.

இதுதான் உமா - ராகவன் முதல் சந்திப்பு.

2

“டேய், இங்கேயே இரு. நான் போய் முகத்தை அலம்பிக் கொண்டு வரேன்” என்று ஒரு நாள் ராகவனைத் தன் அறையில் உட்கார்ந்திருக்கும்படி சொல்லி விட்டு உள்ளே சென்றான் ராமச்சந்திரன்.

“அண்ணா!” என்று கூவிக்கொண்டு ஓடி வந்த உமா ராகவனைக் கண்டு ஸ்தம்பித்து நின்று விட்டாள். ராகவன் தலையைத் தூக்கி நிமிர்ந்து பார்த்தான்.

“என்னடி?” என்று கேட்டுக் கொண்டே உள்ளே நுழைந்தான் ராமு.

இது இரண்டாவது சந்திப்பு.

முடிவு, கவிகள் மிகைப்படுத்திக் கூறும் காதலேதான்!

3

ராமச்சந்திரனும் ராகவனும் நான்காம் வகுப்புப் படிக்கும்போதிருந்தே

நண்பர்கள். சமீபத்தில்தான் ஒருவாறு பி. ஏ.,யை முடித்துவிட்டு உத்தியோகத்தில் அமர்ந்தனர்.

ராகவன் தன்னுடைய பன்னிரண்டாவது வயதிலேயே தந்தையை இழந்தவன். அவனுக்கு ராஜம் என்று ஒரு தங்கை இருந்தாள். அவளுக்கும் சமீபத்தில் கல்யாணம் நடந்து மதுரையில் கணவனுடன் இருந்தாள். தாயார் மீனாட்சி அம்மாள் சமைத்துப் போட்டுக் கொண்டு பிள்ளையுடனேயே இருந்தாள். நாவல் படித்துப் படித்துத் தன் எதிர்கால வாழ்க்கையைப் பற்றிப் பிரமாதமாகத் திட்டம் போட்டிருந்தான் ராகவன். சமீப காலமாக உமா அதில் கதாநாயகி பாகத்தை வகித்து வந்தாள்.

ராமச்சந்திரன் ரத்தின சுவாமி அய்யருக்கும் பாகீரதி அம்மாளுக்கும் ஏக புத்திரன். உமா அவனுக்கு ஒரே தங்கை. ரிடயர்ட் ஷெரஸ்தார் ரத்னசுவாமி மீதியுள்ள வாழ்க்கையை பகவத் பக்தியில் செலுத்தும் நிமித்தம் திருச்சி மலைக்கோட்டை வடக்குத் தெருவிலேயே குடியிருந்து கொண்டு கிரிப்ரதட்சணம் முதலியவைகளைத் தவறாமல் செய்து கொண்டிருந்தார். வீட்டுக் காரியங்களைத் தற்சமயம் ராமுதான் கவனித்துக் கொண்டிருந்தான். உமா ஐந்தாம் பாரம் படித்துக் கொண்டிருந்தாள். அவளுடைய அழகைப்பற்றி ராகவனைத்தான் கேட்க வேண்டும்!

இரு குடும்பங்களும் நல்ல ஸ்திதியிலுள்ளவை. ஒரே தெருவிலிருப்பதன் காரணமாக மீனாட்சி அம்மாளும் பாகீரதி அம்மாளும் ஆப்த சிநேகிதிகள். கணவனை இழந்ததன் காரணமாக மீனாட்சி அம்மாள் பூஜை புனஸ்காரத்துடன் கொஞ்சம் ஆசாரமாக இருந்தாள். இயற்கையாகவே சிறிது சோம்பேறியான ராகவனை ஒரு காரியமும் செய்ய விடாமல் தானே அவன் சௌகரியங்களை எல்லாம் கவனித்து வந்தாள்.

4

"வா, அப்பா! எங்கே ரொம்ப நாளாய்க் காணோம்!'' என்று வெகு அன்பாக ராமுவை வரவேற்றாள் மீனாட்சி அம்மாள்.

"நேரம் இல்லை, மாமி! அவன் எங்கே?''

"எங்கேயோ வெளியே போனான். இப்போ வருகிற சமயம்தான்'' என்று கூறும்போதே ராகவன் உள்ளே நுழைந்தான்.

"அடே, நீ இங்கேயா இருக்கே! நான் உன் வீட்டுக்குப் போய் இவ்வளவு நேரம் அங்கே காத்திருந்துவிட்டு அல்லவா வருகிறேன்'' என்றான் ராகவன்.

"அப்படியா?—ஏன் அங்கே காத்துக் கொண்டிருந்தாய்?—நான்தான் இங்கே வருவதாகச் சொல்லியிருந்தேனே!—அது இருக்கட்டும். இன்று 'எல்பின்ஸ்டன்'னில்



ஒரு புதுப்படம் வந்திருக்கிறது. வருகிறாயா, போவோம்?''

"ஆஹா, கட்டாயம் வரேன்'' என்று சொல்லிக் கொண்டே எழுந்தான் ராகவன்.

"ஏண்டாப்பா, உமாவுக்கு ஏதாவது வரன் திகைஞ்சுதோ?'' என்று கேட்டாள் மீனாட்சி அம்மாள்.

"இல்லை மாமி. இவனையும் 'ஏதாவது பாருடா!'ன்னேன்! இவன் தூங்கறான்'' என்று சொல்லி விட்டு ராகவனைப் பார்த்தான்.

ராகவன் வேகமாகத் தலை வாரிக் கொண்டிருந்தான்.

மனதிற்குள் உமா தனக்கு மாட்டுப் பெண்ணாக வரவேண்டு மென்று மீனாட்சி அம்மாளுக்குக் கொள்ளை ஆசை. ஆனால் தானே போய் எப்படிக் கேட்பது?

5

இரண்டு மாதம் சென்றது. ராகவன் வருகை ராமுவின் வீட்டில் அதிகரித்தது. கொஞ்சம் கொஞ்சமாக விஷயங்களை ஊகித்தான் ராமு. வருந்தி வருந்தி அழைத்த நாளிலெல்லாம் வராத ராகவன் திடீரென்று தினம் இரு முறை வருவதற்குக் காரணம் என்னவென்று யோசிக்க ஆரம்பித்தான். ராகவன் ராமு வரும் போது திடீரென்று வளையல் குலுங்கும் சத்தம் கேட்பதையும் சந்தோஷத்துடன் கவனித்தான். தங்கை தனியா யிருக்கும் போது அவளைக் கேலி செய்வதிலும் உற்சாகம் கொண்டான்.

"உமா, மணி என்ன பாரு! ராகவன் வரும் நேரமாகிவிட்டது.''

"அதை என்கிட்டச் சொல்வானேன்? வந்தால் அவருக்குக் காப்பி கொடுத்து உபசாரம் பண்ணேன்!''

"சரி, சரி! நானா காப்பி பேச்சை எடுத்தேன்? அது இருக்கட்டும். இப்போதெல்லாம் நீ ஓடி ஓடிப்போய் காப்பிப் போடுவதற்குக் காரணம் என்ன?''

வளர்த்துவானேன்? ராமுவின் முயற்சியில் கல்யாணம் நடந்தது. தாயுடனும் மனைவியுடனும் குடும்ப வாழ்க்கை நடத்த ஆரம்பித்தான் ராகவன்.

6

கொஞ்ச நாள்வரை மீனாட்சி அம்மாளும் உமாவும் ரொம்ப அன்னியோன்னியமாக இருந்தார்கள். பிறகு உலக நியதிப்படி மனவேற்றுமை ஆரம்பமாயிற்று. "ஏதுடா, சிறிசு; படித்த பெண். பாவம்!'' என்று மாமியாரும் வெறுமனே இருக்கமாட்டாள். மாட்டுப் பெண்ணும் மாமியார் விருப்பப்படி நடந்து கொள்ள மாட்டாள். காலையில் எழுந்தவுடன் குளித்து விட்டு, ஸ்னோ, பவுடர் போட்டுக் கொள்ளா விட்டால் உமாவுக்கு வேறு வேலையே ஓடாது. இதெல்லாம் ஒருவாறு முடிந்து மீனாட்சி அம்மாளுக்கு ஒத்தாசை செய்ய வரும்போது மணி ஒன்பது ஆகிவிடும். மாட்டுப் பெண் தன்னை உட்காரவைத்து சிச்ருஷை செய்ய வேண்டும் என்று கனவு கண்டு கொண்டிருந்த மீனாட்சி அம்மாளுக்கு இது பெரிய ஏமாற்றமா யிருந்தது. சினிமாவுக்குப் பகல் ஆட்டத்துக்குப் போனால் அவ்வளவாக ரசிக்காது என்று ஆறுமணி ஆட்டத்துக்குத் தம்பதிகள் கிளம்புவார்கள். பெற்றவள் வழக்கப்படி "இருட்டில் போவானேன்?'' என்று ஆட்சேபிப்பாள். உமாவுக்குக் கோபம் வந்து விடும்.

இதனாலெல்லாம் பாதிக்கப்பட்ட உமா தனிக் குடித்தனம் செய்து பார்க்க வேண்டும் என்று ஆசை கொண்டாள். நாளுக்கு நாள் அந்த ஆவல் அதிகமாயிற்று. இஷ்டப்படி இருக்கலாம்; எப்பொழுது வேண்டுமானாலும் சமைக்கலாம்; அலங்காரங்களுக்குத் தடை சொல்பவர் யாரும் இருக்க மாட்டார்கள் என்றெல்லாம் நினைக்கலானாள். ராகவனிடமும் ஜாடையாகச் சொன்னாள். ராகவனுக்கு என்ன செய்வதென்று விளங்கவில்லை.

இந்தச் சமயத்தில் மதுரையிலுள்ள மாப்பிள்ளையிடமிருந்து மீனாட்சி அம்மாளை அனுப்பும்படி கடிதம் வந்தது. காரணம் ராகவனுடைய தங்கைக்குப் பிரசவ சமயமாயிருந்ததுதான். உலக வழக்கப்படி பெண்ணுக்குச் சிசுருஷை செய்யும் ஆவலினாலும், ஒரு மாறுதலை உத்தேசித்தும் உடனே மதுரைக்குப் போய்ச் சேர்ந்தாள் மீனாட்சி அம்மாள்.

7

மாமியார் ஊருக்குப் போன பிறகு தான் வீட்டு வேலைகளை யாதொரு உதவியுமில்லாமல் செய்வது எவ்வளவு கடினம் என்பதை உணர்ந்தாள் உமா. காலையில் அலங்காரங்களை முடித்துக் கொண்டு சமைக்க ஆரம்பிக்க மணி எட்டு ஆகிவிடும். ராகவன் ஆபீஸுக்குக் கிளம்பத் துடிப்பான். "ஆச்சா! ஆச்சா!'' என்று கேட்டுக்கொண்டு சமையலறைக்குள் நுழைவான். அடுப்பு அணைந்து புகைந்து கொண்டிருக்கும். "உமா, இதை கவனிக்கக் கூடாதா!'' என்று கத்துவான்.

"நீங்கள்தான் அதைச் சற்று விசிறி விட்டுக் குளியுங்கோ'' என்பாள் சமைய

லறையில் அடுப்புடன் போராடிக்கொண் டிருக்கும் உமா.

அவசரத்தில் துண்டு எடுத்து வர மறந்திருப்பான். சொட்டச் சொட்டக் கூடத்தில் வந்து துடைத்துக் கொள்வதற் குள் வீடு முழுதும் ஈரமாகிவிடும். ஒன்பது மணிக்குச் சமையல் கட்டுக்குள் நுழைவான்.

"சித்த தட்டை அலம்பி வைத்துவிட்டு ஜலம் எடுத்து வைச்சுக்குங்கோ" என் பான் உமா.

அவசர அவசரமாகக் குழம்பு சாதம் மாத்திரம்—அது ஒன்றுதான் தயாரா யிருக்கும்—சாப்பிட்டுவிட்டு ஓடுவான். ஞாயிற்றுக்கிழமைகளில் வீட்டு வேலை ஜாஸ்தியா யிருந்தது உமாவுக்கு. வெளியே எங்கும் போக முடியவில்லை. மாமியாரும் இப்படித்தானே கஷ்டப் பட்டிருப்பாள் என்று யோசிக்கலானாள். அவள் எப்படி எல்லாவற்றையும் நிர்வகித் தாள் என்று ஆச்சரியமா யிருக்கும். 'திரும்பி வரமாட்டாளா, வந்தால் கட்டா யம் உதவி செய்ய வேண்டும்' என்றெல் லாம் நினைக்க ஆரம்பித்துவிட்டாள். ராகவ னுக்கும் வாழ்க்கை அலுத்துவிட்டது. "காதலாவது கீதலாவது! ஏதாவது ஒரு பட்டிக்காட்டுப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டிருக்கலாம்" என்று நினைத்தான்.

தனிக் குடித்தனம் போதும் போது மென்றாய் விட்டது உமாவுக்கு. பிரசவம் முடிந்தவுடனே கிளம்பும்படி இருவரும் மீனாட்சி அம்மாளுக்குக் கடிதம் எழுதினர்.

இரண்டு மாதம் கழித்து மீனாட்சி அம்மாள் வந்து சேர்ந்தாள். அவள் தலைமையின் கீழ்க் குடும்பக் காரியங்கள் பழையபடி நடைபெற ஆரம்பித்தன. மாட்டுப்பெண் இப்பொழு தெல்லாம் தனக்குச் சிறிது உதவி செய்வதைப் பார்த்து, மாறுதலுக்குக் காரணம் தெரி யாமல் விழித்தாள் மீனாட்சி அம்மாள்.

இப்பொழு தெல்லாம் மாமியாரைக் கோவிலுக்கு அனுப்பிவிட்டு, இரவு சமை யல் முதலிய வேலைகளை யெல்லாம் உமாவே கவனித்துக் கொள்ளுகிறாள். ராகவனுக்கும் சரியான நேரத்தில் ஆபீஸ் போக முடிகிறது.

அப்படிச் சொன்னது யார்?



காந்திஜி வாழ்ந்த புனித ஸ்தலமாகிய சேவா கிராமத்தில் பாம்பும் தேளும் அதிகம். ஒரு நாள் இரவு காந்திஜியின் ஆசிரமத்தில் தங்கி யிருந்த ஒரு பெண் ஒரு தேளை மிதித்து விட்டாள். தேள் நன்றாகக் கொட்டி விட்டது. அந்தப் பெண் வலி பொறுக்காமல் இரவு முழுவதும் அழுதுகொண்டே யிருந்தாள். இதைப் பார்க்க காந்திஜியின் காரியதரிசியான மகாதேவ தேசாய்க்கு மிகவும் கஷ்டமாக இருந்தது. அவர் மறு நாள் காலை எழுந்ததும் காந்திஜியிடம் சென்று, "பாபு, தாங்கள் பாம்பையோ தேளையோ கொல்ல அனுமதிப்பதில்லை. இதனால் தாங்கள் எப்போதாவது வருத்தப்படும்படியாக நேரும். இங்கே நாள்தோறும் பாம்பும் தேளும் ஆசிரம வாசிகளின் கால்களில் புரளுகின்றன. நல்ல காலம், இதுவரை பாம்பு யாரையும் கடிக்கவில்லை. ஆனால் அப்படிப் பாம்பு யாரையாவது கடித்து யாராவது செத்துப்போனால் தாங்கள் ரொம்ப வருத்தப் படுவீர்கள்" என்றார்.

காந்திஜி நிதானமாக, "மகாதேவ், பாம்பையோ தேளையோ கொல்ல வேண்டா மென்று மற்றவர்களை நான் எப்பொழுது தடுத்தேன்? நான் எதை யுமே கொல்லுவதில்லை என்பது உண்மை. என்னுடைய உயிரைக் காப் பாற்றிக் கொள்ளுவதற்காகப் பாம்பைக் கொல்ல எனக்கு விருப்பம் இல்லை. ஆனால், என்னுடைய உபதேசத்தைப் பின்பற்றுவதன் மூலம் வேறு யாரையும் ஆபத்துக் குள்ளாக்கவும் நான் விரும்பவில்லை. மற்றவர்கள் பாம்பைக் கொல்ல விரும்பினால், அவர்கள் தாராளமாகக் கொல்லட்டும். எனக்கு ஆட்சேபம் இல்லை" என்றார்.

ஆனால், மற்றவர்கள் எப்படிக் கொல்லத் துணிவார்கள்? — காந்திஜி பாம்பைக் கொன்று தம் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள விரும்பவில்லை என்று சொன்ன பிறகு?

பூரண மதுவிலக்கு

[காந்தி மகானுக்கு மிகவும் பிடித்தமான தேசத் திருப்பணிகளிலே மதுவிலக்கும் ஒன்றாகும். இந்தியாவிலேயே - ஏன், உலகத்திலேயே முதல் முதலாகச் சென்னை மாகாணத்தில் பூரண மதுவிலக்கு அமுலுக்கு வந்திருக்கும் இந்தச் சுபதினத்திலே காந்தி மகான் மது விலக்கைப் பற்றிச் சொல்லியிருக்கும் சில அமுத மொழிகளைச் சிந்தித்துப் பார்ப்போமாக.]

என்னுடைய குழந்தைகள் நெருப்பையோ, தண்ணீரையோ நோக்கி வேகமாக ஓடினால் நான் அவர்களைப் பலவந்தமாகப் பிடித்து நிறுத்தக் கொஞ்சங்கூடத் தயங்க மாட்டேன். சிவப்பு நீராகிய மதுவை நோக்கி ஓடுவது, கொதிக்கும் உலையையோ, பெருக்கெடுத்து ஓடும் ஓடையையோ நோக்கி ஓடுவதைவிட மிகவும் ஆபத்தானது. நெருப்பும் நீரும் மனிதனுடைய உடம்பை மாத்திரமே அழிக்க முடியும். ஆனால் மதுவோ, மனிதனுடைய உடலை மாத்திரமல்ல, ஆத்மாவையே அழித்துவிடும்.

—யங் இந்தியா 8-8-1929

* * *

இந்தியாவைப் போன்ற மிக உஷ்ணமான ஒரு தேசத்தில் எந்த விதமான குடிக்கும் அவசியமே இல்லை. குடிப் பழக்கத்துக்குள்ளான ஒரு நாட்டுக்கு விமோசனமே இல்லை. குடியினால் எத்தனையோ சாம்ராஜ்யங்கள் அழிந்து போனதாகச் சரித்திரம் சொல்லுகிறது. கிருஷ்ண பரமாத்மா அவதரித்த யாதவ குலம் மதுவை உண்டு மதிமயங்கி அழிந்து போனதாக நாம் படித்திருக்கிறோம். ரோம் சாம்ராஜ்யம் அழிந்ததற்குக் குடியும் ஒரு முக்கிய காரணம் என்பதை யாரும் மறுக்க முடியாது.

—யங் இந்தியா 4-12-1926

* * *

பூரண மதுவிலக்கை அமுலுக்குக் கொண்டு வருவதற்கு இந்தியாதான் உலகத்திலேயே மிகவும் தகுந்த தேசம். ஏனென்றால், மேல் நாடுகளிலே குடிப்பதை மக்கள் ஒரு கௌரவமாக நினைக்கிறார்கள். நாம் அதை ஒரு குற்றமாகக் கருதுகிறோம்.

—யங் இந்தியா 8-6-1927

* * *

குடி என்னும் மாபெரும் சாபக்கேடு எத்தனையோ ஏழை மக்களுடைய இல்லங்களைப் பாழாக்கி விட்டது. சந்தோஷமாகவும் அமைதியாகவும் இருந்த குடும்பங்களிலே குடியரக்கன் புகுந்து என்னென்ன அட்டூழியங்கள் செய்கிறான் என்பது குடியர்களைக் கணவர்களாக அடைந்துள்ள துர்ப்பாக்கிய ஸ்திரீகளுக்குத்தான் தெரியும்.

யங் இந்தியா—31-11-1929

* * *

கட்டாயமாக மதுவிலக்குச் செய்வது பொது மக்களுடைய உரிமையில் தலையிடுவதாகும் என்று சொல்லுவது, திருட்டைத் தடுப்பதற்காக வகுக்கப்பட்ட சட்டங்கள் திருடர்களுடைய உரிமையைப் பறிக்கின்றன என்று சொல்லுவதைப் போன்றதாகும்.

யங் இந்தியா—6-6-1927

* * *

போதையை உண்டாக்கும் குடிக்கு அடிமையாகிவிட்ட மக்கள் தூய சுயராஜ்யத்தை அடைய முடியாது.

—யங் இந்தியா—12-6-1926

* * *

சாராயம், அபினி முதலிய போதைப் பொருள்களை உலகத்திலுள்ள சகல மதங்களும் கண்டித்திருக்கின்றன. குடியினால் எத்தனையோ குடும்பங்கள் நாசமாகிவிட்டன. குடிகாரனுடைய புத்தி கெட்டுப் போகிறது. தாய்க்கும் மனைவிக்கும் பெண்ணுக்குமுள்ள வித்தியாசத்தை அவன் மறந்து விடுகிறான். வாழ்க்கை அவனுக்குப் பெரிய பாரமாகிவிடுகிறது.

சீனர்கள் மகத்தான சமூகமாயிருந்துங் கூட, அவர்கள் அபினியின் வலையில் அகப்பட்டுக் கொண்டதால் தங்கள் சுதந்திரத்தைக் காப்பாற்றிக் கொள்ள முடியாதவர்களாகி விட்டார்கள். இது நமக்கு ஒரு படிப்பினையாகும்.

—யங் இந்தியா—8—6—1927.



சாரதாவும் கல்யாணியும் சகோதரிகள் தான். இருந்தாலும், அவர்கள் இரண்டு பேருக்கும் எவ்வளவோ வித்தியாசங்கள்—உருவம், பேச்சு, நடை, உடை, குணம் எல்லாவற்றிலும்.

சாரதா கல்யாணியை விட இரண்டு வயது மூத்தவள். அவளை அவ்வளவு அழகி என்று சொல்ல முடியாது. ஆனால் பார்க்கப் பிடிக்காத அவலட்சண மென்றும் சொல்லிவிட முடியாது. கொடி போல் ஒல்லியும் உயரமுமான உருவம். கொஞ்சம் கறுப்பு. வசீகரமான முகமோ பிறரை மயக்கும் சக்தியுள்ள கண்களோ இல்லை. அடக்கமான நடத்தை; அதைப் போலவே பேச்சு. எதிலும் எப்பொழுதும் அமைதியாக இருக்கும் குணம். கொட்டிலில் கட்டியிருக்கும் மிகவும் சாதுவான பசுவைப் போல அந்தக் குடும்பத்தில் சாரதா.

கல்யாணி அப்படியல்ல. சதா பாடிப் பறந்து வரும் குருவியைப் போல. செம்பொன் நிறமான மேனி; வசீகரமான முகம்; நிறைவான அங்க அழகு; அகன்ற கண்கள்; அதில் விஷமமான பார்வை; மினுக்கான நடை; விதவிதமான அலங்காரம்; கணீரென்று கலகலப்பாகப் பேசும் சுபாவம். கோபம், அலங்காரம், துடுக்குத் தனம், பிடிவாதம், விளையாட்டு, சிரிப்பு, எல்லாம் ஒன்றுக் கொன்று குறைவில்லாமல் நிறைந்திருக்கும் குணம். எண்ணினது போல் நான்கு பேர் இருக்கும் அந்தக் குடித்தனத்தில் கொஞ்சம் கலகலப்பை உண்டாக்கிக் கொண்டிருந்தவள் கல்யாணிதான்.

சாரதாவுக்கு வயது இருபது. கல்யாணிக்குப் பதினெட்டு. இரண்டு பேருக்கும் இன்னும் கல்யாணமாகவில்லை. சாரதா படிப்பை நிறுத்திவிட்டுத் தாயாருக்கு உதவியாக வீட்டுக் காரியங்களில் பொறுப்பேற்றுக் கொண்டாள். கல்யாணி ஹைஸ்கூலில் படித்துக் கொண்டிருந்தாள். கல்யாணியைப் பற்றி அவளுடைய பெற்றோர்கள் அவ்வளவாகக் கவலைப்படவில்லை. சாரதாவுக்கு அந்த வருடம் கல்யாணம் செய்துவிட வேண்டுமென்ற கவலைதான் அவர்களுக்கு.

சிவராமய்யர் முனிசிபல் ஆபீசில் ஒரு குமாஸ்தா. சம்பளம் மிகக் குறைவு. இருந்தாலும், அவருக்குப் பூர்வீகமாக உள்ள ஐவேஜியினால் அவரைப் பணக்காரர் என்று தாராளமாகச் சொல்லலாம். அவருடைய நிலைமைக்கு அவர் இன்னும் கொஞ்சம் தாராளமாகவும் ஆடம்பரமாகவுமே வாழலாம். இருந்தாலும் அடக்கமாக வாழ்வது அவருடைய குடும்பத்தில் பாரம்பரையாக வந்த பண்பு. சாரதாவையும் கல்யாணியையும் நல்ல இடத்தில் கொடுத்து அவர்கள் குறைவில்லாமல் சந்தோஷமாக இருப்பதைப் பார்க்க வேண்டுமென்ற ஆசை ஒன்றுதான் சிவராமய்யர் தம்பதிகளுக்கு இருந்தது.

அடுத்த தெருவிலிருக்கும் வக்கீல் ராமச்சந்திரய்யரின் குமாரன் விசுவநாதனுக்குத் தான் சாரதாவைக் கல்யாணம் செய்து கொடுப்பதாய் இருந்தது. சாரதா அவ்வளவு அழகான பெண் அல்லவென்றாலும்

○○○○○○○○○○○○○○○○○○

மருந்து இருக்கிறதா?

ஒரு தடவை ஒரு பிரபல ஆயுர்வேத வைத்தியர் காந்திஜியைப் பார்க்கப் போயிருந்தார். அவர் ஆயுர்வேத வைத்தியத்தின் சிறப்பைப் பற்றிக் காந்திஜியிடம் வெகு நேரம் சொல்லிக் கொண்டேயிருந்தார்.

காந்திஜி வைத்தியரை நோக்கி "எல்லா வியாதிகளையும் ஆயுர்வேத வைத்தியத்தால் குணப்படுத்தி விட முடியுமா?" என்று கேட்டார்.

"ஓ! பேஷாக முடியுமே!" என்றார் ஆயுர்வேத வைத்தியர்.

"அப்படியா? தீண்டாமை என்ற வியாதிக்கு ஏதாவது ஒரு மருந்து இருந்தால் கொடுங்களேன், பார்ப்போம்!" என்றார் காந்திஜி.

○○○○○○○○○○○○○○○○○○

அடக்கமான குடித்தனப் பொறுப்புணர்ந்த பெண் என்பதை உத்தேசித்தே விசுவநாதனின் பெற்றோர்கள் அவளைத் தங்கள் நாட்டுப் பெண்ணாக்கிக் கொள்ள ஆசைப் பட்டனர். மூன்று வருடமாகப் பேச்சிலிருந்த விஷயம் அப்பொழுது தான் நிச்சயமாக முடிவு செய்யப் பட்டது. அந்த வருஷந் தான் விசுவநாதனுக்குக் கலாசாலைப் படிப்பு முடிந்து விடுவதால் அந்த வருடமே கல்யாணத்தையும் செய்து விட இருதரப் பாரும் முடிவு செய்திருந்தனர். விசுவநாதன் தன் தகப்பனுக்கு அடங்கிய பிள்ளை. அடிக்கு பயந்த பிள்ளை கசப்பு மருந்தைச் சாப்பிடுவது போலத்தான் அவன் மனமில்லாமல் சாரதாவை விவாகம் செய்து கொள்ள உடன்பட்டான்.

இரு குடும்பங்களுக்கும் கொஞ்சம் நெருங்கிய பழக்கம் இருந்ததால் விசுவநாதன் அடிக்கடி சிவராமய்யர் வீட்டுக்கு வருவான். கல்யாணமாவதற்கு முன்பிருந்தே அவனை மாப்பிள்ளையாகக் கருதி விட்டபடியால், அவன் வரும்போதெல்லாம் சிவராமய்யர் வீட்டில் அவனுக்கு தடபுடலான உபசாரந்தான் நடக்கும். சாரதா அவனைக் கண்டதும் வெட்கமும் நாணமும் அடைந்து ஓடி ஒளிந்து கொள்ளுவாள். அப்பொழுதெல்லாம் அவன் மனதில் ஒரு பெருமிதமான ஆனந்தம் தோன்றும். தன்னைப் பார்க்க ஆசைப்பட்டுத் தான் விசுவநாதன் அடிக்கடி வருவதாக நினைத் துப் பெருமையடைவாள். அப்படித்தான் வீட்டிலுள்ள மற்றவர்களும் நினைத்துப் பெருமையாகப் பேசிக் கொண்டனர். ஆனால் அங்கு அவன் அடிக்கடி எதற்காக வருகிறான்? அது அவன் மனதிற்குத்தான் தெரியும். இன்னொரு துடுக்கான பெண்ணிருக்கிறாளே, கல்யாணி—

ஒரே கொடியில் செவ்வரிப்பூவும் ரோஜாப் பூவும் மலர்ந்திருக்கின்றன. அழகை ரசிக்கும் மனிதனின் கண்கள் எதை நாடும்? கல்யாணி தன் சொடுக்கிவிழுக்கும் கண் பார்வையிலும், வெடுக்கெனப் பேசும் பேச்சிலும் விசுவநாதனைச் சிக்க வைத்திருந்தாள். அவள் பார்வை, பேச்சு, விளையாட்டு எல்லாம் அவனைப் பித்தாயடித்திருந்தது. அவள் எட்டாத உயரத்தில், முள்ளைத் தன் அணைப்பாக வைத்துக் கொண்டு ஒய்யாரமாக அசைந்தாடும் ரோஜா மலர். அவனுக்குச் சமீபமாக இலை மறைவில் 'இதோ நான் இருக்கிறேன்' என்று அடக்கமாகச் சொல்லிக் கொண்டிருக்கிறது ஒரு செவ்வரிப்பூ — ஆனால் அவனுக்கு அதைத் திரும்பிப் பார்க்கக்கூட இச்சையில்லையே!

சாரதா எவ்வளவு அடக்கமான பெண்! எவ்வளவு குணமான பெண்! குடும்பத்தையும் தன்னையும் எவ்வளவு பொறுப்போடு கட்டிக் காக்கும் சக்தியுள்ளவள்? இவைகளெல்லாம் அவனுக்குத் தெரியும். அவள் மீது அவனுக்கு அனுதாபம் உண்டு. ஆனால் ஆசை இல்லையே! அழகை ரசிக்கும் ஒரு வாலிபனின் உள்ளத்துக்கு வேண்டிய ஒன்றைக் கூட அவன் சாரதாவிடம் கண்டதாகத் தெரியவில்லையே? பசு சாதுவானது தான். ஆனால் துரு துரு வென்றிருக்கும் விஷமக்காரக் குழந்தை அதனுடன் என்ன விளையாடுவது? எப்படி விளையாடுவது? பூனைக் குட்டி நகத்தால் பிராண்டினாலும் அதனோடு விளையாடுவதுதான் இன்பமாயிருக்கிறது. கல்யாணியின் சகோதரி தானே சாரதா? ஏன் அவர்கள் இருவருக்கும் இவ்வளவு வித்தியாசம்? இந்தப் புதிரைப் புரிந்து கொள்ளத்தான் விசுவநாதனால் முடியவில்லை.

விசுவநாதன் வீட்டுக்கு வரும்போதெல்லாம் கல்யாணியின் ஆனந்தம் எல்லை மீறி விடும். அப்பொழுது அவள் ஏதாவது கோபமாகவோ வருத்தமாகவோ இருந்தால் கூட அவைகளெல்லாம் இருந்த இடம் தெரியாமல் மறைந்து ஒரு குதூகலம் ஏற்

பட்டு விடும். பரிகாசமாகப் பேசவும் கேலி செய்யவும் அவளுக்குத் தகுதியாக வாய்த்தவன் விசுவநாதன் ஒருவன்தான். அவனை 'மாப்பிள்ளை' யென்று முதன் முதல் உறவு முறை வைத்து அழைத்தது அவள்தான். கல்யாணிக்குச் சாரதாவிடம் கூடக் கொஞ்சம் பொறாமை. விசுவநாதனைப் போல் அழகான, குணமுள்ள, விளையாட்டாகப் பேசிக் கொண்டிருக்கக்கூடிய ஒரு கணவன் கிடைப்பது லேசான காரியமா? சாரதா ஏதோ பெரிய அதிர்ஷ்டம் செய்தவளாகத்தான் கல்யாணி நினைத்தாள். தனக்கும் விசுவநாதனைப் போல் ஒரு கணவன் கிடைக்க வேண்டுமே என்று எண்ணி ஏங்குவாள். ஒவ்வொரு சமயம் "அக்காவுக்கும் விசுவநாதனுக்கும் துளிக் கூடப் பொருந்தாது. நான்தான் அவருக்குத் தகுதியானவள். அக்காவுக்கு ஏன் வேறு வரன் பார்க்கக் கூடாது?"...இப்படியெல்லாம் கல்யாணி நினைக்க ஆரம்பித்து விட்டால் ஒவ்வொரு சமயம் அவளுக்குச் சாப்பாடு தூக்கம் எதுவுமே வேண்டியிருக்காது.

கல்யாணிக்கு நன்றாகத் தெரியும், சாரதா விசுவநாதனிடம் எவ்வளவு அந்தரங்கமான ஆசை வைத்திருக்கிறாளென்று. சாரதா மிகவும் அடக்கமானவள்தான். எதையும் படாடோபமாகக் காட்டிக் கொள்ளாதவள்தான். ஆனால் அவள் மனது எவ்வளவு ஆழமானது, அவளது நம்பிக்கையும் ஆசையும் எவ்வளவு அழுத்தமானது என்று கல்யாணிக்கு நன்றாகத் தெரியும். இதை நினைக்கும்போதுதான் விசுவநாதனை மனதால் நினைக்கக் கூடத் தனக்கு யோக்கியதை இல்லை என்பதை உணருவாள் கல்யாணி. ஆனால் அவள் மனது என்றுமே ஒரு நிலையான சமாதானத்துக்கு வந்ததில்லை. நீர்க்குமிழிபோல் அடிக்கடி கொப்பளிப்பதும் அடங்குவதுமாய்த் தானிருந்தது.

• • •

வைதீகமான விஷயங்களை எல்லாம் முன்னாலேயே பேசி முடித்து விட்டபடியால் விவாகத்துக்கு ஒரு முகூர்த்த நாளைக் குறிப்பிட வேண்டிய கட்டம் நெருங்கியது. அப்பொழுதுதான் விசுவநாதனும் ஆழ்ந்து யோசித்து ஒரு முடிவுக்கு வரவேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டது. அவன் மனதிலெழுந்த போராட்டம் மிகவும் கடுமையான



இரண்டாவது வட்ட மேஜை மகாநாட்டுக்காக காந்திஜி லண்டனுக்குப் போயிருந்த போது எடுத்த படம். காந்திஜிக்குப் பக்கத்தில் இருப்பவர் ஸ்ரீமதி சரோஜினி நாயுடு. பின்னால் நிற்பவர்கள் ஆங்கிலத் தொழிலாளிகள்.



வக்கீல்:—என்ன, உங்க பழைய போலீஸ் கோர்ட்டு வக்கீல் கொள்ளைப் பணம் சம்பாதிச்சாரே, நல்ல பிராக்டீஸா இருந்ததே. இப்போ என்ன தம்படி வரும்படி இல்லாமே கஷ்டப்படறான் மனுஷன்?

கட்சிக்காரன்:—அதுங்களா! மனுஷன் பொய்சொல்வதில்லை என்று பிரதிக்ஞை செய்து விட்டார். அதுதான் காரணம், வேறொன்றும் இல்லை.

தாக இருந்தது. சாரதாவை விவாகம்செய்து கொண்டு போலி வாழ்க்கை வாழ அவன் விரும்பவில்லை. அதை நினைத்தாலே அவனுக்குப் பயமாயிருந்தது. அவன் தன் மனதில் தைரியத்தை உண்டாக்கிக் கொண்டு தகப்பனுருடைய அறையை நோக்கி நடந்தான்.

ராமச்சந்திர அய்யர் பீரோவிலிருந்து ஏதேதோ சட்டப் புத்தகங்களை எடுத்துப் புரட்டிக் கொண்டிருந்தார். விசுவநாதன் அவருக்குப் பின்னுல் வந்து நின்று மெதுவாக "அப்பா!" என்றான்.

அவர் சட்டென்று திரும்பி அவனை மேலும் கீழுமாக ஒரு தடவை பார்த்து விட்டு "என்ன? ஏதாவது பணம் வேண்டுமா? ஊஹும்! தாங்காது. வர வர நீ அசாத்தியமாய்ச் செலவு செய்கிறாய்" என்றார்.

"இல்லை, பணம் வேண்டாம்..." என்றான் தயங்கியபடியே விசுவநாதன்.

"பணம் வேண்டாமா! ரொம்ப சந்தோஷம். வேறு என்ன?"

"கல்யாணத்திற்கு நான் பார்த்து விட்டீர்களா?......" பயத்தால் அவன் நாக்குக் குழறியது.

ராமச்சந்திர அய்யர் அந்த வார்த்தையைக் கேட்டு ஆச்சரியமடைந்து விட்டார். பையனுக்கு இப்படிக் கேட்க அசாத்தியத் துணிவு ஏற்பட்டு விட்டதே என்று தான் அவர் ஆச்சரியப் பட்டார்.

"ஏன்? நான் பார்க்கவேண்டாமென்ற அபிப்பிராயமோ?"

"இல்லை, எனக்கு அந்தப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ள இஷ்டமில்லை..."

ராமச்சந்திரய்யருக்கு ஏற்பட்ட ஆச்சரியத்தில் துள்ளிக் குதித்து விட்டார். அவர் கையிலிருந்த தடித்த புத்தகம் நழுவித் தொப்பென்று கீழே விழுந்தது.

"என்ன? அந்தப் பெண் பிடிக்கவில்லையா? நீ எந்தப் பெண்ணையடா சொல்லுகிறாய்?" என்று அலறினர். அவன் வேறொரு பெண்ணைத் தவறாக நினைத்துச் சொல்லுகிறானே என்ற சந்தேகம் அவருக்கு.

"சிவராமய்யர் பெண் சாரதாவைத் தான்—"

அவனுடைய நடுக்கம் தணியவேயில்லை.

"என்னடா, இப்போ நீ நல்ல புத்தியோடு தானிருக்கிறாயா?"

கீழே கிடந்த புத்தகத்தை எடுத்து மேஜைமீது தொப்பென்று போட்டுவிட்டு "போ, உங்க அம்மா கிட்டே போய் சொல்லு. இப்படி ஒரு லக்ஷணமான பிள்ளையைப் பெற்றிருக்காளே—?" என்றார்.

விசுவநாதன் இதற்குமேல் அங்கு நிற்கவில்லை. இன்னும் ஏதாவது பேசினல் பீரோவிலிருந்து கைக்கு வந்து, கையிலிருந்து கீழே விழுந்து, கீழேயிருந்து மேஜைக்கு வந்திருக்கும் தடித்த சட்டப் புத்தகம் தன்னை நோக்கி வரும் என்று அவனுக்குத் தெரியும். மெதுவாக வெளியே போய்விட்டான்.

ராமச்சந்திரய்யர் வீட்டில் விசுவநாதனின் கல்யாண விஷயமாகச் சத்தமும் சண்டையுமாகவே யிருந்தது—தாய்க்கும் பிள்ளைக்கும், புருஷனுக்கும் மனைவிக்குமாக. அவனுடைய தகப்பனர் விரட்டினர், மிரட்டினர். விசுவநாதன் ஒரே பிடிவாதமாக சாரதாவை விவாகம் செய்து கொள்ள மறுத்து விட்டான். தவிர கல்யாணியைக் கல்யாணம் செய்து கொள்வதாகச் சொன்னான்.

"உஹூம், அந்தப் பெண் மகா வாய்த்துடுக்கு. அது நம் குடித்தனத்துக்குத்

துளிக் கூட லாயக்குப் படாது" என்று சொல்லி விட்டார் அவனுடைய தகப்பனார்.

* * *

ராமச்சந்திரய்யர் வீட்டுக்குள்ளேயே புகைந்து கொண்டிருந்த இந்த விஷயம் ஒரு வாரம் சென்ற பிறகுதான் சிவராமய்யர் காதுக்கு எட்டியது. விசுவநாதன் சாரதாவைக் கல்யாணம் செய்து கொள்ள இஷ்டப் படவில்லை என்ற சமாசாரம் அவருக்கும் அவர் மனைவிக்கும் எதிர்பாராத பெரிய ஏமாற்றமாகத்தானிருந்தது. வரதக்ஷிணை போன்ற விஷயங்களில் ஏதேனும் மனக் குறை யிருக்குமோ என்று எண்ணி அவ் வகையிலும் தாராளமான மனப்பான்மை யோடு நடந்து கொள்ள முயற்சி செய்தார். ஆனால் பையன் பிடிவாதமாக மறுக்கிறான் என்ற பதில்தான் அவருக்குக் கிடைத்தது. என்ன செய்வது? வேறு ஏதாவது வரன் தேடுவதில் கவலை செலுத்தலானார்.

விசுவநாதன் தன்னை விவாகம் செய்து கொள்ளச் சம்மதிக்க வில்லை என்பதைக் கேட்டதும் சாரதா மனமிடிந்து விட்டாள். வாழ்க்கையிலே இதைவிட அவளுக்குப் பெருந் தோல்வி ஏது? வாழ்க்கையே அவளுக்கு ஒரு பெரிய பாலைவனமாகத்தான் தோன்றியது. கலியாணப் பேச்செடுத்த இந்த மூன்று வருடங்களாக அவள் எவ்வளவு ஆசையை வளர்த்திருந்தாள்! அங் கணம் அங்கணமாக அவள் ஒரு இன்பக் கோவிலைக் கட்டி, கடைசி சிகரம் வைக்க நினைக்கும் போது ஒரு பேரிடி விழுந்து விட்டது. அப்பொழுது அவள் மனதில் பொங்கிப் பொங்கி எழுந்த அடக்க முடியாத துக்கத்தை வெளிக் காட்டாம லிருக்க இயற்கையாக அவளோடு கூடப் பிறந்த அடக்கமும் பொறுமையுந்தான் காரணமாயிருந்தது. இந்த ஏக்கம் பிறருக் குப் புலப்படாத வண்ணம் அவளுடைய ஹிருதயத்தை அரித்துக் கொண்டு வந்தது. ஓய்ந்த நேரத்தி லெல்லாம் இந்த உலகத்தையே மறந்து உட்கார்ந்து எதை எதையோ எண்ணி எண்ணி அவள் உருகுவாள். தாரை தாரையாகக் கண்ணீர் விடுவாள்.

கல்யாணப் பேச்சு முறிந்த பின் விசுவநாதன் சிவராமய்யர் வீட்டுக்கே வருவ தில்லை. ஏதோ பெரிய குற்றவாளி மறைந்து மறைந்து செல்லுவது போல் அந்தத் தெருப் பக்கம் வரவே பயப்படுவான், வெட்கப்படுவான்.

சாரதாவை விசுவநாதன் மணந்து கொள்ளச் சம்மதிக்காதது கல்யாணிக்கும் வருத்தமாகத்தானிருந்தது. ஆனால் அதை விட அவளுக்கு வருத்தம் அவன் தன் வீட்டுப் பக்கமே வாராமல் அடியோடு நிறுத்திக் கொண்டதுதான். சுற்றிப் பறந்து வரும் சிட்டுக் குருவியின் சிறகொடிக்கப் பட்டது போல் அவள் எதிலும் பற்றுதல் இல்லாமல் ஓய்ந்து போயிருந்தாள். "அவர் அக்காவைக் கல்யாணம் செய்து கொள்ளா விட்டாலென்ன? எப்பொழுதும் போல் இங்கு வந்து போய்க் கொண்டிருக்கக் கூடாதா? இப்படிப் பழகியவர்களை அவரால் எப்படிப் பார்க்காமலிருக்க முடிகிறது? அப்பாவுக்கும் அம்மாவுக்கும் சாரதாவுக்கும் வருத்தம் இருந்தபோதிலும், அவரை 'ஏன் வருகிறாய்?' என்று யாராவது கேட்கப் போகிறார்களா? என்னைப் பார்க்காமல் அவரால் எப்படி இருக்க முடியும்? இரண்டு நாளைக் கொரு தடவையாவது வந்து என்னோடு ஏதாவது கேலியாக விளையாடாம லிருந்தால் அவருக்கு நிம்மதியாயிருக் காதே?"—இப்படி யெல்லாம் எண்ணும் போது அவள் மனதில் ஒரு ஆசை பிறக் கும். "அவர் அக்காவைத்தான் கல்யாணம் செய்து கொள்ள இஷ்டப்படவில்லை. என்னையாவது..."-என்ன துணிவோடு இப் படி எண்ணுகிறோமென்று அவளுக்கே தெரி யாது. "மூன்று வருஷமாக அக்காவைக் கல்யாணம் செய்து கொள்வதாக வாக் களித்து விட்டுக் கடைசியில் கை விட்டு விட்ட மனிதரை நான் கல்யாணம் செய்து கொள்ளுவது அக்காவுக்கு மாத்திரமல்ல, இந்தக் குடும்பத்திற்கே யல்லவா துரோகம் செய்ததாகும்? அவர் மீது எல்லையற்ற ஆசை வைத்திருந்த சாரதாவின் கண் ணெதிரிலேயே அவரை நான் கல்யாணம் செய்து கொண்டால் அவளால் அதை எப் படிச் சகித்துக் கொண்டு உயிர் வாழ முடியும்?"—இதை நினைக்கும்போது கல் யாணியின் உள்ளமும் உடலும் நடுங்கியது.

நடுக்கடலில் கரை தோன்றாது சுற்றிச் சுழன்று தத்தளிக்கும் தனிப்படகு போல் ஒரே எண்ணத்தில் சிக்கி ஒரு முடிவும் காணாது தன்னைத்தானே கொஞ்சம் கொஞ்சமாக அழித்துக் கொண்டுவந்த சாரதாவுக்குக் கடைசியாக ஒரு துணிவான ஆசை—அவளுடைய அடக்கத்தை மிஞ்சிய துணிவான ஆசை - உண்டாயிற்று.

வழக்கத்துக்கு மாறாக அன்று கோவில் கிணற்றில் தண்ணீர் எடுக்கக் கொஞ்சம்

முன் நேரத்திலேயே தனியாகக் கிளம்பினாள். கோயில் கிணற்றுக்கு நேராகப் போவதை விட வடக்கு வீதி வழியாகச் சுற்றிக் கொண்டு போனால் கலாசாலை விடும் நேரமாதலால் விசுவநாதனைச் சந்திக்கலாம் என்ற நம்பிக்கை அவளுக்கு.

அவளுடைய நம்பிக்கையும் பழுதாகவில்லை. வடக்கு வீதி முனையில் விசுவநாதன் தனியாகத்தான் வந்து கொண்டிருந்தான். சாரதா எவ்வளவு அடக்கமும் பயந்த சுபாவமும் உள்ளவளோ அவ்வளவுக்கு தைரியமும் துணிவும் கொண்டவளாயிருந்தாள். அப்பொழுது எங்கேயோ பார்த்துக்கொண்டு ஏதோ நினைவாக வரும் விசுவநாதனின் எதிரில் சாரதா வழியை மறித்ததுபோல் நிற்கவே, அவன் திடுக்கிட்டு விட்டான். தன் எதிரில் இடையில் குடத்துடன் நிற்பவள் சாரதா என்பதை அவன் கண்டதும் மனதில் ஏதோ பெரிய குற்றம் செய்து விட்டவன் போன்ற பயமும் வெட்கமும் அவனுக்கு ஏற்பட்டது.

அவள் தன் மடியில் மறைவாகச் செருகியிருந்த ஒரு கடிதத்தை எடுத்து அவனிடம் நீட்டினாள். அவன் அதை நடுங்கும் கைகளுடன் வாங்கிக் கொண்டான். அவள் ஏதோ பேச நினைத்தாள். ஆனால் அவள் நாவெழவில்லை; துக்கம் நெஞ்சை யடைத்தது. சோகத்தில் வாண்டிருந்த அவளுடைய சாத்விகமான கண்களின் இமையோரத்தில் இரு சொட்டுக் கண்ணீர் வந்து முத்துப்போல நின்றது. விசுவநாதனுக்கு ஏற்பட்டிருந்த தடுமாற்றத்தில் அவன் அதை எப்படித் தெரிந்து கொண்டிருக்க முடியும்? அவள் புடவைத் தலைப்பால் கண்களைத் துடைத்துக் கொண்டே சட்டென்று அவனைத் தாண்டிப் போய் விட்டாள்.

* * *

அவன் வீட்டிற்கு வந்ததும் தன் அறையின் கதவைத் தாளிட்டுக் கொண்டு அவசர அவசரமாகச் சாரதா கொடுத்த கடிதத்தைப் பிரித்துப் படிக்கலானான்.

இருபது பக்கங்களுள்ள அந்தக்கடிதத்தை படிக்கவே அவனுக்கு வெறுப்பாயிருந்தது. அவனுக்கு ஏற்கெனவே ஏற்பட்டிருந்த மனக் குழப்பத்திடையே அந்தக் கடிதத்தை வேறு படித்தால் மூளையே குழம்பி விடும் போலிருந்தது. அந்தக் கடிதத்தை மடித்து உறைக்குள்ளேயே திணித்துத் தன் பெட்டியின் அடியில் போட்டு விட்டான் — மன நிம்மதியோடு இருக்கும்போது படித்துக் கொள்ளலாமென்று.

சாரதாவை நினைக்க அவனுக்குப் பரிதாபமாக இருந்தது. ''அசட்டுப் பெண்! என்னுடைய மன நிலையைத் தெரிந்து கொண்ட பிறகு ஏன் எனக்கு இப்படியெல்லாம் கடிதம் எழுதுகிறாள்? விருப்பமில்லாத ஒரு புருஷனை மணந்து அவள் என்ன சுகம் காணப் போகிறாள்? அவளைச் சொல்லுவானேன்? இந்தப் பெண்களே இப்படித்தான்...''

அவன் பிரமை பிடித்தவன் போல் அந்த நாற்காலியிலேயே உட்கார்ந்திருந்தான். அவன் மனதில் நிழலாட்டமாகத் தோன்றிய சாரதாவின் கவர்ச்சியற்ற உருவம் புகை போல் மறைந்து விட்டது. ஆனால் அந்த இடத்தில் மின்னல் தெறிவது போல் கல்யாணியின் உருவம் தோன்றி மறைந்தது. (அடுத்த இதழில் முடியும்)

ஏது ஈசுவர பஜனை?

ஒரு முறை காந்திஜிக்கு, அவருடைய நண்பரென்று கருதப்பட்ட ஒரு பிரமுகர் கீழ்க் கண்ட கடிதம் எழுதி யிருந்தார்.

''நேற்று இரவு நான் ஒரு கனவு கண்டேன். அதில் கிருஷ்ண பகவான் எனக்கு முன்னாலே தோன்றி 'காந்திக்கு ரொம்ப வயதாகிவிட்டது. இந்த அந்திய காலத்திலே இன்னும் அவர் அரசியலில் மாட்டிக் கொண்டு ஏன் கஷ்டப்பட வேண்டும்? அவர் எல்லா வேலைகளையும் விட்டொழித்துவிட்டு, ஈசனுடைய திருநாமத்தை பஜித்துக் கொண்டிருக்கட்டும்' என்று சொன்னார். இதைத் தாங்கள் கவனிக்கவேண்டும்.''

மேற்படி கடிதத்திற்குக் காந்திஜி கீழ்க்கண்ட பதில் எழுதினார்:

''நண்பரே! நான் ஒரு இமைப்பொழுது கூட ஈசனை பஜிப்பதை மறந்ததில்லை. எனக்கு மக்களுடைய சேவையே ஈசுவர பஜனையாகும். நிற்க. அந்திய காலம் வந்து விட்டது என்பதற்காகவா நாம் ஈசனைத் துதிக்க வேண்டும்? நாம் பிறந்தது முதல் நம்முடைய உயிர் யமன் கையில் இருக்கிறது என்பது என் எண்ணம். ஆகையால் ஈசனைத் துதிப்பதற்காக முதுமைப் பருவம் வரை காத்திருக்க வேண்டும் என்பதை நான் ஒப்புக்கொள்ள முடியாது.''

மாந்தருக்குள் ஒரு தெய்வம்

ரா.கி.

47. சத்தியாக்கிரஹ உதயம்

எம்பயர் தியேட்டர் என்னும் நாடகக் கொட்டகையில் 1906-ம் வருஷம் செப்டம்பர் 11உ டிரான்ஸ்வால் மாகாணத்தின் பல பகுதிகளிலிருந்தும் வந்த இந்தியர்கள் கூடினார்கள் கொட்டகையில் எள்ளுப் போட்டால் தரையில் விழாது. அவ்வளவு நெருங்கிய கூட்டம். சுமார் மூவாயிரம் பேர் இருக்கும். ஜனாப் அப்துல் கனி என்னும் வர்த்தகப் பிரமுகர் கூட்டத்துக்குத் தலைமை வகித்தார். பொதுத் தீர்மானங்கள் மூன்றுக்குப் பிறகு கறுப்பு மசோதாவைப் பற்றிய நாலாவது தீர்மானம் வந்தது. கறுப்புச் சட்டம் அமுலுக்கு வரும் பட்சத்தில் அதற்கு இந்தியர்கள் உட்படுவதில்லையென்றும், உட்படாததினால் விளையும் கஷ்டங்கள் எல்லாவற்றையும் பொறுமையுடன் சகித்துக் கொள்வதென்றும் அந்த நாலாவது தீர்மானம் சொல்லிற்று.

கறுப்புச் சட்டத்தின் கொடுமைகளைக் காந்திஜி விளக்கிச் சொல்லித் தீர்மானத்தைப் பிரேரித்த பிறகு பலர் அதை ஆமோதித்துப் பேசினார்கள். அப்படிப் பேசியவர்களில் ஒருவர் சேத் ஹாஜி ஹபீப். அவர் "ஆண்டவன் ஆணை"யாக மேற்படி தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும் என்று சொன்னதுடன், தாமே கடவுள் பேரில் ஆணைவைத்து "என்ன நேர்ந்தாலும் நான் கறுப்புச் சட்டத்துக்கு உட்படேன்" என்று கூறினார். இதைக் கேட்டதும் காந்திஜி தம்முடைய பொறுப்பை நன்கு உணர்ந்தார். தீர்மானத்தை நிறைவேற்றும் விஷயத்தில் இன்னும் கொஞ்சம் முன் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும் என்று கருதினார்.

சாதாரணமாகப் பொதுக் கூட்டங்களிலும் மகாநாடுகளிலும் பல தீர்மானங்கள் செய்வதுண்டு. பிற்பாடு அத்தீர்மானங்களை மாற்றுவதும் உண்டு. தீர்மானத்தை மாற்றாவிட்டாலும், அதை அனுசரித்து நடவாமல் இருப்பதும் உண்டு. பல மகாநாடுகளின் தீர்மானங்கள் காகித அளவிலும் பேச்சளவிலும் நின்றுவிடுகின்றன.

ஆனால் இப்போது டிரான்ஸ்வால் இந்தியர்கள் நிறைவேற்றுவதற்கிருந்த தீர்மானம் அந்த ரகத்தைச் சேர்ந்ததல்ல. அது வெறும் தீர்மானம் மட்டுமல்ல; ஆண்டவன் சாட்சியாகச் சபதம் கொள்வதாகும். இந்த விதத்தில் ஒருமுறை சபதம் செய்துவிட்டால் பிறகு அதைக் கடைப்பிடித்தே தீரவேண்டும் என்று காந்திஜி கருதினார். இதை அங்குள்ளவர்களுக்கெல்லாம் நன்கு விளக்கிக் கூற விரும்பி, பொதுக்கூட்ட அக்கிராசனரின் அநுமதி பெற்று, இரண்டாம் முறையும் பேசலானார். அவ்வாறு காந்திஜி பேசியதன் சாராம்சம் பின்வருமாறு :—

"இதற்கு முன்னால் நாம் நிறைவேற்றிய தீர்மானங்களுக்கும் இந்தத் தீர்மானத்துக்கும் வித்தியாசம் அதிகம் உண்டு. இந்தத் தீர்மானத்தை நாம் கடைப்பிடிப்பதைப் பொறுத்தே இந்த நாட்டில் நமது வருங்கால வாழ்வு ஏற்படும். நம்முடைய நண்பர் ஹாஜி ஹபீப் கூறிய யோசனைப்படி நாம் செய்தோமானால், இது தீர்மானமாக மட்டுமல்லாமல் ஆண்டவன் சாட்சியாக எடுத்துக்கொண்ட பிரதிக்ஞையாகும். இந்த முறையில் தீர்மானத்தை நிறைவேற்றுகிற உத்தேசத்துடன் இக் கூட்டத்துக்கு நான் வரவில்லை. ஆனால் ஹாஜி ஹபீப் கூறியதைக் கேட்ட பிறகு பிரதிக்ஞை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றே நானும் கருதுகிறேன். ஆனால் அப்படி எடுத்துக் கொள்வதில் ஏற்படும் பொறுப்பை உங்களுக்கு நான் நன்கு எடுத்துக் காட்டுவது என் கடமையாகும்.

"நாம் அனைவரும்,—ஹிந்துக்களும் முஸ்லிம்களும்,-கடவுள் நம்பிக்கை உள்ளவர்கள். கடவுள் சாட்சியாக எடுத்துக் கொண்ட விரதத்துக்குப் பங்கம் செய்தோமானால் கடவுள் முன்னிலையிலும் மனிதர் முன்னிலையிலும் குற்றவாளிகள் ஆவோம். காசுகளில் செல்லாக் காசு எப்படித் தள்ளுபடியோ, அவ்விதமே விரதபங்கம் செய்கிறவன் மனிதத் தன்மையை இழந்தவனாகிறான். ஆகையால் நன்றாக யோசனைசெய்து மிக முக்கியமான சந்தர்ப்பங்களில் மட்டும் விரதம் எடுத்துக் கொண்ட பிறகு என்ன நேர்ந்தாலும் விரதத்தைக் காப்பாற்றவேண்டும்.

"தென்னாப்பிரிக்கா இந்திய சமூகத்துக்கு இப்போது அத்தகைய மிக நெருக்கடியான சந்தர்ப்பம் நேர்ந்திருப்பதாகவே நான் நம்புகிறேன். கடவுள் சாட்சியாகப் பிரதிக்ஞை எடுத்துக்கொள்ள வேண்டிய சந்தர்ப்பம் இதைக் காட்டிலும் வேறு ஒன்று இருக்க முடியாது. ஆனால் அப்படிப் பிரதிக்ஞை எடுத்துக் கொள்ளுமுன் அதனால் ஏற்படக் கூடிய விளைவுகளை யோசித்துப் பார்க்க வேண்டும். ஒவ்வொருவரும் தங்களுடைய அந்தரங்கத்தைச் சோதித்துப் பார்க்க வேண்டும். நாம் இந்தத் தீர்மானம் செய்த மாத்திரத்தில் தென்னாப்பிரிக்கா அரசாங்கத்தார் வழிக்கு வந்துவிடுவார்கள் என்ற நம்பிக்கையின்பேரில் தீர்மானம் நிறைவேற்றக் கூடாது. ஒருவேளை அப்படி நேர்ந்தாலும் நேரலாம். ஆனால் அதற்கு நேர்மாறாக நமக்குப் பலவிதமான கஷ்டங்கள் ஏற்படவும் கூடும். இங்கே நாம் மூவாயிரம் இந்தியர்கள் கூடியிருக்கிறோம். இந்தக் கூட்டத்துக்கு வராத இந்தியர்கள் வெளியில் பதினாயிரம்பேர் இருக்கிறார்கள். அவர்கள் இந்தத் தீர்மானத்தை ஒப்புக் கொள்ளாமல் கறுப்புச் சட்டத்துக்குக் கீழ்ப்படிந்து நடத்தல் சாத்தியமே. அப்போது நம்முடைய கஷ்டங்கள் மேலும் அதிகமாகும். நம்மைச் சிறைக்கு அனுப்புவார்கள். சிறையில் நம்மை அவமதிப்பார்கள். கடுங்காவல் விதித்துக் கடினமான வேலை செய்யப் பண்ணுவார்கள். முரட்டு வார்டர்கள் கசையினால் நம்மை அடிப்பார்கள். பட்டினி கிடக்க நேரிடும். கடுங்குளிரினாலும் கொடியவெப்பத்தினாலும் கஷ்டப்பட நேரிடும். பெருந்தொகை அபராதம் விதித்து நம்முடைய சொத்துக்களையெல்லாம் பறிமுதல் செய்தாலும் செய்வார்கள். இந்த நாட்டை விட்டு அப்புறப்படுத்துவார்கள். இவ்வளவு கஷ்டங்களுக்கும் உள்ளானாலும் எடுத்துக்கொண்ட பிரதிக்ஞையைக் கைவிடுவதில்லை யென்ற உறுதியோடு இருக்க முடியுமானால்தான் இந்தத் தீர்மானத்தைக் கடவுள் சாட்சியாகப் பிரதிக்ஞை செய்து நிறைவேற்றுவதில் அர்த்தம் உண்டு.

"இன்னும் ஒரு முக்கியமான விஷயம். இங்கே இப்போது பிரதிக்ஞை செய்து கொள்கிறவர்களில் சிலர் மனோ திடம் இழந்து பிரதிக்ஞையைக் கைவிட்டு விடுவதாக வைத்துக் கொள்ளலாம். அதனால் மற்றவர்களுடைய பொறுப்புத் தீர்ந்து விடாது. நாம் ஒவ்வொருவரும் தனித் தனியாகப் பிரதிக்ஞை செய்வதாகவே எண்ணவேண்டும். 'மற்ற எல்லாரும் கைவிட்டாலும் நான் கைவிடுவதில்லை' என்று ஒவ்வொருவரும் உறுதிகொள்ள வேண்டும். இந்திய சமூகம் முழுதும் ஒரே முகமாக ஒற்றுமையுடனிருந்தால் நம்முடைய நோக்கம் விரைவில் கைகூடும். நம்மில் பலர் உறுதி இழந்து விட்டால் போராட்டம் நீடித்து நடக்க வேண்டியதாயிருக்கும். ஆனால் ஒரு சிலராவது எல்லாக் கஷ்டங்களுக்கும் துணிந்து உறுதியுடன் இருந்து வருவார்களானால் இறுதியில் நமக்கு வெற்றி கைகூடும் என்பதில் எள்ளவும் சந்தேகமில்லை. என்னைப் பொறுத்தவரையில், நான் இந்தப் பிரதிக்ஞை எடுத்துக்கொண்டு விட்டால், பிறகு நீங்கள் எல்லாரும் கைவிட்டுப் போய் நான் ஒருவனே தன்னந்தனியாக நிற்க நேர்ந்தாலும் என்னுடைய உறுதியைக் கைவிட மாட்டேன். இதைக் கர்வம் காரணமாக நான் சொல்லவில்லை. உங்களுக்கு எச்சரிக்கையாயிருப்பதற்காகவும், நீங்கள் ஒவ்வொருவரும் அத்தகைய மன உறுதி கொள்ளவும் வேண்டியே கூறினேன்."

இவ்விதம் காந்திஜீ சொல்லிவிட்டு உட்கார்ந்தார். சபையோர் மிகக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். காந்திஜிக்குப் பிற்பாடு பேசியவர்களும், அவருடைய கருத்தை யொட்டிச் சபையோரின் பொறுப்பை எடுத்துக்காட்டிப் பேசினார்கள். கடைசியாக, கூட்டத்தின் அக்கிராசனர் எழுந்தார். அவரும் விஷயத்தைத் தெளிவுபடுத்திவிட்டுச் சபையோரின் அபிப்பிராயத்தைக் கேட்டார். சபையோர் ஒரு முகமாகத் தீர்மானத்தை நிறைவேற்றுவதற்குச் சாதகமான அபிப்பிராயம் தெரிவித்தார்கள். மூவாயிரம் இந்தியர்களும் எழுந்து நின்று கடவுள் சாட்சியாகக் கறுப்புச் சட்டத்துக்கு உட்படுவதில்லை யென்று சபதம் செய்தார்கள்.



லண்டனில் உள்ள பிரசித்தி பெற்ற செண்ட் ஜேம்ஸ் மாளிகையில் கூடிய இரண்டாவது வட்டமேஜை மகாநாட்டின்போது, பல பிரிட்டிஷ் ராஜதந்திரிகளுக்கு மத்தியில் காந்தி மகான் எளிய உடையில் உட்கார்ந்திருப்பதைக் காணலாம்.

இவ்விதமாக, 1906-ம் வருஷம் செப்டம்பர் 11உ, உலக சரித்திரத்தில் ஒரு புதிய அத்தியாயம் ஆரம்பமாயிற்று. "சத்தியாக்கிரஹம்" என்னும் அற்புதமான புதிய ஆயுதம் அன்று கண்டு பிடிக்கப்பட்டது. அதற்குச் "சத்தியாக்கிரஹம்" என்னும் பெயர் உடனே ஏற்பட்டு விடவில்லை. கொஞ்சகாலத்துக்குப் பிறகு தான் நாமகரணம் செய்யப்பட்டது.

முதலில் சிலகாலம் தென்னாப்பிரிக்கா இந்தியர்களின் இயக்கம் 'பாஸிவ் ரிஸிஸ்டன்ஸ்' என்னும் ஆங்கிலப் பெயராலேயே குறிப்பிடப்பட்டது. அந்தக் காலத்துத் தமிழ்ப் பத்திரிகைகளில் அதை 'எதிர்க்காமல் எதிர்க்கும் முறை' என்றும், 'சாத்வீக எதிர்ப்பு' என்றும் மொழி பெயர்த்து வந்தார்கள். இந்தியர்கள் நடத்தும் தார்மிக இயக்கத்தை ஆங்கில பெயராலேயே குறிப்பிட்டு வந்தது காந்திஜிக்குப் பிடிக்கவில்லை. புதிய இந்திய பாஷைப் பெயர் கொடுக்க வேண்டும் என்பதற்கு வேறொரு முக்கியமான காரணமும் ஏற்பட்டது. ஒரு பொதுக் கூட்டத்தில் தென்னாப்பிரிக்கா இந்தியர்களின் கட்சியை ஆதரித்துப் பேசிய ஓர் ஆங்கிலேயர், "இந்தியர்கள் சிறு தொகையினர்; பலமற்றவர்கள். அதனால் 'பாஸிவ் ரிஸிஸ்டன்ஸ்' முறையைக் கையாளுகிறார்கள். பலவீனர்கள் வேறு என்ன செய்ய முடியும்?" என்று பேசினார். இதைக் காந்திஜி கேட்டுக் கொண்டிருந்தார். தாம் கைக்கொண்ட போர்முறை பலவீனங் காரணமாக ஏற்பட்டதல்ல என்பது காந்திஜியின் உறுதியாகும். எனவே, 'பாஸிவ் ரிஸிஸ்டன்ஸ்' பலவீனர்களுடைய இயக்கம் என்று கருதப்பட்டபடியால், தம் இயக்கத்தின் பெயரை உடனே மாற்றிவிட வேண்டும் என்று நிர்மானித்தார். புதிய பெயர் கண்டுபிடித்துச் சொல்கிறவர்களுக்கு ஒரு சிறு பரிசு வழங்கப்படும் என்று "இண்டியன் ஒபீனியன்" பத்திரிகையில் விளம்பரம் செய்தார். இந்த அதிசயமான பரிசுப் போட்டியில் கலந்து கொண்டவர்களில் ஒருவர் ஸ்ரீ மகன்லால் காந்தி. இவர் 'சத்காரியத்தில் உறுதி' என்னும் பொருள்படும் 'ஸதாக்ரஹ' என்னும் பெயரைக் குறிப்பிட்டார். எல்லாப் பெயர்களிலும் இது காந்திஜிக்குப் பிடித்திருந்தது. ஆனால் பூரண திருப்தி அளிக்கவில்லை. மேலும் யோசனை செய்து 'சதாக்கிரஹம்' என்னும் பெயரைச் 'ஸத்யாக்ரஹ' என்று மாற்றினார். சத்தியம் என்பதில் அன்பும் அஹிம்சையும் அடங்கியுள்ளன என்பது காந்திஜியின் நம்பிக்கை. எனவே காந்திமகான் உலகத்துக்குக் கண்டு பிடித்துக் கொடுத்த புதிய போர்முறைக்குச் 'ஸத்யாக்ரஹம்' என்னும் பெயரே நிலைபெற்று விளங்குகிறது.



கண்ணான தாத்தா

பாக்கியசங்கர்

"காந்தித் தாத்தா கண்ணான தாத்தா
கற்றுக் கொடுத்தார் கண்ணியம் சத்தியம்
ஊட்டிக் கொடுத்தார் உள்ளத்து அன்பு
சத்தியாக்கிரஹம் சாத்விக வீரம்
காட்டிக் கொடுத்தார் கதரின் அழகை
ஆடுவார் எம்முடன் பாடுவார் எம்முடன்
ஈச்வரன் அல்லா எல்லாம் நீ
எமக்கு நன்மதி தருவாய் நீ
ரகுபதி ராகவ ராஜா ராம்
பதித பாவன சீதா ராம்!"

என்று தாரா அன்று பாடிக் கொண்டிருந்தாள். அவளுக்கு எதிரே 'ஜில்லி' குந்தியிட்டுக் கொண்டு உட்கார்ந்து தன் எஜமானியைக் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தது. அடிக்கடி அது காதை நிமிர்த்தி அவள் பாடும் பாட்டைக் கேட்பதும், "உம், முன்னங் கால்களைத் தூக்கிப் பாட்டுக்குச் சரியாய்த் தலையை அசைத்துத் தாளம் போடு!" என்று சொன்னால், 'குர்ர் .... கர்ர்' என்பதுமாக இருந்தது.

பத்தாவது தடவையாகத் தாரா மேற்படி பாட்டைப் பாடும்போது, 'வள்' என்று ஒரு முறை குரைத்து விட்டு, ஜில்லி வீட்டுக்குப் பின்புறமிருந்த தோட்டத்தை நோக்கி விரைந்து சென்றது. அங்கிருந்த ஒரு புதருக்குள் பாய்ந்து அது வெகு வேகமாகப் பூமியைக் கிளறிற்று. அடுத்த நிமிஷம் ஏதோ ஒரு வஸ்து பளபளவென்று கொஞ்சம் தெரிந்தது. உடனே ஜில்லி 'வள்' என்று குரைத்துவிட்டுத் தாராவிடம் வந்து அவள் பாவாடையைப் பற்றி இழுத்தது.

"நான் சொன்னபடி நீ கேட்கவில்லை. நானும் நீ கூப்பிடும் இடத்துக்கு வரமாட்டேன், போ!" என்று கடிந்து கொண்டாள் தாரா.

ஜில்லி விடுவதாக இல்லை. அது அடிக்கடி 'வள், வள்' என்று குரைப்பதும் தாராவின் பாவாடையைப் பிடித்து இழுப்பதுமாக இருந்தது. தொந்தரவைப் பொறுக்க முடியாமல் தாரா, ஜில்லியோடு சென்றாள். அவள் ஒரு கஜ தூரம்

நகர்ந்ததுதான் தாமதம்; ஜில்லி பாய்ந்து சென்று மறுபடியும் புதரின் அடியிலிருந்த பூமியைக் கிளறத் தொடங்கியது.

புதருக்கு அருகே வந்து சேர்ந்த தாரா, அங்கு ஏதோ ஒரு வஸ்து பளபளவென்று இருப்பதைக் கண்டாள். உடனே அவளும் பரபரப்புடன் ஜில்லியுடன் சேர்ந்து மண்ணைக் கிளறினாள். என்ன ஆச்சரியம்! அங்கிருந்தது காந்தித் தாத்தாவின் சிலை! அண்ணா 1942-ம் வருஷம் ஜெயிலுக்குப் போனபோது, "நம் பிரிராஜிதத்தைப் பத்தரமாக வைத்திருங்கள்!" என்று சொல்லிக் கொடுத்துவிட்டுப் போன சிலை அது. நடுவில் வீடு மாற்றிய குழப்பத்தில் காணாமற் போயிருந்தது. இன்று ஜில்லியின் உதவியால் அந்த அருமையான சிலை கிடைத்துவிட்டது!

தாரா அப்படியே மண்ணோடு சேர்த்து அந்தச் சிலையைக் கட்டிக் கொண்டு, "அம்மா, காந்தித் தாத்தா!—அப்பா, காந்தித் தாத்தா!" என்று கத்தினாள்.

"காந்தித் தாத்தா சிலையா?"

"அகப்பட்டு விட்டதா?"

"எங்கே யிருந்து எடுத்தாய்?"

"எப்படித் தெரிந்தது?" என்று அம்மாவும் அப்பாவும் மாறி மாறித் தாராவைப் பல கேள்விகள் கேட்டார்கள்.

தாரா, ஜில்லிக்குத் தான் 'காந்தித் தாத்தா பாட்டு' சொல்லிக் கொடுக்க முயன்றதையும், அது சிலையைக் கண்டு பிடித்துக் கொடுத்த விதத்தையும் சொன்னாள். எல்லோரும் பச்சைக் குழந்தைகள்போல் காந்தித் தாத்தா சிலையை "எனக்கு, உனக்கு!" என்று பிடுங்கினார்கள்.

தாரா சிலையை ஒரு பெரிய மேஜைமேல் வைத்துவிட்டு, "காந்தித் தாத்தா, கண்ணான தாத்தா!" என்று பாடிக் கொண்டே அபிநயம் பிடித்து ஆடினாள். எல்லோரும் ஆனந்தமாய்க் கேட்டுக் கொண்டும் பார்த்துக் கொண்டும் இருந்தார்கள்.



ஜில்லி, தன் காதுகளைத் தொங்க விட்டுக் கொண்டு பெருமையுடன் எல்லோரையும் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தது!



ஊர்க்கோடியில் ஏரி. அதில் இன்னும் நீர் வடியவில்லை, வைகாசி மாதமாக இருந்துங்கூட. அதனால் மூன்றும் போகம் பயிரிட முடிந்தது. அது சித்தூர் ஜில்லாவைச் சேர்ந்த ஒரு கிராமம். குடியானவர்களில் பெரும்பாலோர் செட்டிமார். எப்போதோ நவாபு காலத்தில் முகம்மதியர்களான இரண்டு மூன்று குடும்பத்தாரும் அங்கே இருந்தார்கள். இவர்களிடமிருந்து காணிக்கை வசூலிக்க வருஷத்திற்கு ஒரு முறை கிழப் பக்கிரி ஒருவன் அங்கு வந்து போவான். மற்றச் சமயங்களில் இந்த முஸ்லிம்கள் இந்துக்களைப்போலவே அரை குறைத் தெலுங்கும் தமிழும்பேசிக்கொண்டு வயல் வெளியில் வேலை செய்வார்கள் — அவர்களுடைய பெண்களுங் கூடத்தான்!

ஷேக் மீரான் இந்த வகுப்பைச் சேர்ந்தவன். வயது இருபத்தைந்து இருக்கும். நல்ல தேகக்கட்டு. அந்த ஊர் பார்வேட்டு ஜமீனைச் சேர்ந்தது. குத்தகைச் சீட்டு எழுதிக் கொடுத்து சில நிலங்களைப் பயிரிட்டு வந்தான் மீரான். இரண்டு வேளையும் தவறாமல் கழனியைப் போய்ப் பார்த்து வருவான். இரவில் சில சமயம் நீர் இறைத்துவிட்டு வர நேரம் ஆகிவிடும். அப்போதெல்லாம் அவன் கிழத்தாயும் இள மனைவியும் கவலையுடன் காத்திருப்பார்கள். புருஷன் ஏற்றச் சாலுடன் களைப்போடு வீட்டில் நுழையும்போது அமீனா அதை வாங்கிப் பத்திரமாக எடுத்து வைப்பாள். வாய்க்கு ருசியாக உணவு பரிமாறி அவன் களைப்பை நீக்குவாள். கிழ மாமியாருக்குப் பணிவிடை செய்வதிலும் யாதொரு குறையும் இல்லை. சில நாட்கள் இரவுகளில் ஷேக் மீரானுக்குக் குஷி கிளம்பி விடும். தொண்டை நன்றாக இராவிட்டாலும் ஒரு பழைய கஞ்சிராவை எடுத்துத் தட்டிக்கொண்டே அபஸ்வரமாகப் பாட ஆரம்பித்துவிடுவான்.

அன்று நிலவு பால் போல் பொங்கி வழிந்து கொண்டிருந்தது. இயற்கையன்னை தன் முழு எழிலுடன் திகழ்ந்தாள். விரைவில் ஆகாரத்தை முடித்துக் கொண்டு ஷேக்மீரான் முற்றத்தில் வந்து அமர்ந்தான். கஞ்சிரா சகிதம் இரண்டொரு தெம்மாங்கு பாடியதும், அந்த நிலவொளி எழுப்பிய மாயையினாலோ என்னவோ, தன் நண்பன் நாகரத்தினத்தின் நினைவு அவனுக்கு வந்துவிட்டது. அவன் கற்றுக் கொடுத்த பாட்டு ஒன்றைப் பாடலானான் :

"இனிய பொழில்கள், நெடிய வயல்கள்
எண்ணரும் பெரு நாடு
கனியும் கிழங்கும் தானியங்களும்
கணக்கின்றித் தரும் நாடு .....!"

இப்படி ஆரம்பித்தவன் சட்டென்று அதை நிறுத்திவிட்டு ஏதோ சிந்தனையில் ஆழ்ந்தான். அவன் கண்கள் கலங்கின. அவன் அமீனா பக்கம் திரும்பி, "நாகரத்தின அண்ணன் என்ன பாடு படுதோ?" என்று சொல்லிக் கொண்டான்.

ஏது சோஷியலிஸம்?

●

மனிதனுடைய பல அங்கங்களில் தலையும் ஒன்று. தலை எல்லா அங்கங்களுக்கும் மேலே இருப்பதால் மட்டும் அது உயர்ந்ததாகி விடாது. அதே போல, பாதங்கள் பூமியைத் தொட்டுக் கொண்டிருப்பதால் அவை தாழ்ந்தனவாகி விடாது. உடம்பில் உள்ள அங்கங்கள் ஒவ்வொன்றும் எப்படி உயர்வு தாழ்வு என்ற பேதமற்று விளங்குகின்றனவோ, அதைப்போல சமுதாயத்தில் உள்ள அனைவரும் சரிநிகர் சமானமாக இருக்க வேண்டும். இதுதான் சோஷியலிஸம். —காந்திஜி.

அவன் அந்தப் பெயரைக் கூட இது வரை கேட்டதில்லை. ஷேக்மீரான் கனவிலிருந்து விழித்தவன் போல், "உனக்கு எப்படித் தெரியும்? — நானும் நாகரத்தினமும் இதே ஊரிலே திண்ணைப் பள்ளிக்கூடத்திலே ஒண்ணாப் படிச்சோம், அமீனா! எனக்குப் படிப்பிலே மூளை ஓடவில்லே. ஆனால் நாகரத்தின அண்ணன் — நம்ம ஊர்க் கணக்குப் பிள்ளை ஐயா மகன் — நல்ல புத்திசாலி. அப்புறம் பெரிய பள்ளிக்கூடம் போச்சு. அப்பாலே காலேஜிலே கூடச் சேர்ந்து பி. ஏ., தேறிடுச்சு. அப்படிப்பட்ட சிமான் பின்னே என்ன பண்ணிச்சின்னு கேக்கிறயா? காந்தி மவராசா சொன்னாருன்னு இந்த ஊராருக்காக எவ்வளவு உழைச்சது, தெரியுமா?" என்று சொல்லிப் பெருமூச்சு விட்டான்.

அமீனா அவன் சொல்வதை ஆவலுடன் கேட்டு வந்தான். மீரான் மீண்டும், "அதை நினைச்சா இப்போகூட அழுகை வருது. இப்போ பாடினேனே, அந்தப் பாட்டோடு இன்னொரு பாட்டும் சொல்லிக் கொடுத்துச்சி, நாகரத்தின அண்ணன்......இரு, இரு......ஆம், ஞாபகம் வருது!

"வந்தே மாதரம் என்போம்—எங்கள்
மாநிலத் தாயை வணங்குது மென்போம்"

ஆகா! நாகரத்தினம் எப்போ பார்த்தாலும் நிலம், நீர், மரம், செடி எல்லாம் நம்மைப் பெத்த தாயாருக்குச் சமானம் இன்னு சொல்லும்! நமக்காக அது இப்போ ஜெயிலிலே போய்ச் செக்குக்கூட இழுக்குதாம், பாவம்!" என்று தொண்டை அடைக்கச் சொன்னான்.

அமீனா திடுக்கிட்டு, "அப்படிப்பட்டவரு ஜெயிலுக்குப் போவானேன்?" என்று கேட்டான்.

ஷேக் மீரான், "அதுதானே அதிசயம்! நாம்ப உழுது பயிரிட்டுக் கஷ்டப்படுறதைப் பார்த்துத் தானும் ஒத்தாசை பண்ணிச்சு. அப்பாலே 'உப்பு எல்லாருக்கும் சொந்தம். யார் வேணுமானாலும் அதைக் காய்ச்சலாம்; அதுக்குக்கூட நமக்கு உரிமை இல்லையா?' என்று தன் நிலத்திலேயே உப்பு மண்ணைக் கரைச்சு உப்புக் காய்ச்சி எங்களுக்கெல்லாம் கொடுக்க வந்திச்சு. உடனே போலீஸ் புலிங்க வந்துட்டுதுங்களே பாக்கணும்! நான் புளியந்தோப்பண்டை நின்னுக்கிட்டுப் பார்த்தேன், அண்ணனை அவங்க பிடிச்சுக்கிட்டுப் போறதை! எனக்கு இருந்த ஆத்திரத்திலே அப்படியே அவங்க மேலே பாய்ஞ்சிடணுமின்னு தோணிச்சு! — ஆனால் துணிச்சல் வரவில்லே. அண்ணனை அவங்க அடிச்சுப் பிடிச்சுத் தள்ளிக்கிட்டே போகப் போக அது சிரிச்ச முகத்தோடேயே இருந்தது. அப்பாலே ஒரு வருசம் கடுங் காவல் திட்டிட்டாங்களாம், பாவம்! எப்படித்தான் தாங்குமோ, அதன் உடம்பு!" என்று அனுதாபப்பட்டான்.

அமீனா, "அவங்க மனுசங்க யாரும் இங்கே இல்லையா?" என்று விசாரித்தான்.

"அதன் தாயார் மாணிக்கம்மா இருக்காங்க. நாளைக்கு வாயா, அங்கே போயிட்டு வரலாம்?"

"ஊம்" என்று தன் சம்மதத்தைத் தெரிவித்தான் அமீனா.

2

மறுநாள் மாலை அவர்கள் இருவரும் நாகரத்தினத்தின் தாயைக் காணச் சென்றார்கள். மாணிக்கம்மாள் இன்முகத்துடனேயே அவர்களை வரவேற்றாள். அமீனாவைத் தன் வீட்டுக்கு மீரான் அழைத்து வருவான் என்று அவளும் எதிர்பார்த்துக் கொண்டுதான் இருந்தாள். அதனால் வந்ததுமே புரிந்து கொண்டு க்ஷேம லாபம் விசாரித்தாள். பிறகு சிறிதுநேரம் நாகரத்தினத்தைப் பற்றி அவர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். அவனிடமிருந்து கடிதம் வருவதாகவும், யாதொரு பயமுமில்லை என்று அவன் எழுதியிருப்பதாகவும் தெரிவித்தாள் மாணிக்கம்மாள்.

ஷேக் மீரானும் அமீனாவும் பொழுது சாய்வதைக் கண்டு வீட்டுக்குப் புறப்பட எழுந்தார்கள். ஆனால் மாணிக்கம்மாள் அவர்களை நிறுத்தி, "பலகாரம் சாப்பிட்டு

விட்டுத்தான் போகணும்; இல்லாவிட்டால் விட மாட்டேன். சிறு வயதிலே நீயும் காகரத்தினமும் பள்ளிக்கூடத்திலேயிருந்து திரும்பி வரப்போ உங்க ரெண்டு பேருக்கும் முறுக்கும் இடியப்பமும் கொடுத்ததெல்லாம் ஞாபகம் இருக்குதா?'' என்றாள் சிரித்துக் கொண்டே.

ஷேக் மீரான் சிரித்துக் கொண்டே, ''எப்படி அம்மா அதை யெல்லாம் மறந்து விட முடியும்?'' என்றான்.

உள்ளே சென்று அவர்களுக்கு இரண்டு இலையில் தோசையும் சட்டினியும் கொண்டு வந்து கொடுத்தாள் மாணிக்கம்மாள். ஷேக் மீரானும் அமீனாவும் அதை உண்ணும்போது தன் மகன் சாப்பிடுவது போலவே ஒரு திருப்தி ஏற்பட்டது அவளுக்கு.

வீடு திரும்பும்போது நன்றாக இருட்டி விட்டது. இன்னும் நிலவு எழவில்லை. இருந்தாலும் ஷேக்மீரானுக்கு உற்சாகம் கட்டுக் கடங்காமல் கிளம்பியது. காகரத்தினத்தின் மேல் உள்ள அன்பினாலோ, அல்லது 'இனிய நீர்ப்பெருக்கும் இன் கனி வளமும் மிக்க' அவ்வூரின் தன்மையினாலோ 'எங்கள் மாநிலத் தாயை வணங்குது மென்போம்' என்ற பாட்டு அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது. தனக்கு இயல்பான கட்டைக் குரலில் அதைப் பாடிக் கொண்டே அமீனாவுடன் ரஸ்தாவில் சென்றான்.



13

கேழ்வரகுக் கதிர்கள் கொத்துக் கொத்தாகச் செழித்துத் தழைத்திருந்தன. அச்



தக் காட்சியை எவ்வளவு நேரம் பார்த்தாலும் சலிப்புத் தட்டவில்லை மீரானுக்கு. மண்ணின் மணத்துடன் கதிர்களின் வாசனை கலந்து வீசும்போது அவன் உள்ளத்தில் ஆனந்தம் குடி கொண்டது. அறுவடை ஆக இன்னும் சில தினங்களே இருந்தன.

அன்று பகல் அவன் வீடு திரும்பிய போது அமீனா ஏதோ சொல்லத் தயங்கித் தயங்கி நிற்பதைக் கண்டு, "என்ன சேதி?" என்று விசாரித்தான்.

"யாரோ ஜமீன் காரியஸ்தராம்; வந்திருந்தார். போன வருசம் குத்தகை பாக்கியைக் கொடுக்க வில்லையாமே, 'அதைக் கீழே வைச்சாத்தான் ஆச்சு' என்றார். 'அவர் இல்லீங்களே!' என்றேம். 'அடுத்த வாரம் வருகிறேம், அப்போ கட்டாயம் கொடுத்தாகணும்' என்றார். இல்லாட்டி கேழ்வரகு அறுவடை பண்ண விடமாட்டாராம்!"

இப்படி அமீனா சொன்னதும் ஷேக் மீரானுக்கு இருந்த உற்சாக மெல்லாம் பறந்து விட்டது. அவன் முகம் சுண்டியது. கேழ்வரகு அறுவடையானதும் அதை விற்றுப் பழம் பாக்கியை அடைத்து விடலாம் என்று நம்பியிருந்தான் அவன்.

ஆகவே, அடுத்த வாரம் ஜமீன் காரியஸ்தன் வந்தபோது ஷேக் மீரான் அவனை எவ்வளவோ கெஞ்சிக் கேட்டுக் கொண்டான். அவன் கேட்கவில்லை. ஷேக் மீரானுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. "ஐயா, சும்மா வாயை மூடிக்கிட்டுப் போ. மாலை வேணுமானால் ஜப்தி பண்ணிக்கோ; கண்டபடி பேசாதே, ஜாக்கிரதை!" என்று உறுமினான்.

"உம், அப்படியா? உனக்குச் சரியான பாடம் கற்பிக்கிறேன்!" என்று முணு முணுத்துக்கொண்டே காரியஸ்தன் அவ்விடத்தை விட்டுச் சென்றான்.

மறுநாள் அறுவடை செய்வது என்று தீர்மானித்து ஷேக் மீரான் கழனிக்குப் போய்ப் பார்த்தபோது, தான் ஏற்பாடு செய்திருந்த அதே ஆட்கள், காரியஸ்தன் மேற்பார்வையில் கதிர்களை அறுவடை பண்ணிக் கொண்டிருந்ததைக் கண்டான். அவன் வயிறு பற்றி எரிந்தது. அன்று முழுதும் அவனுக்குச் சாப்பிடக்கூடப் பிடிக்க வில்லை. ஏரிக்கரைப் பக்கம் அலைந்து கொண்டிருந்தான்.

பொழுது சாய்ந்து வெளிச்சம் மங்கி வந்தது. அங்கிருந்த பெரிய வேப்ப மரத் தடியில் ஷேக் மீரான் முழங்கால்களில் முகத்தை மறைத்தபடி எத்தனை நாழிகை உட்கார்ந்திருந்தானோ தெரியாது. யாரோ தன்னைத் தொட்ட போதுதான் அவனுக்கு உலக நினைவு வந்தது. நிமிர்ந்து பார்த்தான். காட்டுப்புறத்தானுக்கு இயல்பான கூரிய கண்களால், தொட்டவன் யாரென்று கண்டு கொண்டான். உடனே மீரான் மூளையில் ஒரு புதிய யோசனை உதித்தது. அவன், "கங்கா, எனக்கு ஒரு ஒத்தாசை பண்ண முடியுமா?" என்று கேட்டான் வந்தவனை நோக்கி.

அந்தப் பக்கத்திலேயே பயிரைப் பிசைந்து இரவோடு இரவாக எடுத்துக் கொண்டு போய்விடுவதில் கங்கன் பெயர் போனவன். இதுவரை அவன் சாமர்த்தியமாகத் தன் தொழிலை நடத்தி வந்திருக்கிறான். சென்ற வருஷம் மட்டும் எப்படியோ மீரான் கையில் சிக்கிக் கொண்டான். அப்போது அவன் மீரான் காலில் விழுந்து மன்றாடினான். மீரானும் அவனை விட்டுவிட்டான், 'தொலையட்டும்' என்று.

இப்போது பின்னையாண்டான் தானாகவே வழிக்கு வருவதைப் பார்த்துக் கங்கன் ஒரு கனைப்புக் கனைத்து, "உம், நம்ம தயவுகூட வேண்டியிருக்குது, பார்த்தியா, தம்பி!" என்று மார்பைத் தட்டிக் கொண்டான்.

* * *

இரவு மணி பன்னிரண்டு இருக்கும். ஜமீன் காரியஸ்தனும் அவனைச் சேர்ந்த ஆட்களும் கேழ்வரகுத் தட்டுகளைப் போட்டிருக்கும் களத்தருகில் சற்றுக் கண்ணயர்ந்து விட்டனர். ஹரிக்கேன் லாந்தர் ஒன்று மட்டும் எரிந்து கொண்டிருந்தது.

'டொக்'கென்று எங்கிருந்தோ ஒரு கல் வந்து விழுந்தது விளக்கின் மேல். உடனே விளக்கின் கண்ணாடி உடைந்து விளக்கும் அணைந்து விட்டது. அந்தச் சத்தம் கேட்டதும், காரியஸ்தன் எழுந்து டார்ச்சு விளக்கை எடுத்து வீசினான். அதன் ஒளியில் ஒருவன் ஓடுவது தெரிந்தது. மற்றவன் அதே இடத்தில் திகைத்து நின்றான். "அடேய், பிடிடா அவனை!—அவன் ஷேக் மீரான்; திருட்டுப் பயல்!" என்று காரியஸ்தன் கத்தும்போதே மீரான் புலி போல் அவன் மேல் பாய்ந்தான். தன் இடுப்பிலிருந்த பேனாக் கத்தியைப் பிரித்துக் காரியஸ்தனின் வயிற்றிலும் இடுப்பிலும் மாறி மாறிக் குத்தி விட்டான், ஆவேசம் வந்தவன் போல். அதற்குள் மற்ற ஆட்கள்

மூஞ்சி முகம் பாராமல் மீரானைத் தாக்கவே அவன் மூர்ச்சையாகிக் கீழே விழுந்தான்.

பிரக்ஞை வந்தபோது மீரான், தான் ஆஸ்பத்திரியில் கிடப்பதை உணர்ந்தான். கண்களிரண்டிலும் நல்ல காயம்; கட்டுக் கட்டியிருந்தது.

சாரியஸ்தன் சாகாவிட்டாலும் அவன் உடம்பு தேறப் பல மாதங்களாயின. ஆனாலும் அவனைக் 'கொல்ல முயன்ற குற்றத்'திற்காக மீரானுக்கு மூன்று வருஷம் கடுங்காவல் தண்டனை கிடைத்தது.

4

சிறையில் எந்தச் சிரமத்தையும் பொருட்படுத்தவில்லை. மீரான்—'சாகரத்தினை அண்ணனை விடவா நான் ஏசத்தி?' என்று தன்னை ஆசுவாசப்படுத்திக் கொள்வான். ஆனால் ஒரே ஒரு குறை; அவன் கண் பார்வை போய் விட்டது. அதனால் சிறைக் காவலாட்கள் அவன் மேல் சற்றுத் தயை காட்டினார்கள். அவனும் அடக்க ஒடுக்கமாகவே நடந்து கொண்டான். முன்னைவிடப் பன்மடங்கு 'மாநிலத் தா'யின் மீது பக்தி செலுத்தலானான். அவனது நன்னடத்தையைக் கண்டு அதிகாரிகள் மூன்றாம் வருஷ ஆரம்பத்திலேயே அவனை விடுதலை செய்து விடத் தீர்மானித்தார்கள்.

மீரானின் வீட்டாருக்கு இதைப் பற்றித் தகவல் கிடைத்தபோது அவன் தாய் இவ்வுலகத்தில் இல்லை. தாயின் மரணச் செய்தியை அறிந்து மகன் துடித்தான்.

வேதக் மீரான் விடுதலையாகும் தினம். சாகரத்தினம் சிறை வாயிலில் தன் இளவயதுத் தோழன் வருகைக்காகக் காத்திருந்தான், கதர் மாலையுடன். மீரான் பழைய உடைகளுடன் வெளியே வந்தான்.

சாகரத்தினம் அவனை நெருங்கி மாலை யிட்டதும், "மீரான்! என்னை அடையாளம் தெரிகிறதா?" என்றான்.

மீரானின் மங்கிய கண்களிலும் எங்கிருந்தோ ஓர் ஒளி வீசியது. உணர்ச்சி பொங்க, "தெரியாமல் என்ன? அண்ணே!- வந்தே மாதரம்" என்று கூவினான். நண்பர் இருவரும் கண்ணீர் வெள்ளம் பெருக்கும் காட்சியை அங்கிருந்த சிலர் பார்த்தனர். சாகரத்தினத்தை நெருங்கி அவர்களில் ஒருவன், "ஏங்க, அவர்கூடக் காங்கிரஸ் காரர்தானா?" என்று கேட்டான்.

சாகரத்தினம் தொண்டை அடைக்க, "ஆம், இவர் சிறந்த தேசபக்தர். தாய் நாட்டு மண்ணின்மேல் நம்மை யெல்லாம் விட அன்பு கொண்டவர். சொல்லுங்கள் 'வந்தே மாதரம்' என்று!" என்றான்.

'வந்தேமாதர' கோஷம் வானைப் பிளந்தது. கண்ணைத் துடைத்துக் கொண்டு மீரானை உற்று நோக்கியபோதுதான் உண்மை ஒருவாறு தெரிந்தது சாகரத்தினத்துக்கு. அவன் திடுக்கிட்டு, "மீரான்! ஏன் அப்படிப் பார்க்கிறாய்?" என்று கேட்டான்.

மீரான் ஒரு விதமாகச் சிரித்து, "இந்தக் கண் போனால் என்ன, அண்ணே! இப்போ என் மனக் கண்ணால் இந்தப் பிரபஞ்சம் முழுவதையும் பார்க்கிறேனே! அதை விட வேறு என்ன வேண்டும்?" என்றான்.

*　　*　　*

மீரானுடைய நிலைமையைப் பற்றி முன்னதாகவே ஓர் ஆள் மூலம் வீட்டுக்குத் தெரிவித்து விட்டு, அவனை மாட்டு வண்டியில் ஏற்றி அழைத்துக்கொண்டு ஈயிலேறி ஊர் வந்து சேர்ந்தான் சாகரத்தினம். கணவன் வரவை இத்தனை நாட்களுக்குப் பின் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த அமீனாவுக்கு அவன் கண் பார்வை இழந்த செய்தி பெருத்த அதிர்ச்சியாகவே இருந்தது. ஆனால் எப்படியோ சமாளித்துக் கொண்டு அவனை வரவேற்றாள். அவர்கள் வீடு-வாசல் கடன் பாக்கிக்காக ஜப்தி செய்யப்பட்டு ஏலத்திற்கு வந்தபோது, நல்ல வேளையாக சாகரத்தினம் அங்கு இருக்கவே அவை மிஞ்சின. அவனிடமிருந்த மதிப்பு காரணமாக யாரும் ஏலத்தில் போட்டியிடவில்லை.

அன்று அவன் வீட்டில்தான் மீரானுக்கு விருந்து. சாப்பிட்டானதும் நிலவு எழுந்தது. வேதக் மீரான் கஞ்சிராவை எடுத்துவரச் சொல்லி அதைத் தட்டிக் கொண்டே பாடத் தொடங்கினான் :

"வந்தே மாதரம் என்போம்—எங்கள்
மாநிலத் தாயை வணங்குது மென்போம்!"

மனிதனின் அகம்பாவம்

கடவுள் தன்னைப் போல இருக்க வேண்டுமென்றுதான் மனிதனைப் படைத்தார். ஆனால், மனிதனே கடவுளைத் தன்னைப் போல என்று நினைத்துக்கொண்டு விட்டான். இந்த அகம்பாவத்தினால் மனித சமூகமே கஷ்டத்தில் உழலுகிறது.

—காந்தி மகான் திருவாக்கு 24-8-47.

டயபெப்ஸின்

ஆகாரம் சரிவர ஜீரணமாக டயஸ்டாஸ், பெப்ஸின் என்னும் இருவகைப் பொருள்கள் அத்யாவசியமானவை. இவைகள் இரண்டும் உயர்ந்த ரசாயன முறையில் சேர்ந்தது தான் டயபெப்ஸின். ஆகாரத்துக்குப் பின் ஒரு டீஸ்பூன் டயபெப்ஸின் உட்கொண்டால் ஜீரணச் செயல் தக்ஷணமே ஆரம்பித்து, பாக்கி ஜீரண வேலை வயிற்றுக்கு மிக எளிதாகிறது. உங்கள் ஆகாரத்தின் முழுப் போஷணையும் அடைய இதுவே சிறந்த மார்க்கம்.



யூனியன் டிரக், கல்கத்தா

ஏஜண்டுகள்: அப்பா அண்ட் கோ., மதராஸ்
மற்றும் எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்

UNION DRUG. CALCUTTA

எவ்வித சரும நோய்க்கும்

CIBOL

சைபால்

எந்த சரும நோயையும், சீக்கிரமாக குணப்படுத்த வல்லது "சைபால்". கொப்புளங்கள், சொறி, சிரங்கு, படை, பரு, கடி, கால் வெடிப்பு, புண்களுக்கு ஆச்சரியமாக குணமளிக்கும் ஔஷதம்.



தயாரிப்பவர்கள்:


சௌத் இந்தியன் மான்யுபாக்சரிங் கம்பெனி, மதுரை.

ஏஜண்டுகள்: மெஸர்ஸ், சீதாராம ஜெனரல் ஸ்டோர்ஸ் ஏஜென்ஸீஸ், பெஜவாடா; ஸ்ரீ கிருஷ்ண மெடிகல் ஸ்டோர்ஸ், பெங்களூர் ஸிடி; மெஸர்ஸ், ராஜன் டிரக் ஸ்டோர்ஸ், மதராஸ்


1½ அணாவில்
உங்கள்
வலியிலிருந்தும்
ஜலதோஷத்திலிருந்தும்
சுகம்பெறலாம்
ASPRO
'ஆஸ்ப்ரோவும்'
இயற்கையும்
உங்களைக்
கைவிடமாட்டா
3 வில்லைகள் 1½ அணா
30 வில்லைகள் 15 அணா
உங்களுக்கு
இதைப் படிக்க
முடிகிறதல்லவா-
படிக்க முடியாத
வர்களுக்கு
'ஆஸ்ப்ரோ
வைப்பற்றி எடுத்
துச் சொல்லி
உதவிபுரியுங்கள்.
அனுபானம்:
1-3 வில்லைகள்
30 TABLETS As. 15
ASPRO
நிர்பயம் - நிச்சயம் - நற்பலன்

கட்டழகி தவமணி தேவி தன் மேனியை மிருதுவாகவும் மென்மையாகவும் வைத்திருக்க லக்ஸ் டாய்லட் சோப்பைத்தான் நம்புகிறார்





அதிரூபவதியான இந்த ஸினிமா நட்சத்திரத்தின் அழகு படுத்திக்கொள்ளும் முறை லக்ஸ் டாய்லட் சோப் தான். சருமத்தை சுத்தம் செய்து மிருதுவாக்க இச்சோப்பின் வெண்ணிறம் கொண்ட சுகந்த நுரை போல் வேறெதுவுமில்லை என்பது அவருக்குத் தெரியும். மென்மைவாய்ந்த பூரணப் பொலிவுள்ள மேனியை விரும்பும் எல்லோரையும் அவர் லக்ஸ் டாய்லட் சோப் உபயோகித்து தவறாமல் சுத்தம் செய்து கொள்ளும்படி உபதேசிக்கிறார்.

லக்ஸ் டாய்லட் சோப்

சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்!

LTS. 174-23 TM



ஜுரத்தில்

உஷ்ணம் 102 டிக்ரிக்கு மேலே போனால், உங்கள் கூந்தல் உதிர்வது நிச்சயம். அம்மையானாலும் சரி, 'டைபாயிட்' 'மலேரியா' 'இன்ப்ளுயன்ஸா' முதலிய விஷ ஜுரங்களானாலும் சரி, இது காரணமாகவே மயிர் அபரிமிதமாகக் கொட்டுகிறது. ஜுர சமயங்களில் உஷ்ணம் அதிகமாக ஏறுவிடினும், மயிர் உதிர்வது மட்டும் தவறுவதே யில்லை. அப்படி உதிரும்போது தக்க சிகிச்சை செய்து தடுக்காமலிருந்து விட்டால், மயிர் விடாமல் உதிர்ந்து தலையும் வழுக்கையாய் விடும்.

வெள்ளம் வந்த பிறகு அணையிடுவதேன்? மயிர் உதிர ஆரம்பிக்கு முன்னரே, கூந்தலைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள். ஜுரத்துக்குப் பிறகு கேசம் அரை பங்கு கால் பங்காகிக் குறைந்து விட்டால், கேசவர்த்தினியைக் கொண்டு கேசத்தை விருத்தி செய்து பூர்ணமாக்கிக் கொள்ளுங்கள். கடைசியாக எல்லாப் பரிசைகளும் செய்தான பிறகு கேசவர்த்தினியே கூந்தலுக்குச் சிறந்தது என்று தெரியவந்தால், கேசவர்த்தினியை முதலிலேயே கைக்கொள்ளலாமே?

கேசவர்த்தினி

கூந்தலைப் பாதுகாப்பது, விருத்தி செய்வது, அழகு படுத்துவது

விலை அணா 14

(மேற் செலவு வேறு)

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

தயாரிப்பவர்

தென் இந்திய ரஸாயனசாலை

ஆர். எஸ். புரம் - கோயமுத்தூர்

"லங்கர் மார்க்"

வாசனை பாக்குத் தூள்



★

அசல்

பாதாம் எண்ணெய்

★

ரோஜாப்பூ

குல்கந்து

★

ரசிக்லால் & கோ.,

கோவிந்தப்ப நாயக்கன் தெரு

மதராஸ் - 1

No

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras

கல்கி



KALKI அக்டோபர் 2, 1948 4 அணா

தீபாவளிக்கு விசேஷ மலிவு விற்பனை

அலங்கார ஆடைகள்! ஆறாயிரம் ரகங்கள்!!

பட்டுச் சேலைகள் - 2000 டிஸைன்கள்

விலை ரூ. 15 முதல் 750 வரை

பெனாரஸ், பெங்களூர், கொள்ளேகாலம், ஆரணி, காஞ்சீபுரம் பட்டுச் சேலைகள், பெங்கால் சில்க் சேலைகள், மைசூர் கிரேப், ஜார்ஜெட், டிஷ்யூ சில்க் சேலைகள், கேவா, ஜங்ளா, டார்பாஸ், ஜரிகை சேலைகள் முதலியன. கண்கவர் கலர்களில் அழகிய முந்திகள், அற்புதமான பார்டர்களுடன், தீபாவளிக்கு ஸ்பெஷலாக 5 முதல் 10 கெஜங்களில், தயார் செய்து மலிந்த விலையில் ஏராளமாக கொண்டுவந்து குவித்துள்ளோம்.

நூல் சேலைகள் - 3000 டிஸைன்கள்

விலை ரூ. 5 முதல் 60 வரை

தீபாவளிக்காக கோயமுத்தூர், உறையூர், மதுரை, சேலம், ஜம்மலமடுகு, புல்லம்பேட், தென்காசி, காஞ்சிபுரம், ஆரணி, நூல் சேலைகள் 100 செ. 80 செ. 60 செ. நூல்களில் சாயத்துக்கு உத்திரவாதத்துடன், திறமைவாய்ந்த நெசவாளர்களால் ஸ்பெஷலாக 5 முதல் 10 கெஜங்களில் நெசவு செய்து கொண்டுவந்து குவித்துள்ளோம்.

பட்டு, நூல் வேஷ்டிகள், அங்கவஸ்திரங்கள் - 1000 டிஸைன்கள்

விலை ரூ 2 முதல் 100 வரை

வெண்பட்டு வேஷ்டிகள், பட்டு அங்கவஸ்திரங்கள், 100 செ. ஆதிலி, மதுரை, சேலம், நாராயணவரம், நகரி வேஷ்டிகள், அங்கவஸ்திரங்கள், டவல்கள் நவீன டிஸைன்களில் கொண்டு வந்து குவித்துள்ளோம்.

மில் ஜவுளிகள் - பல நூறு டிஸைன்கள்

கட்டாவ் வாயில்கள், சீட்டுகள், பின்லே வேஷ்டிகள், உயர்தர மல்கள் நவீன டிஸைன்களில் கோட்டிங், ஷர்டிங் டுவில்கள், டவல்கள் இன்னும் பல ரகங்கள். தீபாவளியை முன்னிட்டு எல்லா விலைகளும் குறைக்கப்பட்டிருக்கின்றன.

மலிந்த விலைகள் — கறார் விலை

கஸ்தூரிபாய் கம்பெனி

உயர்தர பட்டு நூல் ஜவுளி வியாபாரிகள்

மேல வீதி :: சிதம்பரம்

REGD. NO. M. 4392



கல்கத்தாவிற்கு விநியோகஸ்தர்: ஸ்ரீ S. N. ராய், 81 - நேதாஜி ரோடு
பம்பாய் ஆபீஸ்: 142, ஓல்டு மோடி ஸ்ட்ரீட், போர்ட்